
ஹெச்.ஏ.எல். க்ரெய்க்

உமர் முக்தார், தி மெஸேஜ் படங்களின் திரைக்கதை ஆசிரியர்

மெல்லினம்



# பிலால்

## ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு

பிலால்

# பிலால்

## ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு

ஹெச்.ஏ.எல். க்ரெய்க்

தமிழில்
அல்-அஸூமத்

மெல்லினம்™

Bilal • © H.A.L. Craig
• © Tamil Translation: A.J. Muhammad Zaneer
• Tamil Translation: Al-Azumath
• Revised First Indian Edition: May 2006, Reprint 2010
• Printed at Graphic Park , Chennai 5.

Published by Mellinam, A division of Paradigm Media Pvt. Ltd.,
2nd Floor, Royal Palace, 2/117, Armenian Street, Mannady,
Chennai 600 001. Tel: +91 (044) 2521 4740, 90032 80518
email: mellinambooks@rediffmail.com

ISBN: 81 902954 8 9

Price: Rs.60

## நூலாசிரியரைப் பற்றி...

ஹெச்.ஏ.எல்.க்ரெய்க் (ஹாரி க்ரெய்க்) 1921ஆம் ஆண்டு அயர்லாந்தி லுள்ள கவுண்டி கார்க் என்னும் இடத்தில் பிறந்தார். க்ரெய்க்கும் அவருடைய இரட்டைச் சகோதரர் டிக்கும் லிமரிக் என்ற இடத்தில் ஷானான் நதியின் அருகே குலோன்லாரா என்ற தங்களது தந்தையின் மடத்தில் வளர்ந்தனர். பிறகு அவர்கள் டூப்ளினிலுள்ள டிரினிடி கல்லூரியில் கல்வி பயின்றனர். க்ரெய்க், 1940-50களில் 'சீன் ஓ'ஃபாலின் (Sean O'Faolain)' உடன் சேர்ந்து செல்வாக்கு மிகுந்த இலக்கிய இதழான 'தி பெல்'லின் (The Bell) ஆசிரியரானார். அதன்பிறகு அவர் 1950களின் மத்தியில் லண்டனுக்குச் சென்றார். அங்கு அவர் எழுதிய ரேடியோ நாடகங்கள் பிபிசி'யால் தயாரிக்கப்பட்டு 'தி தேர்டு புரொக்ராமில்' (The Third programme) ஒளிபரப்பாயின; மேலும் அவர் தற்கால நிகழ்வு களை அலசும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். 'தி நியூ ஸ்டேட்ஸ்மேனில்' (The New Statesman) நாடக விமர்சகராக நீண்டகாலம் பணியாற்றினார். பிறகு 1968இல் ஹாரி தனது மனைவி பெக்கி மற்றும் மூன்று குழந்தைகளுடன் இத்தாலியிலுள்ள ரோமுக்குச் சென்றார்; அங்கு வெற்றிகரமான ஒரு திரைக்கதை ஆசிரியரானார். அவருடைய ஆரம்பகால திரைப்படங்கள் 'டினோ டி லாரண்டீஸ்'ஸால் (Dino de Laurentis) தயாரிக்கப்பட்டன; அவை பொதுவாக சர்வதேசத் தரத்தைப் பெற்றிருந்தன; எடுத்துக்காட்டாக, 'வாட்டர் லூ' (Water Loo) என்னும் போர் சினிமாவைச் சொல்லலாம். மேலும் இவர் 'ஆன்சியோ' (Anzio), 'ஃப்ரௌலின் டொக்டர்' (Fraulein Doktor) ஆகிய இரண்டு வரலாற்றுப் போர் படங்களுக்கும் திரைக்கதை ஆசிரியர். பின்னர் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் முஸ்தஃபா அக்காத்'தின் புகழ்பெற்ற 'தி மெஸேஜ் (The Message)', 'உமர் முக்தார் - லயன் ஆஃப் தி டெசர்ட்' (Omar Mukhtar - Lion of the Desert) ஆகிய திரைப்படங்களுக்கு திரைக்கதை ஆசிரியராகப் பணிபுரிந்த ஹெச்.ஏ.எல். க்ரெய்க் அக்டோபர் 1978இல் நுரையீரல் புற்றுநோய் காரணமாக ரோமில் காலமானார்.

# பொருளடக்கம்


அடிமையாய்... 9
மக்காவில் ஒரு புதுமை மனிதர் 11
எஜமானை எதிர்த்து... 16
மரணத்தின் வாயிலில்... 21
இறப்பும் உயிர்ப்பும் 25
மீண்டும் பிலால் விற்பனை 28
இறைத்தூதருடன்... 31
அபூபக்ருடன்... 36
இறைத்தூதரின் இளமைப் பருவம் 40
திருமணம் 44
தூதுத்துவம் 47
இறைச் செய்திகள் 50
மக்கத்து எதிர்ப்பு 52
பரிகாசத்தின் முடிவு 56
அபிஸீனியா நோக்கி... 60
ஹம்ஸாவும் உமரும் 69
துயர ஆண்டு 73
யத்ரிப் 78
மதீனா நோக்கி... 82
இறைத்தூதரின் புலப்பெயர்வு 84
ஒட்டகையின் தேர்வு 89
பள்ளிவாசல் 92
முதல் அழைப்பு 94
நீதி தருநராய் நபிகளார் 101
போர் முனைகளில்... 104
உஹத் 111
பொய்மை 116
அபூஸுப்யானின் சரண் 119
கஅபாவின் மீது... 122
பிரிவு 125
நினைவுச் சுழலில்... 131

## அடிமையாய்...

நான் ஓர் அடிமை. என் பெயர் பிலால். என் தாய் தந்தையரும் அடிமைகளே. பிறப்பிலேயே அடிமையான நான் எனது எஜமான் உமையா என்னைக் கொன்றுவிட முடிவெடுத்த நாள் வரை அடிமையாகவே இருந்தேன்.

ஒரு சுதந்திர மனிதனின் வாழ்வில் ஏற்படும் விபத்துகளைவிட அடிமையொருவனின் வாழ்வில் ஏற்படும் விபத்துகள் மிகக் குறைவு. எனினும் வீழ்ந்தால் வீழ்ந்ததுதான். அடிமைமீது வீழ்வதோ சாட்டையின் விளாசல். அடிமை-வெறும் தோல்!

டமஸ்கஸில் இப்போது வயது முதிர்ந்து, கிழவனாக வாழ்ந்து வரும் நான் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற அபாயங்களும் உள்ளன. உமையா போன்றோரின் கைகளால், அவனது தொல்லைகளால், மதுரசத்தின் காரணமாக அடிக்கடி மாறும் அவனது சபல எண்ணங்களால் விளையக்கூடிய அபாயங்களில் சில எனது வீட்டு வாசல் ரோஜாச் செடிகளின் முட்களினாலும் விளைகின்றன.

எதையும் அறிந்தவனல்ல அடிமை. அவன் எப்போதும் எதிர்பார்த்திருப்பவன். எஜமானின் குரலை ஒத்த வேறு குரல் ஏதும் அவனுக்கில்லை. எஜமான் அழைக்கும்போது அவனது குரலோசையிலிருந்து ஒளிந்துகொள்ள முடியாது. அவன் அழைக்கும் தொனிக்குள் அல்லது அவனது விழிக்குள் இல்லாது போனால் நீ ஒழிந்தாய். அவன் உன்னை வாங்கியுள்ளான், அதன் விலை-உனது எஞ்சியிருக்கும் வாழ்க்கை.

இறந்து போனவர்கள் குறித்துப் பண்பில்லாத வகையில் ஏளன வார்த்தைகள் பேசுவது என் வழக்கமல்ல, என்றாலும் ஒரு விஷயத்தை நான் கூறித்தானாக வேண்டும். மக்காவின் சந்தையில் உமையா என்னை வாங்கியபோது, தான் கொடுத்த விலைக்கும் கூடுதலாகவே அவன் பெற்றுக்கொண்டான். யாரேனும் ஒரு குதிரையை வாங்கும்போது அது எதிர்பாராத வகையில் எப்போதேனும் தன்னைக் கீழே வீழ்த்திக் கழுத்தை முறித்துவிடக் கூடாது என உறுதி செய்துகொள்ள வேண்டியது அவசியம். இருந்தாலும், என்றேனும் ஒருநாள் அது நடக்க வாய்ப்புண்டு. அவ்வாறு நடக்கும்போதுதான், தான் செய்த கொள்முதல் தகுந்ததல்ல என்பதை அவர் உணர்கிறார். இருந்துமென்ன? இறுதியாக நகைக்கும் மனிதன் யார் என்பதை இறைவனே தீர்மானிக்கிறான்.

கூற வந்த பொருளை விட்டுவிட்டு நான் வேறெங்கோ செல்கிறேன். தொடங்கு முன்னமேயே பாதை தவறிச் செல்ல என் முதுமைதான்

காரணமாக இருக்க வேண்டும். அடிமைகளின் இடையனாக மட்டுமே விளங்கிய உமையாவுக்கு, மீட்டி அசைபோடும் என் நினைவுகளில் பெரும் பங்குகள் ஏதும் அளித்தல் தகாது. உமையாவின் அடிமையாகிய பிலால், எவரும் வியப்புறும் உன்னதமான நாட்கள் குறித்து உங்களுக்குக் கூறுவேன். இருபத்து மூன்று ஆண்டுகள் நான் இருந்தேன். ஆம்! முஹம்மது(ஸல்) இறைத்தூதராய் இப்புவி மீது நடந்த இருபத்திமூன்று ஆண்டு காலம் நான் வாழ்ந்திருந்தேன். அவர் மொழிந்தவை நான் கேட்டேன்; அவர் செய்தவை நான் கண்டேன்.

# மக்காவில் ஒரு புதுமை மனிதர்

வழக்கம்போல அன்றைய நாளும் காலை வேளை, கஅபாவின் அருகில் ஏனைய வணிகருடன் அமர்ந்துகொள்ளவெனப் புறப்பட்டான் உமையா.

காலை வேளைகளை நான் எப்போதும் விருப்புடன் எதிர்பார்த் திருப்பேன். எஜமானர்தம் கட்டளைகளுக்காகக் காத்திருக்கும் செவி களை, விழிகளை ஓய்வெடுக்கவிட்டு, அவரை உற்று நோக்கியிருப்பதி லிருந்து ஒதுக்கி அடிமைத் தோழர்களுடன் குந்தியிருந்து இரகசியமாக வம்புகள் மொழிந்து நிற்கும் அவ்வேளைகள் இன்பம் பயப்பவை. அதனிலும் மேலாக நாம் நிழலை அனுபவிக்கலாம். மக்காவில் நிழல் என்பது ஈரலுக்குச் சுவாசம் போன்றது.

மக்காவில் எதுவுமே வளர்வதில்லை. புல்லோ மலரோ மரங்களோ எதுவும் இல்லை. நகரத்தைச் சூழ்ந்த மலைக்குன்றுகள், வெட்டிக் கிழிக்கும் வெங்கதிரவனின் சூட்டை நடுநிசிவரை நீட்டுவதற்காகத் தேக்கி வைத்திருப்பவை. மக்காவை உலகின் மிகக் கடுமையான பிரதேசங்களுள் தலையாயதாக விளங்கச் செய்தது இயற்கை. இருந்தும், அன்றைய நாட்களிலும் மக்காவை அறிந்திருந்தோர், தம் நினைவி லிருந்தும் அதனைத் துறக்க முடியாதிருந்தனர். மக்காவிலிருந்தும் அகன்று சென்றோர் மீண்டும் அங்கே எப்போது திரும்பிச் செல்வோம் என, அந்த நாளை அவாவினர். பாலைவனப் பசுஞ் சோலைகளென்ன, ஏனைய இயற்கை வளம் நிரம்பிய செழிப்பான பகுதிகள்கூட அவர் களுக்குத் திருப்தியளிப்பதில்லை. பொதிகளைக் கட்டுவதும் திரும்பிச் செல்வதும்தான். எங்கே? மக்காவுக்கு! மக்கா எனும் பெயர் கேட்டால் ஒட்டகங்கள்கூட உடன் தலையை நிமிர்த்தி நடையை நீட்டிச் சிலிர்த் துயர்ந்து நிற்கும்.

மக்காவின் சந்தையில் ஏலமிட்டு விற்கப்பட்டவன் நான். சந்தையில் என்னை வாங்க வந்தோர்க்கு என் வலிமையைக் காட்டவெனச் சுற்றிச் சுற்றி ஓடச் செய்தனர்; ஈட்டியால் குத்தினர்; என் தோலைப் பிய்த்தனர். ஓ! நான் அனுபவித்த துயரங்கள்தான் எத்தனை! எனது சித்திரவதைக் கூடமாக அமைந்த அந்த மக்காவை, வேதனைகள் அனைத்தை யும் அனுபவித்த அடிமையான நானே உளமாற நேசித்தேன்; காதல் கொண்டேன்.

டமஸ்கஸில் தண்ணெனத் தவழ்ந்து, பளபளக்கும் இந்தக் கிண்ணத்தில் நான் அருந்தவென இருக்கும் இக்குளிர் நீர், கஅபாச் சூழலின் கந்தகச் சுவைதரும் ஸம்ஸம் தண்ணீருடன் எவ்வகையிலும் ஒப்பீடு செய்யக்

கூடியதல்ல. என் கரமெனும் கிண்ணத்தில்தான் அக்காலத்தில் நான் அதனை அருந்தினாலும்கூட, எத்துணை மதுர மகத்துவம் கொண்டது அது!

ஏன்? இந்த நிலம்-பழுப்பு நிறம்பட்டு, இயற்கைக் கருணையின் கடைக்கண் பார்வை கூடப்பெறாது, பறவைகளோ, வண்ணத்துப் பூச்சிகளோ, தனியொரு மரமோ இலாது, வீழும் கதிரவனின் வெப்பத்தில் காய்ந்து வாடிய இந்த நகர், மனத்துள்ளே கற்பனைகளை விரித்து விருப்புகளை வளர்ப்பது ஏன்? சிந்தனையை நீங்கள் அதிகம் அலைய விட வேண்டியதில்லை. பூமியெனும் மாது அணிந்த சுவனத்து வைரம் போல, கஅபாவின் கறுமைப் பிரகாசம் பாலை வெளியில் உயர்ந்து ஜொலிக்கிறது. அதன் தண் நிழல் ஆயிரம் ஈச்சை மரங்கள் இணைந்து தரும் நிழலையும் மிகைத்தது. மானுடத்தின் இறுதிப் பசுந்தரையும் அதுவே. மூடநம்பிக்கைகள் மலிந்திருந்த அஞ்ஞான காலத்திலும்கூட அமைதியின் இருப்பிடமாய் மிளிர்ந்தது இந்த இடம். கஅபாவைச் சூழ்ந்த பிரதேசத்தில் தம் பகைவரை எதிர்த்து வாளோ, கரமோ எவரும் உயர்த்தார். அங்கு விரோதம், சண்டை, சட்ட மீறல், கொள்ளை எதுவும் இல்லை.

மனித குலத்தின் முதலாவது வணக்கத்தலம் - கஅபா. இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் தந்தையார் இப்றாஹீம், ஏக இறைவனை மட்டுமே வணங்கவென உயர்த்திய முதல் வீடு இது. எனினும், பக்தியின் இப்பெரும் மாளிகையானது, மின்னிக்குடைந்த பெருந்தடிகளாலும் மினுக்கம் இயற்றிய கற்களாலும் ஆன சிலைகளின் - அராபிய ஆண்டவர்களின் - பண்டகசாலையாய் மாறிய கதை இம்மேதினி மாந்தரின் கலங்கிய நிலைக்கு ஒரு சான்று. பகலுக்கும், இரவுக்கும், பயணத்துக்கும், அதிர்ஷ்டத்துக்கும், சொத்தைக் கால்களுக்கும், சுகமுள்ள கால்களுக்குமென எத்தனையெத்தனை கடவுளர்! லாபத்துக்கெனவே சமைத்த முன்னூற்றறுபது மௌனச் சிலைக்ள். சுவனத்தில் நீடு நிற்கும் தெய்வீக லாபமல்ல, சூடான கல்லில் துப்பிய எச்சில் போல சந்தடிச் சந்தைகளில் கூடிக் கலையும் பயணக் கூட்டங்களின் வணிக லாபமே அவர்கள் விரும்பியது.

ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட ஒரு மாதத்தில் அராபிய கோத்திரத்தார் பலரும் தம் கடவுளரைத் தரிசிக்கவென கஅபாவை நாடி வருவர். அவ்வேளை மக்கா நகர் முழுவதுமே விழாக்கோலம் பூண்டு நிற்கும். யெமன் தேசத்துக் கடல் வணிகர், ஸிரிய, பாரசீக வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் ஒன்று கூடும் காலம் அது. அனைத்துப் பகுதியிலிருந்தும் அடிமை வர்த்தகர்கள் தவறாது வந்து சேர்வர். அங்கே பொன்னும் தெய்வமும் சரிசமமான வணிகப் பொருட்களாய் விளங்கும் சமத்துவத்தைக் காணலாம்.

எடுத்துக் கொண்ட விஷயத்தைச் சரியான முறையில் அமைத்துத் தருவதற்காகவே கஅபாவின் நிழலில் நிகழ்ந்தவை அனைத்தையும் நான் கூறிச் செல்கிறேன்.

''அதோ செல்கிறார் இறைவனுடன் பேசுபவர்'' - அபூஜஹ்லின் குரல் அது. என்னருகில் அமர்ந்திருந்த அபூஜஹ்லின் அடிமை தலை சிலிர்த்து உடன் எழுந்தான். அந்தக் கிண்டல் வார்த்தைகள், தொடர்ந்து எழுந்த வெடிச் சிரிப்புகளின் ஓசையில் சங்கமமாகி அவனை மீண்டும் அமர்ந்து கொள்ளச் செய்தன.

''தூதரே! நீர் ஏன் நீரின்மேல் நடக்கக்கூடாது!'' -இந்நகைப்பின் பலனை இப்போது நரகத்தில் சுவைத்துக்கொண்டிருக்கும் என் எஜமான் உமையா. அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது என்றும் போல தனியராய், சூழவுள்ள மலைகளை நோக்கியவராய் நடந்துசெல்வார். அம்மலைகளில்தான் வானவர் ஒருவர் வந்து அவருடன் உரையாடிய தாகப் பலரும் காதோடு காதாகப் பேசி வந்தனர். தன் முதுகுப்புறம் எழுந்த புயலைத் தவிர்த்துக் கஅபாவின் உள்ளே சென்று மறைந்தார் முஹம்மது.

இவற்றின் மத்தியிலும் அபூஸுஃப்யான் சிரித்தார் அல்லர். முழு மக்காவிலும் எம் எஜமானைத் தவிர்த்து, கவனிக்கப்பட வேண்டிய மாட்சிமைமிக்க ஒரு மனிதர் என்றால் அவர் அபூஸுஃப்யான். அடிமைகளான எமது சரிதையும் அபூஸுஃப்யான் சரிதையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. வேட்டைக்காரனும் வேட்டைப் பொருளும்- நாயும் மானும் - ஒருவர்க்கொருவர் அவசியம் போலும். எமது நிலைமையை நாம் சரியாக நிர்ணயம் செய்துகொள்ளப் பெருந்துணை செய்தவர் அவர். திடீரென அவர் எழுந்து நின்றார். மெத்தனக் கதைகள் அனைத்தும் சட்டென நின்றன. அவர் கூறினார்: ''தனியொரு கடவுளைக் கொண்டவன் கடவுள் இல்லாதவன்.''

வழக்கம்போல அவர் நாடித் துடிப்பில் விரல் அமர்த்திப் பிடித்து விட்டார். சிலைகளை வணங்குவோர், தம் மூட நம்பிக்கைகள் அனைத்தையும் பல்வேறு கடவுளர் மத்தியில் பகிர்ந்துவிட்டிருந்தமையால் ஏக இறைவன் பற்றிய கோட்பாடுதனை விளங்கிக்கொள்ள இயலாத இதயத்தோராய் இருந்தனர். அபூஸுஃப்யான் கலவரத்துக்குள்ளாகியிருந்தது தெளிவாகத் தெரிந்தது. ''அவரது இறை நிந்தனைகளை நாம் அடக்காதுவிட்டால் கடவுளர் நம்மைவிட்டுப் பிரிந்து தமது கொடைகளையெல்லாம் வேறு ஒரு நகரத்தவர்க்குக் கொடுத்துவிடுவர்'' எனக் கூறிய அபூஸுஃப்யான், அபூலஹபைத் தன் கூரிய விழிகளால் ஆழமாகப் பார்த்து, ''அவரது பெரிய தந்தை நீர், அவரைச் சீர்படுத்தி அமைத்தல் அவரது குடும்பத்தாரின் பொறுப்பு'' என்றார்.

அயர்ந்து போயிருந்தார் அபூலஹப். இந்த உரையாடலில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் சபையிலிருந்தும் ஒதுங்கியே அமர்ந்திருந்தவர் அவர். ''முஹம்மதை சீர்படுத்துவதா? அவரின் வயதென்ன? நாற்பது! நிச்சயமாக அவர் ஓர் அவமானச் சின்னம் தான் - எனக்கு, தன் சொந்தக் குடும்பத்தார்க்கு, உமக்கு, நம் குலத் தோர்க்கு, அனைவருக்குமே! நேற்று என்ன செய்திருக்கிறார்? தன் அடிமையை மகனாகத் தத்தெடுத்துள்ளார். பித்துப்பிடித்தவர் அவர். யார் வந்து இரந்து கேட்டாலும் இருப்பவற்றை கொடுத்து விடுகிறார். கடன்பட்டோர் கஷ்டப்பட்டோரை உணவளித்துப் பராமரிக் கிறார். விடிகிறபோதெல்லாம் அவர் வீட்டுக் கதவடியில் சிலராவது தவறாதிருப்பர். ஏதாவது கிடைக்காவிட்டால் அவர்கள் அதிர்ஷ்டம் இழந்தோரே. என்னதான் செய்வேன் நான்! அவர் ஒரு பைத்தியம்!''

தம் சொந்த மண்ணில் ஓர் இறைத்தூதரா? விளக்குவதற்கியலாத விந்தையொன்றை விளக்குவதற்கு எவரும் விடையளித்து உதவி புரிவரோ என்ற ஏக்கத்துடன் அருகிருந்தோர் அனைவர் முகங்களையும் ஒவ்வொன்றாக நோக்கிய அபூலஹப், வருத்த மூட்டும் கலவரத் தாக்கம் மிக்கவராக அபூஸுஃப்யானின் கரம் பற்றினார்.

''கூறும் அபூஸுஃப்யான்! அவருக்கு என்ன குறை? கௌரவம், வலிமை, ஆளுமை, நரைமயிர் ஒன்றுகூட நாடாத தலை, அழகும் செல்வமும் நிரம்பிய மனையாள், மக்க நகரில் மேன்மைதரும் எதையும் நினைத்தவுடன் பெற்றுக்கொள்ளும் தகைமை அனைத்தும் இருந்தும் என்ன செய்கிறார் அவர்? மலைக்குகையில் கடுங்குளிரில் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார். பித்தல்லவோ இது! மெத்தை விரித்துக் கிடக்கிறது, இல்லத்தில் சுகமாக உறங்கி விழிக்க. ஏன் இந்த மூடத்தனம்? அனைத் துக்கும் காரணம் வானவர் ஒருவர் அவருடன் வந்து உரையாடியதாக அவர் நம்புவதுதான். இந்த வானவர் என்பதெல்லாம் அவர் செவிகளுள் அவருக்கு மட்டுமே ஒலிக்கும் மணியோசையே தவிர வேறேதுமல்ல!''

களைத்துப் போனவராக அமர்ந்தார் அபூலஹப். நண்பர்கள் அனை வரும் மனங்கலங்கினர். சித்தம் கலங்கிய ஒருவரைக் குடும்பத்துள் கொண்டிருப்பது எத்துணை துயருறுத்துவது! எந்த ஓர் அறிவுரையும் துணை செய்யப்போவதில்லை. என்ன செய்தும் பலன் கிட்டா. விரை விலேயே சுகம் கிட்டும்; துயர் தீரும் என நினைப்பது தவிர வேறேதும் செய்ய இயலாது ''...என்றாலும், ஒரு வருடம் முன்னர் நீங்கள் அனை வரும் அவரை நன்கு அறிந்திருந்தீர்கள்; மதிப்பளித்தீர்கள். அப்போ தெல்லாம் அவரை ஏளனம் செய்வதை நீங்கள் நினைத்தும் பார்த்திருக்க மாட்டீர்கள். உங்கள் சச்சரவுகளைத் தீர்த்து வைத்தார் அவர். உங்கள் பிரச்சினைகளில் மத்தியஸ்தம் செய்தார். தேவைப்பட்ட போதெல்லாம்

நீங்கள் அவரை நாடிச் சென்றீர்கள். அன்றோ, அவர் பரந்த மனம் கொண்டதொரு பெருமகன்.''

அவ்வேளையில் கூறவேண்டியிருந்தவற்றைக் கூறி முடித்த திருப்தியுடன் தன் அடிமைக்கு ஏதோ சைகை புரிந்த அபூலஹப், வேறு சந்தர்ப்பமாயிருந்தால் அதிகமாகவே பேசியிருப்பார். குளிர் நீர் ஓடும் நதிகளும், சுவனத்துக்கனி தரும் மரங்களும் கைக்கெட்டும் தொலைவில் சூழ்ந்துள்ள நிலையிலும் சுண்ணாம்புக் குழிகளின் பக்கமே செல்லும் அபூலஹபின் இயல்பு கண்டு நானும் துயருறுவேன். என்றாலும், என்ன? ஒவ்வோர் ஆன்மாவும் இறுதியாய்ச் சங்கமிக்கும் இடத்தை இறைவன் ஒருவனே அறிவான்.

அபூஸுஃப்யானின் சிந்தை தீர்மானம் செய்துவிட்டது: ''கடவுளர் குறித்து அவர் கூறுவது ஒன்று. அதனை அலட்சியம் செய்ய முடியாது தான் என்றாலும், கடவுளர் தம்மைத் தாம் காத்துக் கொள்வார்கள். ஆனால் மனிதர்களுக்கு அவர் உரைப்பது மற்றொன்று - அது நிச்சயம் அபாயகரமானது. அதன் தாக்கத்தை விரைவிலேயே நாம் அறிந்து கொள்வோம். இப்போதைக்கு அவர் சொல்வன கேட்டு ஒழுகும் அடிமைகளையும் பாதுகாப்புப் பெறாத மனிதர்களையும் நம் முன்னால் கொண்டு வருவோம்.''

# எஜமானை எதிர்த்து...

அம்மார், அவர்களால் கொண்டு வரப்பட்டபோது அங்கு ஒரு சுவரில் சாய்ந்து நின்றேன் நான்.

முழங்காலில் நிற்கும்படிச் செய்ய அம்மாரை நிலத்தில் வீழ்த்தி னார்கள். அவரோ தம் தலையை உயர்த்தி அவர்களை நோக்கிச் சிலிர்த்து நின்றார். இது தீங்காகவே முடியுமென உடன் நான் உணர்ந்து கொண்டேன். அம்மார் ஓர் அடிமையாயிருந்தால் குனிந்த தலையே பாதுகாப்புத் தருவது என்பதை உணர்ந்திருப்பார். சமூகப் படித்தரத்தின் அடிமட்டத்தில் இருந்தாலும் அவர் ஒரு சுதந்திர மனிதர். சுதந்திர மானிடன் ஒருவனுக்குள்ள உரிமைகள் அனைத்தும் தனக்கு உள தென்பதை வலியுறுத்தி, அவர்களை நேரெதிர் நோக்கி நின்றார் அம்மார்.

''முஹம்மது உமக்கு என்ன போதிக்கிறார்?''

''உலகத்து மக்கள் அனைவரும், ஒரு சீப்பின் பற்களைப் போல, இறைவன் முன் சமமானவர்கள்.''

இந்தச் சில சொற்கள் கேட்டு, சுவரில் சாய்ந்திருந்த ஓர் அடிமை, பிலால் ஆகிய நான், என் உடல் முழுவதும் குளிர்ந்து நடுங்குவதை உணர்ந்தேன். முகம் சிவந்தவராக உமையா பிழம்பானதையும் உணர்ந்தேன். எஜமானுக்குரிய அதே நாடித்துடிப்பு அடிமைக்கும் இருப்பதில்லையே!

அன்றைய தினம் அம்மார் காட்டி நின்ற துணிவை அடிக்கடி நான் வியப்புடன் நினைத்துப் பார்ப்பதுண்டு. அம்மார் எவ்வளவோ கூறியிருக் கலாம்: 'முஹம்மது எங்களுக்குத் தொழக் கற்பிக்கிறார்... உண்மையே பேசும்படி கூறுகிறார்... உமக்கென நீர் விரும்புவதையே, உமது அயலார்க்கும் விரும்புக என்கிறார்...' அவரை விடுவித்திருக்கக் கூடும். இறைவன் அவர்மீது கருணை காட்டுவானாக - அம்மார் அவர்களுக்கு வேதத்தைத் திறந்து காட்டினார்: ''ஏக இறைவனை மட்டுமே வணங்கும் படி முஹம்மது எமக்குக் கற்பிக்கிறார்.''

அபூஸுஃப்யானின் கழுத்தில் எப்போதும் ஒரு சாட்டை உயிருள்ள தொரு ஜந்துபோலச் சுருண்டு கிடப்பது இன்னமும் என் நினைவில் இருக்கிறது. 'ஏக இறைவன்' என அம்மார் கூறியதைக் கேட்டதும், அச்சிறு சாட்டை நாய் முதுகின் மயிர் நிமிர்வது போல நிமிர்ந்தெழக் கண்டேன்.

கொடுமைகள் இழைப்பதில் கொடூரமானவர் அபூஸுஃப்யான் என்பதற்கில்லை - அதனை நான் தாயிப்வாசிகளுக்கென ஒதுக்கி வைத்துள்ளேன்

- அபூஸுஃப்யானின் அடிமைகள்கூட தம் எஜமானைக் கொடூரமானவ ரெனக் கூறியதில்லை. விழிப்புருவம் ஒன்றை உயர்த்து வதால் மாத்திரம் முடித்துக்கொள்ளக்கூடிய ஒரு காரியத்துக்காகப் பயனில்லாமல் தன் குரலை உயர்த்துபவரல்லர் அவர். தனது சாந்தத்தின் மூலமே என்னை அச்சுறுத்தி வந்தவர் அபூஸுஃப்யான். அன்றைய தினம் அம்மாரை அவர் அச்சுறுத்தலானார். எவ்வாறு? அவருடன் சமமாக இருந்து உரையாடுவது கொண்டு!

''இறைவன் ஒருவன்?'' கவனம் மண்டியதொனி, கௌரவமாக, அமைதியாக எழுந்தது வினா. ''...ஆனால் இங்கு நம்மைப் பாதுகாத்து, நமக்கென அனைத்தும் தரும் முன்னூற்றறுபது கடவுளரை நாம் கொண்டுள்ளோம்...''

அவ்வேளை, எதிரேயிருந்த ஜன்னலின் வெளியே வெள்ளை நிறத்திலொரு வண்ணத்துப் பூச்சி சுழன்று கொண்டிருந்த அரிதான ஒரு நிகழ்வு என் நினைவில் எழுகிறது. அபூஸுஃப்யான் அம்மாரைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். நினைவினை நான் மீட்டுகிறேன். ஏன் நான் அவ்வேளையை நினைவுறுத்தக்கூடாது? அங்குதானே அடுத்த சில நிமிடங்களில் என் வாழ்வே மாறியது.

''கடவுளர் அனைவர்க்கும் இருப்பிடம் அளித்து நாம் வாழ்ந்து வருவதை முஹம்மது அறியமாட்டாரா? ஒவ்வொரு கோத்திரமும் தத்தம் தனிக் கடவுளரைக் கொண்டுள்ளதே! வணங்கவும் வாணிபம் செய்யவுமென எல்லா அரபுக் கோத்திரத்தாரும் ஒவ்வொரு வருடமும் தவறாது இங்கு வருகின்றனர். நமது வணக்கப் பொருளும் வர்த்தகப் பொருளும் ஆவர் இக்கடவுளர். பலம் இல்லாதோரையும் பணம் இல்லாதோரையும் நாங்கள் கவனியாது விடுகின்றோமா... என்ன? உமது பங்கு உம்மைச் சேர எப்போதாவது தவறியதுண்டா? கூறும்!'' அடுத்து என்ன கூறப்போகிறார் என்ற எண்ணத்தைக் கேட்போர் உள்ளத்தில் கிளறச் செய்யும் வகையில் சொற்பப் பொழுது கலை நெளிவுடன் தன் உரையைத் தாமதித்தார் அபூஸுஃப்யான் ''...நிழல் தரும் இச்சோலை யில், தாயிபில், யத்ரிபில், ஷாம் நகரில், ஒளிரும் நிலவில்... கண் காணும் எங்கனும் இருப்பதாகக் கூறும் ஒரே இறைவனுக்காக நமது முன்னூற்றறுபது கடவுளரையும் பகைத்து மாற்றம் செய்வது சரிதானா? இது தேவைதானா...? தத்தம் வீடுகளிலேயே ஒவ்வொருவரும் கடவுளை இருத்திக் கொண்டால் மக்கா நகரம் என்னவாகும்? பின்னர் யார் தாம் வருவர் இந்தக் கஅபாவுக்கு?''

அனைவருக்கும் திருப்தி. ஏக இறைவனைக் குறித்த, அம்மாரின் சிறியதொரு வாசகத்தை நீண்டதொரு சொற்பொழிவால் உடைத்துத் தகர்த்துவிட்டார் அப்பெருங்குடி வணிகர். என் பின்னாலிருந்த

பெருஞ்சுவர் போலவே, என் எஜமான் உமையாவும் அங்கு நிகழ்ந்தவை அனைத்திலும் பூரண பங்குகொண்டிருந்தான். உமையா என்னையும் இந்தப் பிரச்சினையினுள் இழுத்துவிடாது இருந்திருந்தால் விபரீதங்கள் ஏதும் இல்லாமலேயே விவகாரங்கள் முற்றுப்பெற்றிருக்கும், ஆனால், திடீரென என் பின்னால் சுவர் இல்லாமல் போய்விட்டது; என் பெயர் ஒலித்தது.

''எஜமானுக்கு அடிமை சமம் என்றா சொல்கிறாய்...?'' சலசலக்கும் பட்டின் அசைவொலியோடு அம்மாரை நெருங்கிய உமையா வினவினான். ''...பெரும்விலை கொடுத்து நான் பெற்றுக்கொண்ட கறுப்பன் பிலால் எனக்குச் சமமானவனா...?'' வினாவின் நியாயமின்மையை ரசிப்பதற்கெனச் சற்றே நிறுத்தினான் உமையா. சமமோ, இல்லையோ, கறுப்பு அடிமையான பிலால் அந்த வினாவுக்குள் எப்படியும் அமைய மாட்டேன். மதிப்பிலாப் பொருள் நான். எனவே நான் சமமானவனும் அல்லன்; சமானமற்றவனும் அல்லன். உமையா, தான் வீசிய வினாவினை அம்மாரின் நாசியின் கீழ் பொத்திப் பிடித்த அந்த விகடச் சாடையில் நானும் கலந்து சிரித்திருப்பேன். அது பதிலேதும் தேவையில்லாத வினா. வினவப்படுவதற்கு மட்டுமே உரியதென அதனைக் கொண்டிருந்தனர் அனைவரும், உமையாகூட. ஆனால் பெரும் அறிவிலியொருவன் போல அதற்குப் பதில் சொல்லத் துணிந்தார் அம்மார்.

''எல்லா மக்களும், எல்லா இனத்தவரும், எல்லா நிறத்தவரும், எல்லா அந்தஸ்தினரும் இறைவன் முன் சமம் என முஹம்மது எமக்குக் கற்பிக்கிறார்.''

அமைதி சூழ்ந்தது, மீண்டும் என் நாமம் ஒலித்தது.

''பிலால்!''

ஒரு வாழ்விலிருந்து மற்றொரு வாழ்வுக்கு நான் அவ்வேளை அழைக்கப்பட்டேன் என்பதை எப்படித்தான் உணர்வேன். நமது வாழ்வின் அடுத்த நிமிடத்தை இறைவன் மட்டுமே அறிவான்.

அழைப்பை ஏற்று முன் சென்றேன்.

''பிலால்! மக்க நகரின் சீமான் ஒருவருக்கும் உனக்கும் உள்ள வேற்றுமையை இவனுக்கு விளக்கிக் காட்டு. இவன் வாய்க்கு நல்லதொரு பாடம் புகட்ட, இவன் முகத்தைச் சாட்டையால் விளாசு!''

இது நாள் வரையும் இவ்வார்த்தைகளின் நேர்த்தியை நான் அறியேன். நீசத்தனத்தின் மூர்க்கமும் நேர்த்தியாய் அமைவதுண்டு.

என் கரத்தினுள் சாட்டையொன்றை இட்டனர். தண்டனைக்காக முகத்தை நீட்டி என்னை நிமிர்ந்து நோக்கினர் அம்மார்.

அடுத்து நிகழ்ந்ததை நான் எவ்வாறு கூறுவேன். இன்றுகூட அந்த கணத்தை நினைக்கும்போது ஓங்கார ஓசையொன்று என் செவிப் பறைகளைக் கிழித்துச் செல்கின்றது; கொடியதோர் உணர்வு என் மெய் கூசச்செய்து என் உடம்பு முழுவதையும் ஊடுருவிச் செல்கின்றது.

என் நினைவில் இருப்பவை மிகவும் கொஞ்சம். உமையாவின் உருள் விழியைக் கண்டேன்; அபூஸுஃப்யானின் பக்கவாட்டைப் பாதியாய் கண்டேன். தண்டனைகளை அங்கீகரிப்பாரே தவிர அவை நிறைவேறுவதைக் காண விரும்பாதவர் அவர். அவரது தரத்துக்குகந்த செய்கையல்ல அது.

ஆனால், அம்மாரை நான் தெளிவாகக் கண்டேன்; அவரது துலங்கிய பார்வையில் தூய்மையை, அமைதியை, அச்சமின்மையைக் கண்டேன். அடக்கமும் தைரியமும் மிகுந்திருக்கக் கண்டேன். எனது அடிமைத் தளையைவிட சக்திமிக்க வலிமை அவரது விழிகளில் ஒளி வீசக் கண்டேன்.

அந்தக் கணம் நான், பிலால், என் எஜமானை மாற்றிக் கொண்டேன்.

என் கரம் சாட்டையைக் கீழே தரையில் போட்டது. அவர்களது ஆச்சரிய மொழி என் செவிகளுள் வீழ்ந்தது.

தாம் கண்டதை அவர்கள் அறிவர்; யாது செய்தேன் என நான் அறிவேன். ஆம்! அடிமை ஒருவன் கலகம் செய்து விட்டான்.

அம்மார் கிடந்து துழாவினார் கீழே. சவுக்கை மீண்டும் என் கரத்துள் வைக்க முயன்றார் அவர். எனது செவிக்குள் மட்டுமே அவர் சேர்த்த சில சொற்கள் நீண்டதொரு கூச்சலை நிகர்த்தவையாக இருந்தன.

''அவர்கள் சொல்வதைச் செய் பிலால்! இதோ சாட்டை, என்னை அடி!... இல்லையேல் அவர்கள் உன்னைக் கொன்று போடுவார்கள் பிலால்!''

என்றாலும், நான் சலனமுறவில்லை. இம்முறை நான் சாட்டையைக் கீழே விட்டபோது உன்னதமானதோர் அமைதி என் உள்ளத்தில் பரவியது. உமையாவை நோக்கி அபூஸுஃப்யான் சைகையொன்று புரிந்தார். ஹிந்தாவின் இளைத்த நகைப்பொலி கேட்டு அவள் பக்கம் திரும்பினேன். நேருற நோக்கும் தைரியம் இல்லாதவனாகவே என் வாழ்நாளெல்லாம் ஹிந்தாவை நான் கவனித்து வந்துள்ளேன். கணப் பொழுதே வெட்டி மறையும் மின்னலாகவே அவளை நான் கண்டுள்ளேன். அவளை முற்று முழுதாகக் கண்டிருந்ததை அவ்வேளைவரை நான் உணர்ந்திருக்கவில்லை. ஆம்! அவள் வெறும் மின்னலே.

மிக அமைதியாய் கூறினான் உமையா. ''கடவுளர்களை ஏற்றுக் கொள்ளும் மனிதப் பக்குவம் உன்னுள் படிந்தால், தெரிந்துகொள்...

பிலால்! உன் எஜமானின் கடவுளரே, உன்னுடைய கடவுளர்! கண்களால் காணவியலாக் கடவுளர் எவரையும் என் அடிமைக் கூடாரத்தினுள் நீ கொண்டு வரமாட்டாய்... பிலால்!'' கதிரவன் மேற்கு வானத்தடியினை நெருங்கிக்கொண்டிருந்தான். ''உன்னை நான் திருத்துவேன் பிலால்! என்றாலும் சூரியனின் வெப்பத்துக்காகக் காத்திருப்பேன். இன்று அது தன் உச்சத்தைத் தாண்டிவிட்டது.''

தமது இச்சைப்படி அவர்கள் என்னை வதை செய்தபோது என் கரங்களிலும் கழுத்திலும் கயிறுகள் பதிந்திருந்ததை உணர்ந்தேன். முன்னர் ஒருபோதும், அன்றுபோல் நான் கீழ்ப்படிவாய் இருந்ததில்லை.

என்னை வெளியே கொண்டு சென்ற அவர்கள், உதயத்தை எதிர் நோக்கியவர்களாக, அடிமைக் கூட்டினுள் என்னை வீசியெறிந்தனர்.

# மரணத்தின் வாயிலில்...

எனக்குள் நானே இரவெலாம் கலங்கிடவென என்னைத் தனியே விட்டனர். தண்டனைகள் அளிப்பதில் என் எஜமான் நுட்பம் மிகப் பெற்றவன். அவனது வார்த்தையில், இரவு முழுவதும் அடிமை யொருவனைப் பெரு நெருப்பில் வேகவைக்கும் விறகுகளே காலையில் அளிக்கும் சாட்டையடி. ஆனாலும், என் சிந்தையில் அமிழ்ந்திருந்தது - சாட்டையல்ல, எனக்குரியது கதிரவன். உமையா எனக்கெனக் கட்டளை யிட்டுள்ள தண்டனை கதிரவனின் கொடுஞ்சுடர். கதிரவனே மக்காவின் மரண ரதம்.

மரணத்தை எதிர் நோக்கியிருக்கும் மனிதனின் உள்ளத்தில் எத்தனையோ விளக்குகள் சுடர்விடத் தொடங்குகின்றன. அன்றைய இரவு, நான் காண்பதற்கென இறைவன் எனக்குள்ளே ஓர் ஒளியை அருள் செய்தான். அந்த ஒளியில், சாயத்தொட்டிகளில் எழும் ஆவியில் வெந்தும், தோல் பதனிடும் தோட்டத்து வெம்மையில் கரிந்தும் துயரில் உழன்ற என் தந்தையும் தாயும் என் விழிகளில் தெரிந்தனர். என் தந்தையின் பெரு வலிமை சுயநலப் பிரியரால் நன்கு சுரண்டப்பட்டதால் மானுடவலிமையின் பூரண உருவினராய் இருக்கவேண்டிய பருவத்தில், அவர் முதுமையில் வாடித் தேய்ந்தழிந்தார். இருமலாகவே வாழ்வு ஏகிடும் வரையிலும் இருமி இருமியே வாழ்ந்தார் என் தாயார். என்றாலும், அன்றைய இரவு அவர்கள் என் மீது சொரிந்த பார்வையில் மீண்டும் அதே சாந்தியை, அதே துயரினைக் கண்டேன்.

செங்கடலின் அப்பாலுள்ள அபிஸீனியா அவர்களது நாடு. அவர்கள் அடிமைத்துவத்துள் நுழைவுற்றதன் அடிமுடியை நான் அறிய மாட்டேன். அவர்கள் ஒருபோதும் அதை எனக்குக் கூறவில்லை. தாமே அதனை மறந்ததால்தான் அடிமைத் துயரினைச் சகித்தனர் போலும். இவ்விடத்தே அடிமையாய் நான் பிறந்தாலும் சுதந்திரத்தில்தான் என்னைச் சூலுற்ற தாக என் தாய் முன்னொருமுறை மொழிந்திருந்தார். எனது வாழ்வின் மர்மம் பொதிந்த அக்காலத்தில், கருப்பாதைக் காரிருட்டில் நான் ஏதுமிலாததாகக் கழித்த அந்நாட்களில், நான் அடிமையாக இருக்க வில்லை என்பதை எப்போதும் நினைவிலிருத்தி வந்துள்ளேன். இருந்தும், மனிதர்கள் அறியாமலேயே அவர்களுக்குரிய வாழ்வும், உலகில் அவர்களது நிலைமையும் அமைக்கப்படுகின்றன. தமக்கென ஒரு வாசலை யாரே தேர்ந்துகொள்ள வல்லார்? 'இங்குதான் நான் உட்புகுவேன்' என யாரே கூற இயலும்? மானிடப் பிறப்பு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதுதானே?

பிறப்பு எனக்களித்த பேரடிமைத் தனத்தை அறுத்து விடுவதற்காக, பிறந்த அன்றே என்னைக் கொன்றுவிடுதல் நன்றா என்று என் பெற்றோர் இரகசியமாய் பேசியவை அனைத்தும், அன்றைய இரவும் என் செவி களில் ஒலித்தன. என் முகத்தில் கண்ணீர் வழிந்து நனைப்பதை நான் உணர்ந்தேன். எனக்காகவல்ல; என் பெற்றோரின் அன்புக்காக.

நானே ஓர் அடிமையாகச் சந்தைப்படுத்தப்பட்ட நாளையும் நான் கண்டேன். செம்மறியாடுகள், ஒட்டகைகள் மத்தியில் நான் மீண்டும் மீண்டும் விற்கப்பட்டேன். எத்தனை எஜமானர்களிடம் நான் கை மாறினேன். கம்புகள்... காலுதைகள்... கசையடிகள்... ஹஹ்ஹா! இப்போது அவற்றை நினைத்து நான் எள்ளி நகைக்கலாம். ஆனால், உமையாவின் அடிமைக் கூட்டினுள் முழங்கால் முதல் கழுத்து வரையும் பிணைக்கப்பட்ட நிலையில் நான் கழித்த அந்த இரவு?

வலியின் கீற்றுகள் என்னை வாட்டிய போதிலும் உலகின் எழிலினை நான் மீளவும் வாழத் தொடங்கினேன். அந்த எழிலும் சிறுகச்சிறுக மறைந்து கொண்டிருந்தது. என்னதான் அது? எங்கோ தொலைவில் ஒரு நாயின் குரைப்பொலி; நிலத்தில் பட்டுத் தெறிக்கும் நிலவொளி; முற்றத்துக்கப்பால் யாரோ தனது அமைதியின் ஆழத்திலிருந்து எழுப்பும் குறட்டை... எனக்கும் நினைவு சலனமுறுகிறது. இல்லாதிருக்குமா என்ன? இடையில் முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. மனமோ தன்னைத்தான் தாங்கிக் கொள்ளவும் சக்தியில்லாதிருக்கிறது. இருந்தும், என்னால் மறக்க முடியாத ஒன்று... அக்காரிருளிலும்கூட, கண்களைக் குருடாக்கும் உச்சிப் பகல் வெய்யில் ஒளியில், தண்டொன்றின் மேலே செவ்வண்டொன்று. இன்றும்கூட, செவ்வண்டுகளைக் காணும் நாள் முழுதும் என்னுள் களிப்பு மீதூறும். வண்டுகாள்! வண்டுகாள்! மனிதர்தம் விவேகமனைத்தையும் இறப்பு அபகரிக்கையில் என்னதான் நினைப்பார்கள்!

கழிந்துபோன மாலையின் பெருவிபத்துக்கள் என்னுள் எழலாயின. ஆழ்ந்த சரிவொன்றில் திடுமென நான் வீழ்ந்த காரணம்தான் என்ன? அம்மாரா? எம் இருவர்க்கிடையில் என்னதான் தொடர்பிருந்தது. அம்மாரை நான் அடித்திருந்தாலும் அவர் மனங்கோணியிருக்கமாட்டார். என்னைக் கோபித்திருக்கமாட்டார். சாட்டையை என் கரத்துள் மீண்டும் திணிக்கவும் செய்தாரே அவர்! இருந்தும் நான், பெருமதியேதுமில்லா அடிமை பிலால், அடிமைத்தனம்கூட என்னைப் பணிந்திடச் செய்யாது என்பதை அந்த கணப்பொழுதில் எப்படித்தான் கண்டுகொண்டேனோ!

முடிந்த முடிவாகத் தீர்மானமொன்று செய்துவிட்டேன் என நீங்கள் கருதலாம். ஆனால், அது தவறு. அடிமை எப்படி தீர்மானம் எடுக்கலாம்? தேர்ந்திடும் உரிமை இல்லாதவன் எப்படி தேர்ந்துகொள்ளலாம்?

பிறகேன் அந்தக் கசை என் கரத்திலிருந்து வீழ்ந்தது? தன்னைத்தான் அஞ்சுபவனல்லவோ அடிமை. கலகம் செய்யுமளவு நான் வீரனுமல்ல; மடையனுமல்ல. அந்த வினாவுக்கான விடை வேறு எங்கோ வீழ்ந்து கிடக்கின்றது. எங்கே? முஹம்மதிடமா?

முஹம்மதை நான் பலமுறை பார்த்துள்ளேன், பேசியதில்லை. வருடாந்தர மாபெரும் சந்தை முடிந்து, தாம் கிளப்பும் தூசியினுள்ளேயே வந்த பயணிகள் அனைவரும் மறைந்து கரைந்த பின்னர் மக்கா சுருங்கும். வெறுமையாய்விட்ட நகரின் தெருக்கள் அனைத்திலும் பரிச்சயமான முகங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். இந்த அடிமையைக் கடந்து செல்லும் எவரும் என்னைப் பொருட்படுத்த மாட்டார்கள். ஆயினும், முஹம்மது வித்தியாசமானவர். நட்பின் குளிர்ந்த நோக்கு டனல்லாது அவர் எவரையும் கடந்து சென்றதில்லை. அவர்தான் இப்போது ஏக இறையோன் குறித்து சாட்சியங்கூறி நிற்கின்றார்.

சில மணி நேரங்களாய் அங்கேயே நான் வீழ்ந்து கிடந்தேன். கயிறுகள் என்னை அறுத்த வண்ணமிருந்தன; நினைவுகள் இடித்துக் கொண்டி ருந்தன. நம்பிக்கையும் இருக்கவே செய்தது. காலையில், வெட்கம் கலைந்து, ஊர்ந்து, கெஞ்சிக் கதறி, அவர்களது கால்களை நக்கி, இரந்து நின்றால் வாழ்வுக்கும் இறப்புக்கும் இடையில் ஓர் அங்குலமேனும் இடைவெளியொன்றைப் பெற்றுக்கொள்ளலாமோ?

நிச்சயம் என்னுள் நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். நானிலத்தில் நம்பிக்கைதானே மனிதனின் கடைசி மூச்சுவரை உடனிருக்கும் உற்ற நண்பன்.

உதயம் மலர்ந்து கொண்டிருந்தது. நேற்றைய காற்றைத் தள்ளிக் கொண்டு முன்வந்தது புதிய காற்று. என் நுரையீரலை அதனால் நிரப் பினேன். ஏக இறைவன் பற்றிய சிந்தனையிலேயே நான் அலைந்தேன். அந்த நாட்களில் நான் ஒரு பாமர அறிவிலி. சிந்தனையென்பது ஒழுங் கற்றதொன்றாகவே இருந்தது. அலைந்தேன் என நான் கூறுவதன் பொருள், கிணறுகள் எதனையும் உடமையாகக் கொண்டிராத ஒரு நாடோடியாக நான் இருந்தேன் என்பதாகும். என்றாலும், என்னுள் தாகம் இருந்தது; அனைத்தையுமே நான் தாகித்திருந்தேன். அந்தத் தாகமே ஏதென்று நான் அறியாத ஒன்றை நோக்கி என்னை உந்திக் கொண்டிருந்தது.

இறைவா! எந்த ஒரு மனிதனும் உன்னைத் தேர்ந்துகொள்வதில்லை. நீயே மனிதனைத் தேர்ந்து கொள்கிறாய். உன் விருப்பு இல்லாது எவரும் நம்பிக்கை கொள்வதில்லை.

அன்றைய வைகறையில், இறைவனின் நாட்டத்தின் படி, அந்த இறைவனில் என்னைச் சரண் அடைத்தேன். அது, எனது இஸ்லாம்.

இறுக்கிய கயிற்றுள் ஒன்றிக் கிடந்தும் ஒப்பிலாச் சுகந்தம் ஒன்று என்னுள் உறுதியாக ஊடுருவிச் சென்றது. இசை மீட்டியது என் ஆன்மா. ஏக இறையோனை நெருங்கியிருத்தலால் மட்டுமே எனக்கு ஆறுதல் கிட்டுமென உணர்ந்தேன். மனிதனின் சிந்தையிலும் ஆழமான அடித் தளத்தில் இதயத்தின் உள்ளில் காணும் சத்தியத்தில் நான் அதனை உணர்ந்தேன். தொழலானேன்; ஆன்மா ஆறுதலடைந்தது. இறை யோனைப் போற்றித் துதி செய்தேன்; சிந்தை அமைதி கொண்டது. அவன் அருளை வேண்டி நின்றேன்; அச்சம் என்னை விட்டகன்றது.

இறையோனின் கரங்கொண்டு கதிரவன் எழுந்தான்.

என்னை அழைத்துச் செல்ல வந்தவர்களுக்கு நன்றி செலுத்தினேன். அவர்கள் எப்படித்தான் அதனை அறிதல் கூடும். அவ்வேளை அடிமை யான நான் அவர்களது அருளையும், கருணையையும் நாடிக் கெஞ்சி நிற்பதே சாதாரணமாகச் செய்யவேண்டிய கருமம். என்னைப் பித்தனென நினைத்துச் சிரித்தனர். என்னைப் படைத்த இறைவனிடத்தில் நான் சாந்தி கண்டேன் என்பதை அவர்கள் எப்படித்தான் அறிவார்கள்? அவர்கள் எனக்குச் செய்பவை, செய்யாது விடுபவை, அனைத்தும் இறைவன் விருப்பினாலேயே என்பதையெல்லாம் அவர்கள் எவ்வாறு அறிவார்கள்? அவர்களது கரங்கள் என்னை உயர்த்தின.

அவர்களது கரங்களின் ஆபத்துகளுக்கெல்லாம் அப்பால் என் இறைவன் என்னை ஏற்கெனவே உயர்த்தி விட்டான் என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்?

# இறப்பும் உயிர்ப்பும்

என்னுடனான அலுவல்களை விரைவாகவே முடித்தனர். பாதைகள் பலவற்றின் வழியே நான் வேகமாக இழுத்துச் செல்லப்பட்டேன். இடையிடையே ஜன்னல்கள் சில மூடிக் கொண்டன. மக்கள் அனைவருமே மூர்க்கம் உடையோரல்லர், பிறரது துயரம் காண விரும்புவோர் மிகச் சிலரே. எவ்வாறாயினும், அடிமை நான் பெற்ற தண்டனை சரியென அனைவரும் ஏற்றுக்கொண்டனர். நான் திருத்தப்பட வேண்டியவன் என்பதில் அனைவருமே கருத்தொருமித்திருந்தனர். எனது எஜமானை எதிர்த்து, அவனது குலத்தவர் முன்னிலையிலேயே அவனது வெறுப்பைச் சம்பாதித்துக் கலகம் செய்துவிட்டவன் நான். அடிமையொருவன் இவ்வாறான உரிமை கொண்டாடுவது பொறுக்கப் பட முடியாத ஒன்று.

உமையாவுக்கு என் வழக்கில் எவ்வித சிக்கலும் இல்லை. அவனது தீர்ப்பில் நான் ஒரு திருடன். ஓர் அடிமையின் பெறுமதியை நான் அழித்து விட்டேன். எனக்காக அவன் கொடுத்த விலையை அபகரித்துக் கொண்டவன் நான். இனி எனது தோல் மட்டும் தான் அவனுக்கு ஏதும் அனுகூலம் செய்யக்கூடும். அதனை உரித்து, அடிமைகளுக்கெல்லாம் எச்சரிக்கையான ஒரு காட்சிப் பண்டமாக வைக்கலாம் அவன். வருடங்கள் முப்பது கழிந்த பின்னரும் உமையாவுக்காக இரங்கிடவே தாபம் கொள்கிறேன். பிறர்க்கு அநீதி இழைப்பவன் தனக்கே அநீதி இழைத்துக் கொள்கிறான்.

கொதிக்கும் நிலத்தில் போட்டனர் என்னை. சாட்டையை உயர்த்தினான் உமையா.

எனது சித்திரவதையை நான் விவரிக்க வேண்டியதில்லை. துயரத் துக்குத்தான் ஞாபகம் என்பதில்லையே. அதன் நிகழ்விலேயே நிலை பெற்றிருப்பது அது. அன்றைய நாள் பற்றி எவ்வளவோ பேசப் பட்டுள்ளது. பெரியதொரு தியாகியாகவே நான் பல சமயங்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளேன். என்றாலும், எரிக்கும் கதிரவனைவிட வலிமையானவன் இறைவன்; மனிதனின் ஆன்மாவை எந்த ஒரு சாட்டையும் தொட்டுவிட முடியாது.

எனக்குத் தெரிந்த ஏக வழிதனில், எனக்குத் தெரிந்த ஏக இறைவனை, எனக்குத் தெரிந்த ஏக நாமத்தால் அழைத்தமை என் நினைவில் படிந்துள்ளது: ''ஏகன்!'' பல்லாயிரக்கணக்கான மக்களைப் பிரார்த்தனைக் காக அழைத்துள்ள பிலால் ஆகிய நான், அவ்வேளையில் பிரார்த்தனை

ஏதும் அறியாதவனாயிருந்தேன். இருந்தும், அவனது பெயரை நான் இசைத்தபோது என் இதயத்துள் அவன் பதிலளித்தான். கொடுஞ் சவுக்கின் கீழ் நான் கூச்சலிடவில்லை. எனது இறைவனுக்காக மட்டும் நான் மூச்சை இறுக்கிப் பிடித்தேன். அவர்களது தயவினை நான் அவாவவில்லை; அவனது தயவினை மட்டுமே ஆசித்தேன்.

ஒவ்வொரு சித்திரவதையிலும் இடைவேளைகள் உண்டு. அப்போது தான் வதையின் வரையறைகளை மதிப்பிட்டுக் கொள்ளலாம். அதன் அதிர்ச்சிகளினால் அதிசீக்கிரமாகவே நான் மரணித்திருந்தால் உமையா வின் பார்வையில் என் திருட்டு இரட்டிப்பாயிருந்திருக்கும். இங்ஙனம் அமைந்ததோர் இடைவேளையின் போதுதான் அபூஸுஃப்யானின் மனைவி ஹிந்தா என்முன் தோன்றினாள் - விரியும் இன்னறுமணமும், மிதந்து செல்லும் சுக நிழலும் கொண்ட ஹிந்தா!

எனது வார்த்தைகள் கேட்கக் குனிந்தாள் அவள். ''ஏகன்! ஏகன்!''. திரும்பியவள் நகைத்தாள், ஹிந்தாவின் சிரிப்பு - ஒரு தனிச் சிரிப்பு. ''சத்தியம் செய்வேன். அடிமை நமக்கு புத்திமதி கூறுகிறான்'' என்றாள் அவள். நீண்ட சவுக்கு என் மீது மீண்டும் நெளிந்தது... மீண்டும்... மீண்டும்...!

அவ்வேளையில், காற்றிடை கவிழும் மரத்தின் ஊஞ்சல்போல... கணப்பொழுது மரணத்தின் வாயிலில் நுழைந்ததுபோல... ஆம், அடிக்கடி நான் எண்ணி வியப்புறுவதுண்டு. ஆனாலும், யாரே இவை கூறவல்லார்? மடிந்தார் மட்டுமே தாம் மடிந்தமை அறிவார். இருந் தாலும், நான் அனுபவித்த துயர்களெல்லாம் சட்டென முற்றுப்பெற்றன. என்னை வதை செய்தோரெல்லாம் சேய்மையில் சென்று விட்டதாக உணர்ந்தேன். மரணத்துள் அமிழ்த்திவிடும் வகையில் என்மேல் பாறாங் கற்கள் ஏற்றப்பட்டபோதும் புதுமையாய், மாற்றமாய் அவர்கள் ஏதோ, எங்கோ செய்வதாகவே கண்டேன். அவர்களது கைகளில் சிக்குறாத எல்லைக்குச் சென்றுவிட்ட எனக்கு, அன்னவர் தம் செய்கைகள் அனைத்தும் உக்காஸ் சந்தையில் நடனமிடும் ஆடுகளின் நகைப்பை யூட்டும் மூடச் செயல்களை ஒத்தவையாகவே தெரிந்தன.

பின், கண்களை மூடியவனாக விண்ணகம் நோக்கினேன். சட்டென அங்கே, பசுமையான வயல்வெளிகளை, கனிகள் நிறைந்த மரங்களைக் கண்டேன். நீரோடைகள் சலசலத்து நெளியும் நல்லோசை கேட்டேன். நிழலின் சுவையை ரசித்தேன். அனைத்து இன ஆண், பெண், இளையார் பலரும் மிகுந்த பெருமிதத்துடன் உலாவரும் சுந்தரச் சோலையுள் நுழைந்தேன். வாழ்த்துக்கூறி அவர்கள் என்னை ஒரு நீர்ச்சுனைக்கு வழி நடத்தினர். பருகினேன்... ஆன்மாவின் பெருந்தாகம் தீர்ந்து மறைந்தது. இறைவனின் அருகில் நான் இருப்பதாக உணர்ந்தேன்...

அது ஒரு கனவா? சித்தக் கலக்கமா? வெறும் விநோதமா? சிந்தையில் ஏற்பட்டதொரு தெளிவா? அல்லது சாட்டையின் வேகத்தினால் அவர்கள் என்னுள் உன்மத்தத்தை ஊட்டிவிட்டனரா? கவிதைகள் கொண்டு தம்மைத்தான் வசப்படுத்திக் கொள்வர் மக்கள். நான் கண்டவை கவிதையோ?

விரைவாகவே முடிந்தது இது. இன்றும் நான் என்னையே வினவு கிறேன். திருத்தப்படுவதற்காக வதைக்கப்பட்டு வந்த அடிமை பிலால், அருள் பெற்று மரணித்தோர்தம் பூமியைத்தான் என் கண் முன்னால் கண்டேனோ?

# மீண்டும் பிலால் விற்பனை

தர்க்கிக்கும் குரல்கள் கேட்டன. உமையாவின் குரலும், நான் முன்னர் கேட்டிராத சாதுவான ஒரு குரலும். விழிகளைத் திறக்க முயன்றேன். எனினும் உச்சியையடைந்திருந்த கதிரவனால் கண்கள் கூசின. அவர்கள் பணம் குறித்தே பேசினர். புதுமையல்ல, மக்காவில் பணம் ஒரு போதை. அங்கு பொழுதைத் தீர்மானிப்பது திர்ஹம்; குடல்களை இயக்குவது பணம். எனக்குச் சம்பந்தமில்லாத விவகாரம் அது. மீண்டும் நான் உறங்கி டவே விரும்பினேன். இனி என்றுமே உலகில் அடிமைத் தனத்துள் எழாமல்; அவர்கள் முகங்களைக் காணாமல்; அவர்களது குரல்கள் என் செவிகளுள் புகாமல் உறக்கத்தில் அமிழ்ந்திடவே அவாவினேன். என்றுமே அறியாதிருந்ததையெல்லாம் இப்போது நான் அறிந்தவனா யிருந்தேன். ஒருவன் தன் சக மனிதனுக்கெனத் திட்டமிடும் கேவலமான மரணத்தின்போதுகூட இறைவன் எத்துணைக் கருணையாளன். ஆன்மாக் களைக் கைக்கொள்ளும்போதும் இறைவன் கரங்கள் காருண்யம் மிக்கவை.

மூன்றாம் குரலொன்றும் ஒலித்தது. அதிகாரத் தோரணையுடன் அபூ ஸுஃப்யான் முழங்கினார்: ''திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் அடிமையை விற்றலும் வாங்கலும் சமூக நீதிக்கு முரண்!'' சிதறிய என் நினைவுகளைச் சேர்த்திட முயன்றேன். உமையா பதில் கொடுத்தான்: ''அடிமை ஏற்கெனவே செத்துவிட்டான். ஒரு பிணத்தை நூறு திர்ஹங் களுக்கு அபூபக்ர் வாங்குவாராயின் அது என் அதிர்ஷ்டமே.''

புதியதொரு பெயர் புழங்கியது. அபூபக்ர்? அவர் ஏன் இங்கு வந்தார்? எரிக்கும் கதிரவனுக்கு எதிராக என் கண்களைத் திறந்தேன். பேச்சுகள் நின்றன. கூடியிருந்தோர் வியந்து வாய் பிளந்தனர். ஒருகணம் கழிந்தது. நான் அறிந்திராதக் குரல் என்னருகே வந்து, எம்மிருவர்க்கும் இடை யிலான எரிக்கும் இடைவெளியினூடே என் பெயர் கூறி அழைத்தது.

உடனே என்னை நெருங்கிய உமையா அலறினான்: ''அடிமை அசைந்தான். அசைந்ததை நான் கண்டேன்.'' என் தலைக்குள் அலறிய உமையா: ''கறுப்பு மிருகமே... மூச்செடு!''

திருப்புமுனை! என் உயிரைப் பறிப்பதற்காகப் பல மணி நேரமாக உழைத்தவன் இறுதி மூச்சை இழுத்துப் பிடியென இப்போது அறிவு றுத்துகிறான். நிச்சயமாக வாழ்க்கையில் நகைப்பிலும் அதிகம் விகடம்.

குரல்கள் மிகுந்தன. மீண்டும் உமையா: ''அவன் தன் விலையை உயர்த்திவிட்டான் அபூபக்ர்! அவனது மதிப்பு இருமடங்காகிவிட்டது. இருநூறு தந்து இவனை எடுத்துச் செல்லும்.''

என் மீதிருந்த கற்பாறைகளை அகற்றினர்; கட்டுகளை அறுத்தனர். மீண்டும் விற்கப்பட்ட பிலால் மீண்டும் வாங்கப்பட்டான். தனியொரு கணம்தான், இளைஞர் ஒருவர் கைதந்து உதவி என்னை எழச் செய்தார். முதலில் அவரைக் காண வேதனைப்பட்டேன். பின்னர் அவர் யார் என்று அறிந்துகொண்டேன். அவர் ஸைத். முஹம்மதின் வளர்ப்பு மகன். நான் ஏதும் பேசவில்லை; தேவையிருக்கவில்லை. அனைத்தையும் அவரே கூறினார்: ''அடிமைத்துவத்திலிருந்து உமக்கு விடுதலை, பிலால்!''

சப்புக்கொட்டிப் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தான் உமையா: ''இவனுக்கு நீர் இருநூறு திர்ஹம் தந்தீர். ஆனால் தெரிந்துகொள்ளும். நூறு என்றாலும் நான் விற்றிருப்பேன்.'' கேலிச் சிரிப்பு எங்கும் நிறைந்தது.

அபூபக்ரைக் கண்டேன் அப்போது. ஒளிமிக்க விளக்கைப் போன்ற மனிதர். ''உன்னையே நீ ஏமாற்றிக் கொண்டாய் உமையா! இவருக்காக நீ ஆயிரம் திர்ஹம் கேட்டிருந்தாலும் நான் தந்திருப்பேன்.'' என் விலை திடீரெனக் கூடிவிட்டது. என் ஒரு கரத்தை அபூபக்ரும் மறு கரத்தை ஸைதும் பிடித்துக் கொண்டனர். அவர்களது இழுப்புப் பாதி, எனது நடைபாதியாக இருவரும் என்னை வழி நடத்திச் சென்றனர். அவர் களுக்கு நான் எந்த ஓர் உதவியும் செய்ய முடியவில்லை. என் கால்கள் என்னைத் தாங்குபவையாக இல்லை.

ஐந்து நாட்களாக அபூபக்ரின் வீட்டின் இருளடைந்த ஓர் அறையில் வருவதும் போவதுமான மயங்கிய நினைவுகளுடன் இருந்து வந்தேன். எண்ணெய், களிம்புகள், இதமாகக் குளிரச் செய்யும் துணிகளோடு மெல்லிய மொழி பேசும் தெளிவில்லாத உருவங்கள் பல என்னைச் சுற்றி வருவது போல உணர்ந்த நினைவு. ஒரு முறை நான் விழித்த போது மூலையில் ஒருவர் பிரார்த்திப்பது தெரிந்தது. மீண்டும் வந்தது நித்திரை.

ஆறாம் நாள் காலை என் கால்களை எட்டி ஓர் அடி வைக்க முடிந்தது; களிப்பு மிகுந்தது அபூபக்ருக்கு. உடன் சென்று ஓர் ஆட்டைக் கொணர்ந்து எனக்கெனப் பால் கறந்து தந்தார் அவர். பின்னர் கூறினார்: ''மூன்று நாட்களாக உமது ஜுரம் தணிந்து சுகமாகும் வரையில் இறைவனின் தூதரே உம் அருகில் நின்று பிரார்த்தனை புரிந்தார். உமது நிலைமை தேறிவந்த பின்னர்தான் அவர் இவ்விடம் விட்டுச்செல்வார்; அவரைப் போல் மகிழ்ச்சி கொண்ட ஒரு மனிதரை நான் கண்டதில்லை. 'பிலால் இஸ்லாத்தை ஏற்றார்' எனக் கூறினார் அவர். நாளை நீரும் நானும் நபிகளாரைக் காணச் செல்வோம்.''

இஸ்லாத்தில் இணைந்த மூன்றாமவர் நான் என்று கூறுவார்கள். எனது தகுதிக்கு மிஞ்சிய இடம் அது. நான் ஒன்பதாமவனே. இறைத் தூதரின் ஆரம்பகாலத் தோழர்களுள் கடையன் என்பதில் பெருமை

கொள்கிறேன் நான். நிச்சயமாக, கற்பாறைகளின் கீழிருந்து தானே என்னைக் கண்டெடுத்தார்கள்!

# இறைத்தூதருடன்...

தயாள மனதினைத் தெளிவுறுத்தி உயர் வாழ்வினைச் சுட்டும் விரிந்து பரந்த நெற்றி. எவர்க்குள்ளும் களிப்பினைப் புகுத்தும் புன்னகை. மண்ணிறங்கலந்து முற்றும் திறந்த மாசிலாக் கருவிழி. சோபனம் கூற இறுகப்பற்றும் வலிமை நிறைக் கரங்கள். நீர் மேல் நடப்பதைபோல எடையிலா நடை. யாரையும் காணவெனத் திரும்பும் போது முழுமை யாய்த் திரும்பும் பரந்த உடல். அவர் முஹம்மது - இறைவனின் தூதர்.

அவரைக் காணவென முதன்முறை நான் சென்ற வேளை அவர் தன் உடன்பிறவாச் சோதரர் அலீயுடன் வெறும் ஓலைப்பாய் ஒன்றின் மீது அமர்ந்திருந்தார். என்னை ஏறிட்டுப் பார்த்ததுடன் அவர் விழிகளில் நீர் நிறைந்தது. சிறுவர் அலீ, அவர் கரம் பற்றி வினவினார்: ''ஏன் அழுகிறீர்கள்?... இவர் தீயவரோ?'' முஹம்மது கூறினார்: ''இல்லை... இல்லை... சுவனத்தை நினைவுபடுத்திய மனிதர் இவர்!''

விரைந்து எழுந்த அவர் என்னை பற்றித் தழுவினார். ''இஸ்லாத்துக் காகச் சித்திரவதைக்குள்ளான முதல் மனிதர் நீர் என என்றென்றும் கூறப்படுவீர், ஓ பிலால்!'' எனது பெற்றோர் இறந்த பின்னர், மானுட அன்புக் கண்ணீர் முதன் முதல் என் முகத்தில் வீழ்ந்து வழிந்தமையை அன்று கண்டேன்.

ஆழமானதொரு குழியின் அடியிலிருந்து பத்திரமாக மேலுயர்த்தப் பட்ட ஒருவனது நிலையில் நான் இருந்தேன். மகிழ்வூட்டியதொரு சந்தர்ப்பம் என நான் அதைக் கூறுவேன் என நீங்கள் எண்ணலாகாது. எவ்வாறு மகிழ்ச்சி ஏற்படமுடியும்? எனக்காக முஹம்மது அழுதிருந்தார். தூய்மையே ஆன அந்த உள்ளத்துக்குத் துயரை விளைவித்தவன் நான். தீர்க்கதரிசி ஒருவரது உள்ள வருத்தத்துக்குக் காரணமாய் அமைவது மதிப்புத் தருவதல்ல. அவரின் கண்ணீரினால் நான் உயர்நிலை பெற்றேன் எனக் கூறுவர் பலரும். அது உண்மையன்று.

என் கரம் பற்றிய முஹம்மது, முதன் முதலாகத் தன் அருகே அமர் வதற்காக என்னை இழுத்தார். நான் தயக்கம் காட்டியிருக்க வேண்டும். என் வாழ்நாளில் ஒருபோதும் குறைஷிய வம்சத்தவர் எவர் முன்னாலும் நான் அமர்ந்திருந்ததில்லை. நிற்பது மட்டுமே என் உரிமை. தயங் கினேன் நான். அதை முறிக்கவென முஹம்மது கூறினார்: ''நாம் நின்று கொண்டிருந்தால் அலீ தமது வித்தைகளைக் காட்டமாட்டார்.''

அவர் அருகில் அமர்ந்தேன். அப்போது தொடங்கியது எம் தோழமைத் துவம். ஓர் இரவில் அவர் மறையும் வரை இருபத்துமூன்று ஆண்டு

காலம் அவர் அருகில் அமர்ந்திருந்தேன்; அவருடன் நின்றிருந்தேன்; அருகருகே நடந்திருந்தேன்; பயணங்கள் செய்திருந்தேன். மதீனாவில் அதிவிடியல் வேளையில் தொழுகைக்கான அழைப்பு விடுக்கச் செல்லும் போது அன்றாடம் அவரை எழுப்பி விடுபவனும் நானே. அவரது இல்லக் கதவில் மெல்லவே தட்டிக் கூறுவேன்: ''தொழுகை... இறைத்தூதரே'' ஆம்! நான் இறைத்தூதரின் தோழர்களுள் ஒருவனாய் இருந்தேன். ராஜரீக கௌரவத்தினும் உயர்ந்ததொரு தரம் இது. அன்று பிலால் ஆகிய நான் அமர்ந்தேன்... எழுவதற்காக. என் புன்னகையை மன்னித்து விடுங்கள். எனது குறும்பு வார்த்தைகள் தகாதவையல்ல.

அலீயின் வித்தைகளினால் இல்லத்தில் மகிழ்ச்சி நிரம்பியது. குதித்தும், சுழன்றும், கரணம் புரிந்து முஹம்மதின் கரங்களினுள் சேர்ந்தும் அலீ களிப்பூட்டினார். பறக்கும் ஒரு சிறுவனை இறைத்தூதர் ஒருவர் பிடித்தெடுக்கும் காட்சி உண்மையில் மாட்சிமை மிக்கது. குழந்தைகள் மட்டுமே செவியுறும் இன்னிசை மீட்டுபவர் போல எக்காலமும் சிறாரைக் கவர்ந்திருந்தார் முஹம்மது. எப்பருவத்தார் மொழியையும் பேசுவார் அவர். சிறுவரின் அளவே ஆன சிறு குறும்புகள் பேசி சிறுவரோடு சிறுவராய் இருப்பார். ஒரு நாள் சிறுமியொருத்தியைத் தன் தோள்களில் சுமந்தவராகத் தொழுகைக்கெனப் பள்ளிவாசல் வந்தார் அவர். அனைவரினும் உயர்ந்து அமர்ந்த தேவதையைப் போலத் தோன்றிய அச்சிறுமி கண்ணியம் இல்லாதவிதமாக நபிகளாரின் தலை முடியினைப் பற்றிப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தாள். தொழும் வேளையில் மட்டும் அவளைக் கீழிறக்கி வைத்த நபிகளார் தொழுது முடிந்ததும் தம் தோள்களில் அமர்த்திக் கொள்ளலாயினர். அந்தச் சிறுமி - உமாமா.

ஓ! நான் மீண்டும் வழி மாறிச் செல்கிறேன். எனது கதையின் வரம்புக்குள்ளேயே நான் நிற்க வேண்டும். என்றாலும் இறைத்தூதரை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சம் கரைபுரண்டோடுகிறது. அவர் உரைத்தவை; செய்தவை என்பனவற்றையெல்லாம் எண்ணிக் களிக்கும் எழிலில் தன் முதுமைப் பிராயத்தைக் கழித்து வரும் கிழவனான எனது நினைவின் ஓட்டங்களில் ஏற்படும் சிற்சில ஒழுங்கு மீறல்களை நீங்கள் அனுமதிக்கவே வேண்டும்.

வீட்டிலுள்ளோர் அனைவரும் விரைவாக அங்கு வந்து சேர்ந்தனர். இறைத்தூதரின் மனைவியார் கதீஜா, அவர்களது நான்கு புதல்வியர் ஸைனப், ருகையா, ஃபாத்திமா, உம்முகுல்தூம் அனைவரும் தமக்குள் ஒரு குழுவினராய் அமர்ந்து கொண்டனர். கனிவும் அன்பும் மிக என்னை நோக்கினர் எல்லோரும். தினையளவும் எனக்குத் தெரியாதிருந்த அபிஸீனியாவின் மலைகள், மரங்கள் பற்றியெல்லாம் விவரங்கள் வினவினார் ஃபாத்திமா.

உம்முகுல்தூம் ஒரு கூடையில் ஈத்தம் பழங்கள் கொண்டு வந்தார். சுவை கெட்டால் எனக்கது அபகீர்த்தியாய்விடும் என்பது போல, எனக்கென மென்மையும் சுவையும் மிக்க பழங்களைத் தம் விரல்களால் தடவித் தேடினர் முஹம்மது.

பால் மடிச் சூடு இன்னமும் தணியாத ஆட்டுப்பால் அளித்தார் கதீஜா. தம் கணவரைவிட பதினைந்து வயது மூத்தவர். நல் உயரமும், அழகும், திடமான மிடுக்கு நடையும் கொண்டவர் அவர். திருமண வாழ்வின் சிறப்பினை இருவரும் இருபத்தைந்து ஆண்டுகள் களித்தனர். நபிகளாரின் ஐம்பதாம் வயதில் கதீஜா விண்ணுலகேகும் வரை அவர் வேறொரு மனைவியைக் கொண்டாரல்லர்; கொள்ளும் நோக்கில் நின்றாரும் அல்லர். இருந்தும் ஒவ்வோர் இதயத்துள்ளும் பிரித்துக் காணவியலாத துயரம் ஒன்று மண்டியிருக்குமல்லவா? இறைவனின் தூதரையும் கதீஜாவையும் துயருறுத்தியது, அவர்களது ஆண் குழந்தைகள் இருவரும் மழலைப் பருவத்திலேயே மறைந்ததாகும்.

மாலை வந்தது. நீண்ட நிழல்கள் வீழ்ந்தன நிலத்தில். காற்று அசையலாயிற்று. நடுப்பகல் தொடங்கி மூச்சடக்கி நின்றிருந்த மக்கா சுவாசிக்கத் தொடங்கியது. ஒவ்வொருவரும் ஒரே பொழுதில் காற்றினைக் கவ்வும் ஒலியை இதுபோன்ற நாட்களில் காதுறக் கேட்கலாம். முஹம்மது எழுந்தவராகக் கூறினார்: ''முற்றத்தின் குளிர் வெளிக்குச் செல்வோம்.''

அவரைத் தொடர முயன்றேன். சட்டென எழ முயன்றதன் அதிர்ச்சியும், என்னை முடமாக்கியிருந்த முன்னைய வதைகளும் இணைந்து என்னைத் தாக்க, நான் என் நிலையிழந்தேன். என்னை மிக நெருங்கியிருந்த அபூபக்ர் தன் கரங்களில் என்னைத் தாங்கினார்; போர்வையும் தைலங்களும் கொணரும்படி புதல்வியரைப் பணித்தார் கதீஜா. முஹம்மதோ வேறு மருத்துவம் வைத்திருந்தார்: ''எழுந்து நேராக நில்லும்; இரத்தத்தை ஓடவிடும்.'' விழுந்திருந்த எனக்குக் கை நீட்டினர் அவர். கால்களை நான் நிமிர்த்தக் கூடுமென்றோ அக்கால்கள் என் உடலைத் தாங்குமென்றோ நான் நினைக்கவில்லை. என்றாலும் அவர் கரம் பற்றினேன். அவர் என்னை உயர்த்தினார். மெல்லவே எழுந்த நான் வேதனைகள் அனைத்தையும் நிலத்திலேயே விடுத்தேன்.

இது ஓர் அற்புதம் என நீங்கள் கருதிவிட வேண்டாம். ஏனெனில் இது அற்புதம் அல்ல. முஹம்மது அற்புதங்கள் நிகழ்த்தினார் அல்லர்; சுகவீனமுற்றிருந்தோர்களின் பிணிகளை மர்மமாய் ஒழிக்கவோ, வதைப்பட்டு, துயருற்று நலிந்த அடிமையர்தம் துயர்களை அற்புதமாய்த் தீர்க்கவோ, மரித்தோர்க்கு உயிர் கொடுத்து மாட்சிமை காட்டவோ, நீரின் மேல் நடந்துகாட்டவோ முனைந்தார் அல்லர் அவர். யஸஅ நபி போல்

இரும்பினை நீந்த வைத்தார் அல்லர். நாத்திக மொழி பேசினோரை மாற்றுச் சொல் ஏதும் கூறாது கடந்து சென்றாரேயன்றி இறைத்தூதர் இல்யாஸ் போல பெதெல்லின் நாற்பத்திரண்டு குழந்தைகளது குதர்க்க மொழி பொறுக்க முடியாமல் அவர்களைக் கிழித்துக் குதற நிலத்தி லிருந்த பெட்டைக் கரடிகளைக் கிளம்பிவரச் செய்தாருமல்லர். அன்று மாலை என்னை உயர்த்தி அவர் என் வலியெல்லாம் போக்கியபோது அற்புதம் நிகழ்த்தினார் எனக் கூறுவோர் நகைப்பையே ஊட்டுகின்றனர். ஏனெனில், அவரை நான் நன்கறிவேன். என் வேதனையை நான் வென்றிட, வேண்டிய வலிமையையே அவர் எனக்குத் தந்தார். வேறு ஏதும் நிகழ்ந்து விடவில்லை. எந்த ஒரு மனிதனுள்ளும் உள்ள தயாள குணத்தைக் கண்டு அதனை அவர்க்கே காட்டித் தரும் நபிகளார், எந்த ஒரு மனித னுள்ளும் உள்ள வலிமையையும் கண்டு காட்டித் தரும் தகுதியினர்.

மானிடப் பண்பினுள் வாழ்ந்து, மானிடப் பண்பினராகவே மறைந்தவர் முஹம்மது. தனது அரும் தீர்க்கதரிசியர்க்களித்த அனைத்துக் கொடை களிலும் சிறந்ததை இறைவன் அவர்க்களித்தான். தன் வார்த்தைகளையே அருள் செய்தான் அவன். ஆம்! குவலயத்து அனைத்திலும் அற்புதம் குர்ஆனே!

நாங்கள் வெளியே நடந்தபோது, அவர் மிகவும் அமைதியாக வினவினர்: ''எவ்வாறெல்லாம் நீர் இறைவனை அறிவீர், பிலால்?''. ''என் இதயத்தில் நான் அவனை அறிகிறேன்'' என்றேன். என் பதில் எனக்கே திருப்தி தருவதாக இல்லை. சற்றுக் கழித்துக் கூறினேன்: ''நான் அவனை அறிவேன்... ஆனாலும், நான் அவனை அறியேன்... தேடுவதால் அவன் தென்படுவானா...?''

என் வினா தம் செவியில் விழாதவர்போல அவர் அமைதியாக நடந்தார். தோழமையும் அக்கறையும் மிக்க வியப்புறு அசைவாகத் தன் முழு உடலையும் என்புறம் திருப்பிக் கூறினர்: ''ஆமாம் பிலால்... தேடுதலால்... அவனைத் தொழுவதால்... அவனைப் போற்று தலினால்... சக உயிர்களுக்கெல்லாம் நன்மையே புரிதலால்... எனினும், நினைவில் இறுத்திக்கொள்ளும், பிலால்! நீரல்ல இறைவனைத் தேர்வது. அவன்தான் உம்மைத் தேர்கின்றான்.'' நபிகளாரின் முகத்தில் தவழ்ந்தது மாபெரும் சாந்தம். உறுதியின் வலிமையை உணர்த்தியது குரல்: ''இறைவனின் தூதர் நான்; அவனை அடையும் வழி இஸ்லாம்.''

நினைவை விட்டகலா உன்னதமான அத்தினத்தில் நான் என்னென்று அறியாத 'இஸ்லாம்' எனும் சொல்லை இரண்டாம் முறையாகக் கேட்கிறேன். பொருள் அறியாவிடினும் கேட்கும் சந்தர்ப்பத்தில் எல்லாம் அச்சொல் மகத்துவமிக்கதாய்ப்பட்டது. என் அறியாமையை என் முகத்தில் கண்டு தம் கரங்களை என் தோள்களில் இட்டனர் நபிகளார்.

“இணையேதும் இல்லாத ஏகனான இறைவனின் விருப்புக்குப் பூரணமாக அர்ப்பணமாதல் இஸ்லாம்… இனம், நிறம், குலம், தகுதி… எவற்றினால் பிரிந்திருந்தாலும் அனைவருக்கும் நன்மையே செய்தல் இஸ்லாம்… மனிதர்கள் அனைவரையுமே சமமெனக் கொள்வது இஸ்லாம்… மனிதருக்காக இறைவன் தேர்ந்த நெறி இஸ்லாம்… ”

சிறியதொரு பொழுதில் அதிகம் உரைத்துவிட்டவர் போல நபிகளார் தம் கரம் உதிர்த்து, நாணம் திணிந்தவராகத் திரும்பி, எனக்காகவன்றித் தமக்குள்ளாகவே கூறிக் கொண்டனர்: “அவை அனைத்தும் இறைவன் அருளியவையே… இனி நான் தொழச் செல்ல வேண்டும்.”

இறைத்தூதர் முஹம்மதுடனான என் முதல் சந்திப்பின் முடிவு இவ்வாறாக, என் இஸ்லாம் என்னுள்ளே இதமாய்த் தொடங்கியது.

# அபூபக்ருடன்...

எனது சூழல் முற்றிலும் மாறிவிட்டது. அடிமைக் கூண்டுகளோ அச்சுறுத்தும் முகங்களோ இல்லாத ஒரு வீட்டில் நான் இப்போது வாழ்ந்து வந்தேன். தன் வீட்டிலுள்ள எவர்க்கும் ஒரு எஜமானாகவன்றி சேவக னாகவே விளங்கினார் அபூபக்ர். காலையில் அவரது முதல் கடமை, ஆடுகளில் பால் கறத்தலாகும். அல்ல... அல்ல... நான் தவறிழைக்கிறேன். அவரது முதல் கடமை தொழுகையாகும். அதன் பின்னர் மூன்று ஆடுகளிலும் பால் கறப்பார். ஈடில்லா அன்பின் இலக்கியமாக அமைந்த நபித்தோழர்கள் அனைவருள்ளும் அபூபக்ரே, சாதுவாய் அன்பின் தனிப்பெரும் வடிவாய்ப் பூரணமான பொலிவினர். என்றாலும், வீரம் விளைத்திட வேண்டிய நாட்கள் பின்னர் வந்தபோதெல்லாம் வலிமை மிக்கவராகவும், முந்தி நிற்கும் முதல்வராகவும் நின்றவர் அவர்.

வீட்டில் எந்த ஒரு வேலையையும் தானே நின்று செய்வார் அவர். சரித்திரம்கூட அவரைச் சற்றேனும் மாற்ற முடியவில்லை. நபிகளாரின் பின்னர் உலகின் அரைப்பங்கினை ஆளும் கலீஃபாவாக அவர் இருந்த வேளை, அவரது படைகள் பேரரசுகளை எதிர்த்து வெற்றிகள் பல கண்டு கொண்டிருந்தன. அவரோ தனது வாசல் கதவடியில் அமர்ந்து பாதணிகள் திருத்திக் கொண்டிருந்தார். கி.பி.634இன் வசந்த காலத்தில் பாபிலோன் யுத்தகளத்தில் நாங்கள் ஈட்டிய வெற்றிகள் பற்றிய செய்தியை நான் கொண்டு வந்தபோது அப்படித்தான் அவரைக் கண்டேன். இருந்தாலும் எனது இஸ்லாத்தின் அன்றைய 'காலை' வேளையில் எம்மவர் கொஞ்சம் பேராகக்கூட இருக்கவில்லை. தனது ஆயிரம் ஆண்டின் அரியணை மீது பாரசீகத்தின் பெரிய அரசு வீறுடன் இன்னமும் வீற்றிருந்தது. எமது விஷயத்தை விட்டுப் பாய்வதும் பாரசீகத்தை இப்போதே வெற்றி கொள்வதும் வேண்டாம்.

ஆடுகளை விடுத்து உள்ளே நுழைந்தார் அபூபக்ர். என்னை வாங்கிய மைக்காக அவருக்கு நன்றி செலுத்தி நின்றேன். ஆனால் அவரோ, அவருக்கு மட்டுமன்றி, எனக்காக அவர் செலவு செய்த பணத்துக்கும் நான் ஏதோ பேருபகாரம் செய்துவிட்டதுபோல எனக்கு நன்றி கூறலானார். ''அடிமைகளை விடுதலை செய்தல் இறைவனை மகிழ்விக்கும் என இறைத்தூதர் எமக்குக் கற்பித்துள்ளார்'' என்றார் அவர்.

அதனை அவர் சற்றே சங்கடத்துடனும், குழறுதலுடனும் கூடத்தான் கூறினார்; அவரால் விடுதலை அளிக்கப்பட்டவன் நான். தனது ஆன்மாவின்

சுயநலந்தன்னை என்னிடமிருந்து மறைப்பதற்கு முயலாத நேர்மைத் திறம் வாய்ந்தவர் அவர். தயாளம் ஏற்படுத்தும் சங்கடமும் அதுவே.

''ஆ பிலால்... பிலால்... நீர் செய்வதற்குப் புதிய அலுவல் ஒன்று உண்டு. இதுவரையும் உழைக்காத வகையில் நீர் இனி உழைப்பீரா?''

நான் என்ன பதில்தான் கூறலாம்? ''அப்படியே எஜமான்!'' என்றேன்.

என் பதில் அவரைத் துயருறுத்தியது. என் சொந்த இருளுலகில் மீண்டும் நான் பாதம் பதித்து, அவரது பார்வையிலிருந்தும் மறைந்து விட்டேன். என் முன்னைய அடிமைத் தனத்துள் மீண்டும் மூழ்கி விட்ட நான் அளித்தது அடிமையின் விடை - 'அப்படியே எஜமான்!'. நான் தலையைத் தாழ்த்தி நின்றது, நிலைமையை இன்னும் மோசமடையச் செய்தது.

பால் வாளியைக் கீழே வைத்து, எனது இரு செவிகளையும் பற்றிய அபூபக்ர் தனது நெற்றியை எனது நெற்றியில் முட்டியவராகக் கூறினார் : ''நான் சொல்வதைக் கேளும் பிலால்! நீர் ஒரு சுதந்திர மனிதர். உமக்கு எஜமானர்கள் இல்லை. ஆனால் சுதந்திரவானாக இருக்க நீர் கற்க வேண்டும்.''

நெற்றிகளின் மோதுதலது தாளத்துக்கேற்ப ஆம்... ஆம்... என்றேன் நான்.

சட்டெனச் சிரித்து அவர் என் செவிகளை விடுத்தார். ''நான் உமக்கு என்னதான் கற்பிப்பேன்? உம்மை யாரும் அழைக்கும்போது கலவரம் அடையாதிருக்க... பிறர் முகங்களைத் தயக்கமின்றி ஏறிட்டு நோக்கிட... உமது நிழல் நிச்சயமாக உமதே என்ற உணர்வு கொள்ள... ஆம்... இவையெல்லாம் முக்கியமானவை.''

திடுமென நிறுத்தினார். கர்ப்பமுற்ற பூனையொன்று பாலைச் சுற்றி வட்டமிட்டது. அதன் பங்கு அதற்குக் கொடுக்கப்படும் வரை நான் தாமதிக்க வேண்டியிருந்தது. அங்கிருந்து சட்டென நான் வெளியேற்றப் பட்டது போலாயிற்று. பூனையை நான் உதைத்திருப்பேன். ஆனால், நான் கற்கவேண்டியிருந்தது இன்னும் ஏராளம். பத்தாயிரம் பேர் கொண்ட படையினராக நாங்கள் மக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை நாயொன்று தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது தடைப்படக் கூடாது என்பதற்காக முழுப் படையினரையும் பாதை யினின்றும் நூறு யாரளவு விலகிச் செல்லும்படி நபிகளார் உத்தரவிட்டது என் நினைவில் எழுகின்றது. இறைத்தூதர்களில் இறுதியானவரான முஹம்மது அவர்கள் வாயில்லா ஜீவன்களுக்கு இரக்கம் காட்டுதலையும் மானிடர்க்குக் கற்றுக் கொடுத்தார். பூனையொன்றுக்குப் புரியும் ஒரு கொடுமைக்காக நரகம் கிட்டும் எனக் கூறினார் அவர். மிருதுவான

உள்ளங்கொண்ட எந்த ஓர் உயிர்க்கும் அருந்திடச் சிறிது நீர் அளித்தலால் அரிய பரிசுகள் கிட்டும் எனவும் கற்பித்தனர் நபிகளார்.

என்றாலும், அவ்வாறான சீர்மைப் பேணுதலுக்கெல்லாம் அன்றைய தினம் நான் புதியவனாக இருந்தேன். பூனை உணவூட்டப்படுகின்றது; நான் புறக்கணிக்கப்பட்டுள்ளேன். சுதந்திரவானாகிவிட்ட ஓர் அடிமை, பூனைக்கு அடுத்தபடியான இடத்தில் நிற்க வேண்டுமென்பது என்ன நியாயம்? பூனையருகில் அமர்ந்திருந்த மானிட மென்மையின் அம் மாபெரும் மனிதர், தமது இறுதி வசனத்தின் நடுவிலிருந்து தொடர லானார்: ''...ஆனால் அதைவிட முக்கியமானது பிலால், எதிர் காலம். எதிர்காலம் என்பது அடிமைகளுக்கில்லை. அவர்கள் அதற்கு அனுமதிக்கப்படுவதில்லை... பிலால்!''

பாலினை நக்கிக் கொண்டிருந்த பூனையை திரும்பவும் நோக்கலானார் அபூபக்ர், எதிர்காலம் குறித்து புதிய தகவல்கள் எதையும் பூனைகள் தரலாம் எனக் கருதுபவர்போல. உலக வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவும் இறைவனின் கைவண்ணம் என்பதால், அவையனைத்தும் அபூபக்ருக்கு அழகியல் கற்பிப்பதாய் அமைந்தன என்பதை நான் இன்னமும் கற்கவேண்டியிருந்தது. இறைவனிடம் நேசம் கொண்டோர் நிச்சயம் உயிரினங்கள் அனைத்திலும், மலர்களிலும்கூட கல்விக் கூடங்களைக் காண்பர்.

''எழுதுகோல் ஒன்றை நான் செய்து தந்தால் நீர் எழுதப்பழகிடுவீரா?'' மிகவும் சாதாரணமாக எழுப்பப்பட்ட இக்கேள்வி, என் செவிக்குள் சரிவரப் புகவும் இல்லை. பதில் எதிர்பார்த்து எழுப்பப்பட்ட ஒரு வினாவாகவும் அது தெரியவில்லை. இக்கேள்வியை அவர் வினவி னாரோ என்ற ஐயமும் என்னுள் எழுந்தது. என்றாலும், நான் என் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றது அந்தக் கணத்தின் போதாகும். எனக்குச் சுதந்திரம் கிட்டியது, அபூபக்ர் எனக்காகக் கொடுத்ததால் அல்ல; எனக்குக் கொடுத்ததால்தான்.

நான் எழுதக் கற்றேன். அவுரியின் இலைகளை மாலை முதல் காலை வரை நனைத்து, காலையில் இடித்து, வெய்யிலில் உலர வைத்து மை செய்தேன். எழுதினேன்... எழுதினேன்... தோல்களில், மரப்பட்டை களில், செம்மறிகளின் உலர்ந்த எலும்புகளில், சகதியில், சாம்பலில், கற்களில்... எங்கெல்லாம் எழுத்துக்களைப் பதிக்கலாமோ அங்கெல்லாம் எழுதினேன். அந்தரத்திலும் என்விரல் கொண்டு எழுதினேன். ஓ... எப்படியெல்லாம் நான் எழுதக் கற்றேன்.

தினமும் அபூபக்ர், பாலைத் திடலின் கரைகளில் வளர்ந்திருந்த கள்ளி மரங்களின் முட்கள் கொண்டு புதியதொரு எழுதுகோல் செய்து தருவார். எனவே இப்போது அவருடைய காலைப் பொழுதுகள் புதியதொரு

முறையில் உதயம் பெறலாயின. தொழுகை, எனது எழுதுகோல், ஆடுகள்.

எனது தோள்புறத்தே நின்று என் வளர்ச்சியில் நேசத்தோடு உதவி வந்தார் அவர். அண்டாராவின் கவிதைகளைக் கொணர்ந்து தந்தார். முன்னர் ஒவ்வொரு வார்த்தையாகப் பின்னர் வரிவரியாக உரத்துப் படிக்கப் பயின்றேன். பாலையின் பெருவீரன் அண்டாரா. சாதனைகள் பல நிகழ்த்தியவன் அவன். தனியொருவனாக நின்று படைகளை முறியடித்தவன். அவன் புரிந்த தீரச் செயல்களும், பாடிய பாடல்களும் கன்னி அப்லாவின் மீது கொண்ட காதலால் விளைந்தவை. பளிச்சிடும் அவனது வாளுக்கும், வளமிக்க கவித்திறனுக்கும் நிகரானவர் யாரும் அக்காலத்தில் இருக்கவில்லை. அவனது ஒவ்வொரு வரியிலும் என் ஆச்சர்யம் பெருகிச் சென்றது. என்னைப் போலவே ஓர் அபிஸீனிய அடிமைப் பெண்ணின் புதல்வனாய்ப் பிறந்தவனல்லவா அண்டாரா!

ஒரு நாள் மிக்க உணர்ச்சி வயப்பட்டவராக வீடு வந்து சேர்ந்தார் அபூபக்ர். நான் மை செய்து கொண்டிருந்தேன். வழக்கமாக நான் செய்யும் வேலைதான் அது. என்றாலும், அன்றைய தினம் அதுவே அவரது மகிழ்ச்சியை அதிகமதிகம் பெருக்கி நின்றது. மை படிந்த என் கைகளை எடுத்துத் தன் இதழ்களில் அமர்த்தியவராக அவர் கேட்டார்: ''இன்று நபிகளார் என்ன சொன்னார்கள் என்று உமக்குத் தெரியுமா...?''

என்னை ஓர் இருக்கையில் அமரச் செய்தார் அபூபக்ர். அவரது செய்திக்கு இவ்வாறான ஒரு சிறு சடங்கு நிச்சயம் தேவையாயிருந்தது. ''நபிகளார் கூறினார்கள்: இறைப்பாதையில் உயிர் துறந்த தியாகியின் இரத்தத்திலும் மேலானது கற்றோரின் மை!''

உடன் நான் தொட்டியை நெருங்கினேன். என் கருநிறக் கரங்களை, மையும் அவுரி இலைகளும் நிறைந்த அத்தொட்டியில் அமிழ்த்திப் புளகாங்கிதம் அடைந்தேன். ஓ... எவ்வளவு நேரம் என் கைகளையே விறைத்துப் பார்த்தவாறிருந்தேன்... கறு மையில் அமிழ்ந்த கறுமை!

# இறைத்தூதரின் இளமைப் பருவம்

முஹம்மது(ஸல்) அவர்களது இளமைப் பருவம் குறித்துக் கூற இதுவே தக்க தருணம். ஏழையாய், அனாதையாய் பிறப்பிலேயே தன் தூதரைப் பரீட்சித்தான் இறைவன். முஹம்மதின் தந்தை அப்துல்லா, பார் புகழ் தம் மகனை ஏந்தியறியார். தம் மகன் கருவில் இருக்கும்போதே உலக வாழ்வை நீத்தார் அவர். வாரிசுரிமையாக அவர் விட்டுச் சென்றவை மெலிந்த ஐந்து ஒட்டகைகளும் செம்மறிகள் சிலவுமே.

முஹம்மது கிறிஸ்துவின் பின் 510 ஆகஸ்ட் இருபதாம் தேதி பிறந்தனர் என்பது மரபு வழியான நம்பிக்கை. சரியாய் அறிந்தவர் யாருமிலர்.

முஹம்மது பிறந்த அன்றிரவு விண்ணகத்தில் பெருவிழாவொன்று நிகழ்ந்ததென்றும், தேவதூதர்கள் பாடும் ஒலியைக் கேட்டனர் பல ரென்றும், நடுவானிலொரு விளக்கொளி விளைந்தது என்றும் பலபடக் கூறுவர். பாரசீகத்தில் ஆயிரம் ஆண்டுகளாக அணையாது விளங்கி வந்த அழிவிலா விளக்கும் அணைந்ததென்பர். மணிகளணிந்த சொண்டுடன் கூடியதொரு புறா வானத்திலிருந்து வந்து நபிகளாரின் தாயார் ஆமினாவின் வயிற்றில் வருடியதென்றும், அதனால், அவரது பிரசவத் துயரம் அகன்றதென்றும் கூறுவர். நான்கு வயதான சிறுவராக முஹம்மது இருந்தபோது ஒளிரும் வெண்ணிற ஆடையணிந்த இரு வானவர்கள் வந்து அன்னாரின் இதயத்தை வெளியிலெடுத்து பாவத்தின் கறையைக் கோதி அகற்றி அல்லல் ஏதுமில்லாது மீண்டும் வைத்துச் சென்றனர் என்றும் கூறுவர். அன்னாருடன் விளையாடி நின்ற மற்றொரு குழந்தை இவ்வற்புத நிகழ்வினைக் கண்டிருந்தது.

இவற்றின் மேலும் என்னென்னவோ நவில்வர். தம் தேவைக்கும் மிஞ்சியவற்றைத் தேடுதலே மானுடர் தம் இயல்பு. ஆனாலும், எமக்குத் தேவையான அனைத்தையும் நாம் ஏற்கெனவே பெற்றுள்ளோம் - உயர் வழி காட்டியாம் குர்ஆன் அது.

முஹம்மது ஆறு வயதை அடைந்ததும் அன்னாரின் தாயார் ஆமினா, அவரை இரு மடங்கு அனாதையாக்கி மறைந்தார். பின்னர் அவரது பெரிய தந்தை அபூதாலிப் அவரை எடுத்துத் தனதொரு மகனாகவே நேசித்து ஆதரித்தார். அதனால் வீடில்லாதவொரு விதியினை மறந் திருந்தார் சிறுவர். மக்க நகரத்தார் நாடுகள் கடந்து நடத்தும் வணிகத் தொழிலெனும் பள்ளியில் முஹம்மதைச் சேர்த்து அவரைப் பயணியர் குழுவுடன் ஸிரியா வரை கூட்டிச் சென்றார் அபூதாலிப். மக்கத்து வணிகர்

வகைவகையாய் எண்ணுவர். ஆயினும் எழுதார்; வாசியார், முஹம்மதும் கற்றாரல்லர்.

எழுதிய சொல்லின் வஞ்சமோ, பாவமோ மனத்தறியாத, சிற்றறிவின் மாய வலைகளில் சிக்காத ஒரு மனிதரே தன் சேவைக்கு உகந்தவர் எனக் கொண்டான் போலும் இறைவன், தன் இணையிலாச் செய்தியை அறிவிக்க எழுத்தறிவில்லா ஒரு மனிதரையே தேர்ந்தான்.

முஹம்மதின் இளமைப் பருவத்தோடு அதிசயங்கள் பலவும் அறி குறிகள் பலவும் பற்றிய ஏராளமான கதைகள் உறவாடுகின்றன. ஸிரியா சென்ற வேளையில் பயணக் குழுவினை முகிலொன்று தொடர்ந்து சென்று நிழல் பரப்பி நின்றதென்பர். கிறிஸ்தவ குரு ஒருவர் சிறுவரைச் சோதித்து நபித்துவத்தின் அடையாளமாக புயங்களுக்கிடையில் காணப் பட்ட நாணய அளவுள்ள ஒரு தழும்பினைக் காட்டினார் என்பர். நான் காதுறக் கேட்டவை இவை. நபிகளாருடன் நான் உடனிருந்த இருபத்து மூன்று ஆண்டு கால முழுவதும் செவியுற்ற அற்புதங்களிலும் பன் மடங்கை அவர் மறைந்துவிட்ட பத்தாண்டுக் காலத்துள் நான் செவி யுற்றுள்ளேன். இந்த அற்புதங்கள் நடந்திருக்கக் கூடும் என்றாலும், குர்ஆன் கூறுவதுபோல, அறிவிலா மாந்தர் அவாவுறுவதே அற்புதங்கள். இன்னும் நீண்டநாள் நான் வாழக் கூடுமாயின், மேலும் புதுப்புது அற்புதங்கள் பலவற்றைச் செவியுறலாம். ஒருவர் அற்புதமெனக் கருதுவது மற்றொருவர்க்கு வெறுங் கட்டுக்கதையாகவே அமையும்.

மக்கா நகரின் மலையடிவாரப் பகுதியில் மேய்த்து வரவெனச் செம்மறியாடுகளை விடியற்காலையிலேயே விரட்டிச் செல்லும் ஓர் இடையராகத் தாம் பணி புரிந்துள்ளதாக முஹம்மதே என்னிடம் கூறியுள்ளார். ''இறைத்தூதர்கள் அனைவருமே ஆடுகள் மேய்த்தனர்'' என்றும். இது உண்மையே. தம் தொழிலில் தனித்திருந்தோர் தாம் மனிதக்குலத்தார்க்குச் சான்றாக மாறினர். இறைத்தூதர் மூஸா அவர் களின் அற்புதங்கள் பதினாறும் ஆயிரக்கணக்கானோரின் கண்கள் முன்னால் நிகழ்ந்திருந்தும் ஏன் நிகழுலகை மாற்றிவிடவில்லை எனப் பலசமயம் நான் வியப்புறுவதுண்டு. இறைவனே அனைத்தும் அறிந்தவன். குர்ஆனை அவன் அளித்தபோது கண்களுக்குப் புலனாகும் அற்புதங்களுக்கு இனி அவசியமேதும் இல்லையென அவற்றினின்றும் நீங்கினன் போலும்.

பதினான்காம் வயதினராக முஹம்மது இருந்த வேளை இடைத் தொழிலினை விட்டும் போர்க்கள வீரனாய் ஆனார். புனிதமிழந்த போர் நாட்களில் ஒன்றின்போது அவரும் பங்கு பற்றினர். துயர் மிகு அருங் கவிதைகளைப் பிறப்பித்ததனால் புகழ்பெற்ற போர் அது. அச்சமரின் போது வாளேந்துமளவு வயது முதிர்ந்தவராய் முஹம்மது இருக்க

வில்லை. போர்க்களத்தில் எறிபட்டுக் கிடக்கும் அம்புகளையெல்லாம் எடுத்து ஓடிச் சென்று தம் பெரிய தந்தையாரிடம் ஒப்படைத்ததே அவர் செய்தது. அம்பறாத் தூளியை நிறைத்ததும், ஒட்டகைகள், குதிரைகள், போர் வீரர்களுக்கிடையிலாக மீண்டும் ஓடியோடி அம்புகள் பொறுக்குவார்.

அன்றைய தினத்தை நினைவுறுத்துவதைக்கூட அவர் விரும்ப வில்லை. அன்றைய நாள் விடியாமலேயே கழிந்திருக்கக் கூடாதா என்பார். தூங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் போதையில் மயங்கிய ஒருவன் கொன்றதால் ஊரினத்தாரின் குருதி கொதித்த கதையே இந்தப் போர்.

மேகம் தொடர்தல், விண்மீன் வீழ்தல் முதலாய அற்புதங்கள் அறிகுறிகள் என்பனவற்றை விலக்கிவிட்டுப் பார்த்தால் முஹம்மதின் இளமைப் பருவம் விசேடங்களேதும் பொருந்தியதெனக் கொள்வதற் கில்லை. காலத்தையும் இடத்தையும் பொறுத்த அளவில் சாதாரண ஒரு வாழ்வு அதுவென்றே சொல்லலாம். தந்தையின் வழியில், சிறியதோர் அளவில் வணிகத்தை தொழிலாய்த் தொடங்கினார். அவர் என்ன பொருளில் வர்த்தகம் செய்தார் என நான் அறிந்ததில்லை. என்றாலும், தன் தொழிலிலும்கூட, முஹம்மது ஒரு சாதாரண மனிதராக விளங்க வில்லை.

பண்டங்கள் பணங்கள் மாற்றுவோர், பெருவணிகர், குறை நிறை யினர், தந்திர ஜாலத்தோர் மலிந்த பட்டணத்தில் பளபளப்பினால் கவர்ந்து பொருள் விற்பனை செய்பவரல்ல முஹம்மது என அனைவரும் அறிந்திருந்தனர். வாங்குவார் கண் முன் பழத்தின் எல்லாப் புறத்தையும் தவறாது தெளிவாகக் காட்டி விற்கும் தகைமையர் அவர். கபடங் களினால் அவர் கவரப்பட்டவரல்லர்.

வணிக நேர்மையின் பெரும் புகழ் காரணமாக அவரைவிட மும்மடங்கு மூத்த வயதினர்கூடத் தம் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ள முஹம்மதையே நாடினர். அவரது தீர்ப்புகள் நீதியின் உச்சமாயிருந்தன. கஅபாச் சுவரின் கரைகள் திருத்தி முடிய, பண்டை நாளில் வானவர் ஜிப்ரீல்(அலை), இறைத்தூதர் இப்றாஹீம் அவர்களுக்களித்த சுவனத்துப் பாறையினை இல்லத்து மணிவிளக்காய் அதன் இடத்தில் பொருத்த முனைந்த தினத்தை நாம் சான்றுக்காக எடுப்போம். சாத்வீகமாக அக்கல்லை உயர்த்தி அதன் மாடத்தில் பதித்து அனைவரும் மகிழ்ந்தனர் என்றா நினைக்கின்றீர்? நிகழ்ந்ததோ வேறு. புனிதக் கல்லின் நான்கு புறத்தும், நான்கு பிரிவினர், நமக்கே உரியது இந்நற்கருமம் எனப் பகையினில் புகைந்து நின்றனர். கொதிக்கும் குருதியினராக வாள் கொண்டுவரவென வீடு நோக்கி விரைந்தனர் வாலிபர். கல்லை உயர்த்தும்

துணிவும் இன்றி, பிறர்க்கு வழிவிடும் மனமும் இன்றி உறைந்த மனத்தோராய் நின்றிருந்தனர் குறைஷியர்.

இந்த வேளைதான் அவர்கள் முஹம்மதை நாடினர். எளிதாகத் தீர்ப்பொன்றை அவர் அளித்தார். தம் போர்வையினைக் கீழே விரித்தார் முஹம்மது. கரும் கல்லினைப் போர்வையின் நடுவில் நிறுத்திப் போர்வையின் நான்கு மூலைகளையும் பிரிவுக்கொருவராய்ப் பிடிக்கச் செய்தார். சுவனக் கல்லினைப் பதிக்கும் சுவர் நோக்கி நால்வருமாக நடக்க, தமது கரத்தால் கல்லை எடுத்து அதன் உரிய இடத்தில் முஹம்மதே பொருத்தினார்.

# திருமணம்

முஹம்மது - கதீஜா திருமணம் சுவனத்தில்தான் நிச்சயிக்கப்பட்டதென நாம் ஐயமின்றிக் கூறலாம். புனித குர்ஆனின் அத்தியாயம் 93இதில் நமக்குத் துணை.

எனது அடிமைத்தாய் என் வாயில் தேன் அடையொன்றினை இட்ட போதுதான் முதன்முதலில் அவரது பெயரை நான் செவியுற்றேன். அப்போது என் வயது ஐந்து என நினைக்கிறேன். அந்தத் தேன் அடை கதீஜாவிடமிருந்து வந்ததாகக் கூறினார் என் தாயார். எனவே அவர் பெயர் என்றும் எனக்கு இனிக்கும். நேசத்தின் உறைவிடம் கதீஜா. முன்பின் கதவுகள் முழுதாய்த் திறந்து, வருந்தியவர்க்கெல்லாம் உவப்புடன் ஈந்தவர். பிறிதொரு பெண்ணின் வறுமைத் துயரில் தன்னை வைத்துக் காணும் தயாளம் படைத்த செல்வச் சீமாட்டி அவர்.

நபிகளார் பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கு முன்னைய கால கட்டத்தில் கொடுமைநிறை சமத்துவமின்மையின் உறைவிடமாக விளங்கியது மக்கா. கதீஜா, ஹிந்தா போன்ற சிலரே பெருநிலையில் வாழ்ந்திருக்க, ஏனைய பெண்டிரெல்லாம் அடக்கு முறையிலும் ஆழ்ந்த வறுமையிலும் துடித்தனர்; அசையும் சொத்தாக, ஆண்கள் ஆடிக் களிக்கும் தொட்டியாக அமுங்கிப் பணிந்து அடங்கி நின்றனர். மாதர் தம் காதலினை நளினமாய்ப் பாடும் அண்டாரா போன்ற அருங்கவிஞர் சிலரது கவிதைகளில் மட்டும் பெண்டிர் தம்மைத்தாம் சிலபோது கண்டு கொள்ள முடிந்தது. அவர்களும் இறந்து விட்டனர்.

உண்மையில் அது ஒரு பெரும் மர்மம். மக்காவில் பெண்டிர், ஒன்று வணங்கப்பட்டனர் அல்லது வதைக்கப்பட்டனர். கஅபாவின் உயர் கடவுளரில் மூவர் - அல்-உஸ்ஸா, மனாத், அல்-லாத்-பெண்கள். எனினும், அவர்களது சோதரியர்க்கு அவர்களால் எவ்விதப் பயனும் கிட்டவில்லை. அதனால், சோதரர்க்கு ஏதும் கிட்டியதோ எனில் அதுவும் இல்லை.

இறைவனின் தூதருக்குத் தமது துணைவியாரிடம் இருந்து கிடைத்த இணையிலாக் கொடையைக் காட்டுவதற்காகவே இவற்றையெல்லாம் நான் கூறுகிறேன். புதுமையான ஒரு முறையில்தான் அவர்களது உறவு ஆரம்பித்திருந்தாலும் அது நாளும் பொழுதும் செழிப்புற்று வளர்ந்தது. கதீஜா, ஸிரியா செல்லும் தன் வாணிபக் குழுவின் தலைவராகவே ஆரம்பத்தில் தம் வருங்காலக் கணவரைத் தேர்ந்து கொண்டார்.

கதீஜாவின் ஒட்டகங்களை வடக்கு நோக்கி நடத்திச் சென்றபோது முஹம்மது இருபத்தி நான்கு வயதினராயிருந்தார். அங்கும் அற்புதங்

களின் பெருக்குகள் இருக்கவே செய்கின்றன. ஒட்டகங்கள் இரண்டின் நீங்கிக் கொண்டிருந்த உயிரை நிறுத்திப் பிடித்து மீண்டும் அவற்றுக்கு உயிரூட்டினர் என்பதும் அவற்றில் ஒன்று. அனைத்திலும் உன்னதமான ஓர் அற்புதத்தை அவர்கள் கருத்தில் கொள்ளத் தவறி விடுகின்றனர். அதுதான் மனிதனும் அவனது இயல்பும்.

சற்றே அப்பயணக் கூட்டத்தை மனதில் கொள்ளுங்கள். எங்கு நோக்கினும் இருள். எங்கு திரும்பினும் பரந்து விரிந்த பாலை மணல் வெளி. மென் மணலில் ஒட்டகங்களின் பாதம் பதிந்தெழும் 'தம்' 'தம்' எனும் தாள ஒலி. பாதவைப்பின் இடைவெளியே பயணத்தின் அளவை. பயண முடிவை மட்டுமே ஒரே நோக்காக்கி, ஒன்றிணைந்து, ஒரே நிலத்தில் கட்டுண்ட மனிதனும் விலங்கும். ஆனால், மனிதனுக்கு மட்டுமே இருந்தது சிந்தை. அந்தச் சிந்தையுடன் இருந்தது சுவனம்.

ஆம்! சுவனத்தை நோக்கியுயர்ந்த மனிதனின் முகமே அற்புதங்களின் புத்தகம்.

பொறிகள் மேல் நோக்கிப் பறக்கத் தொடங்குவதுடன்தான், ஆன்மாவின் வாழ்க்கையும் ஆரம்பமாகிறது. மர்மங்கள் நிறைந்த பல்வேறு வழிகளில் தொழிற்படுகிறான் இறைவன். என்றாலும், மனிதனின் உள்ளேதான் அவன் தன் மாபெரும் அற்புதங்களை நிகழ்த்துகிறான் என நம்புகிறேன் நான். அதனால்தான், நீங்கள் பாலை வெளியின் பயணக் கூட்டத்தை மனதில் கொள்ள வேண்டும் என்றேன்.

டமஸ்கஸை அடைந்தாயிற்று. பட்டணத்தின் படர்புழுக்கத்தில் வழக்கமாகவே தம் தாகங்களுக்கான சாந்தி காண்பதில் ஒட்டக ஓட்டுநர்கள் காட்டும் ஆர்வத்திலிருந்தும் தம்மைத் தவிர்த்துக் கொண்டார் முஹம்மது. மாலுமிகளில் பெரும்பாலோர் மூழ்கி மரிப்பது கடலில் அல்ல; துறைமுகங்களில்தான் என உணர்ந்தவர்போல அவர் தம் பொறுப்பிலிருந்த பொருட்களுடன் ஒதுக்குப் புறமாய் இருந்தார். எஜமானியின் வர்த்தகத்தை நிதானமான சிந்தையுடன் திறம்பட ஆற்றி, கதீஜா எதிர்பார்த்திருப்பதைவிட அதிகமாகத் திரும்பி வந்தார் முஹம்மது.

முன் வருதலை விரைந்து நோக்கும் வல்லமை படைத்தவர் கதீஜா. ஸிரியாவிலிருந்து முஹம்மது திரும்பி வரும்போதே தம் வருநாள் கணவரைக் கண்டு கொண்டார் அவர்.

சுற்றி வளைத்துப்பேசி, அவருக்குத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பேதும் உள்ளதா என அறிந்துவர நடுவராக நபீஸா அனுப்பப் பட்டார். ''திருமணம் செய்துகொள்ள பொருள் வளம் ஏதும் என்னிட மில்லை'' என்றார் முஹம்மது. வறுமையைக் காட்டி வகையில்லை என அவர் கூறுவது இங்கிதமான நாணமெனக் கொண்ட நபீஸா, ''இருவருக்கான செல்வம் படைத்த ஒருவர் இல்லறத்துக்காக முன்வரக்

கூடுமாயின்?'' என வினவி, மெல்ல ''அழகு, செல்வம், உயரிய பெருமை, பெருங்குடி இல்லத்தின் தலைமை ஆகியவற்றுக்காக உம்மை ஒருவர் அழைத்தால் ஏற்பீரா?'' என்றார்.

முன்னெச்சரிக்கையாய்க் கூறினார் முஹம்மது, ''அது அந்தப் பெண்ணைப் பொறுத்தது.''

''நிச்சயமாக!''

''யாரோ அந்தப் பெண்?''

''கதீஜா''

களிப்புடன் நிமிர்ந்தார் முஹம்மது ''நான் என்ன செய்ய வேண்டும்?''

''அனைத்தையும் என்னிடம் விட்டு விடுங்கள்'' என்றார் நபீஸா.

கதீஜா அப்போது நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். ஏற்கெனவே இரு முறை மணம் செய்திருந்தவர் அவர். முஹம்மதின் வயது இருபத்தைந்து. குறை கூறலே தொழிலாய்க் கொண்ட சிறியோர் இங்கே டமஸ்கஸிலும் உளர். வலையினில் சிக்குண்டவர் அவரே, பெண்ணல்ல என அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். எவ்வித அறிவும் இல்லாதார் அவர்.

சிறப்புகள் அனைத்தும் பொருந்தியதாக அமைந்தது அவர்களது இல்லற வாழ்வு. நடுவராய் அமைந்து அதனைப் பிரேரித்தது மண்ணுலகத்து மங்கையல்ல; விண்ணகத்து வானவர் என்றே கூறலாம். நபிகளார் கொணர்ந்த தூதுக்கான முதற்படி இது. வறுமையின் பிடியிலிருந்து அவருக்கு விடுதலையளித்தார் கதீஜா. ஆன்மாவின் கடும் பணியில், ஏகாந்தச் சிந்தனைகளின் தெளிவில்லாத ஐயங்களில், அநிச்சயமான எதிர்காலத்து மயக்குறு சிந்தனைகளில் ஆழ்ந்து திகழ அது பெருந்துணை செய்தது. ஆறுதல் தேடி அண்ணலார் அல்லலுற்ற வேளை தேறுதல் கூறியவர் கதீஜா. நபிகளார் கூற நான் கேட்டேன்: ''அனைவரும் என்னைப் பொய்யன் எனக்கூறிய வேளை கதீஜா மட்டுமே நான் கூறுவதை மெய்யெனக் கொண்டார்.'' கதீஜாவே அவரின் தூதில் நம்பிக்கை கொண்ட முதலாமவர். நபிகளாரே தடுமாற்றமுற்றிருந்த நிலையில் அனைவருக்கும் முன்னதாக விசுவாசித்தவர் அவர்.

என்றாலும், அவர்களது திருமணத்திலும் மறுவொன்றைக் கண்டனர் மக்க நகரின் தாடி தடவும் மூத்தோர். 'முஹம்மதுக்கு ஆண் சந்ததி இல்லை' என. பகரமாக அரும் பெண்கள் நால்வரை அளித்தான் இறைவன். அவர்களுள் ஒருவர் ஃபாத்திமா. ஆணின் அருந்துணை பெண் எனத் தேர்ந்தான் போலும் இறைவன்.

## தூதுத்துவம்

இதை எனக்குக் கூறியவர் அபூபக்ர். அவருக்குக் கூறியவர் ஸைத். அவருக்குக் கூறியவர் அலீ. அவருக்குக் கூறியவர் கதீஜா. அந்த அனுபவத்துக்குள்ளான முஹம்மதின் வாய்மொழி மூலம் நேரடியாகக் கேட்டிருந்தார் கதீஜா. அனைத்துக்கும் மேலாக இறைவனே அதனைத் தன் குர்ஆனின் அத்தியாயம் 'நஜ்ம்'மின் பதினெட்டு வசனங்கள் மூலமாக உறுதி செய்கிறான். எனவே, அது உறுதி மிக்கது; வேதம் தரும் சான்றாய் அமைந்தது.

ஜிப்ரீல் வருகை தந்தபோது ஹிறா மலைக்குகையில் முஹம்மது தனித்தவராக இருந்தார்.

ஜிப்ரீல் கூறினார்: "ஓதுவீராக!"

முஹம்மது பதிலளித்தார்: "நான் ஓத அறியேன்!"

ஜிப்ரீல் மீண்டும் பணித்தார்:

"யாவையும் படைத்த உமது இறைவனின் திருநாமத்தால் ஓதுவீராக!
அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான்.
நீர் ஓதும்! உமது இறைவன் மாபெரும் கொடையாளி.
அவன்தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான்.
அன்றி, மனிதன் அறியாதவைகளை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்.
ஓதுவீராக!"

இருந்தும் முஹம்மது கூறினார் : "நான் ஓத அறியேன்!"

உடன் ஜிப்ரீல் மிக்க வலிமையுடன் முஹம்மதைப் பிடித்துத் தழுவி, இறுக்கி அமிழ்த்திட, அவர் மரணித்து விட்டோம் என எண்ணுமளவு மூச்சடைத்து நின்றார். கடுமையான அவ்வுணர்வின் இறுதியில் ஜிப்ரீல் அவரை விடுத்து குகையினின்று மறைந்தார். மனிதருக்காக இறை வனி டமிருந்து ஒரு செய்தி தன்னுள் பதியப்பட்டுளதென உணர்ந்தனர் முஹம்மது. ஆனால், இன்னமும் அது என்னவென அவர் அறியவில்லை.

ஜிப்ரீல் கொண்டு வந்த செய்தியின் பளுவினைத் தாங்கும் வலிமையை இழந்திருந்தது மனம். குகையிலிருந்தும் வெளியிறங்கிக் குன்றின்மீது ஏறலானார் முஹம்மது. இடையே மீண்டும் தோன்றினார் ஜிப்ரீல். கால் களைக் குறுக்காய்க் கொண்டு மனித உருவினராய்த் தொடுவானத்தே அமர்ந்திருந்தார் அவர். பார்க்கும் இடமெலாம், தலை திரும்பும் திசை யெல்லாம், வடக்கோ, தெற்கோ, கிழக்கோ, மேற்கோ எங்கு நோக்கினும் ஜிப்ரீலையே கண்டார் முஹம்மது.

மீண்டும் வானவரின் குரல் ஒலித்தது: ''முஹம்மதே! இறைவனின் தூதர் நீர்; நான் ஜிப்ரீல்.''

வீடு நோக்கி ஓடிக் குளிரால் நடுங்கிப் போர்வையுள் புகுந்தார் முஹம்மது. இறையோனிடமிருந்து கிட்டியதொரு காட்சியோ அது? ஆவிகளின் விஷமத்துக்காளான ஒரு மனிதனோ நான்? மனம் நோய் வாய்ப்பட்டு விட்டதோ? நிலவு தாக்கியதோ? சிந்தையில் புயலேதும் எழுந்ததோ? தான் வெறுமனே ஒரு மனிதன் என்ற உணர்வு மட்டும் அவருள் இருந்தது.

கம்பளிகள் பலவால் தம்மைப் போர்த்தி, நடந்த விந்தைகள் அனைத்தையும் கதீஜாவிடம் விளக்கினர் நபிகளார்.

சாதாரண சம்பவங்களையே அற்புதங்களால் நிறைப்போரும், எல்லா நிகழ்வுகளுக்கும் நிறம் பூசி நிற்போரும் இருக்கவே செய்கின்றனர். ஜிப்ரீல் நபிகளாரைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்துக்குள்ளும் வந்ததாகவும், வந்த அந்த வானவர் நல்லவரோ, அல்லவரோ எனக் கதீஜா பரீட்சித்துத் தெரிந்து கொண்டதாகவும் பல்வேறு கதைகள் கூறுவர். நம்மைத் திருப்தி யுறச் செய்யும் கதைகள் எப்போதுமே உண்மைகளைக் கூறுபவையல்ல.

எதையும் குறித்துணர்ந்து அறிந்துகொள்ளும் கொடையினை இறைவன் கதீஜாவுக்கு அளித்திருந்தான். தம் கணவரைத் தேற்றினார் அவர். அவரது அச்சங்களை விலக்கினார். நிச்சயமற்ற நிலையின் ஐயங்கள் போக்கி இதயத்துள் உறுதியை நட்டார். நபிகளாரே வலிமை யிழந்தவராக, தாழ் உணர்வினராய், தன்னைத்தான் ஐயுற்றவராய் இருந்த வேளை மர்மத்தினைப் பகுத்துணர்ந்து விசுவாசம் கொண்டார் கதீஜா.

நபிகளாரைப் பலமுறைச் செய்த அவர், இறைவன், உண்மையில் மனிதர் ஒருவரை ஏமாற்றுதல் செய்யான் என்றார். அன்று இரவு முழுவதும் வானவ தூதரின் வாசகத்துக்குரியவராகத் தன் கணவரைத் தாங்கி நின்றார் கதீஜா - ''முஹம்மதே! இறைவனின் தூதர் நீர்!''

மாட்சிமை மிக்க அந்த இரவினையே 'லைலத்துல் கத்ர்' என்பர். இந்த இரவில்தான் இறைவன் மனித குலத்துக்கு ஒளியினை ஈந்தான். இந்த இரவில்தான் சுவனத்தின் ஆசியினைப் பூவுலகுக்குக் கொண்டு வர ஜிப்ரீலை அங்கீகரித்தான் இறைவன். இந்த இரவில்தான் தன் இறுதித் தூதருக்கு இறைவன் தன் முதல் ஞானத்தை அருளினான். இந்த இரவில் தான் கதீஜா நம்பிக்கை கொண்டவராய், நம்பிக்கையாளர்கள் அனைவரதும் தாயாய் அமைந்தார். இறைவன் தன் கருணையை மனித குலத்துக்காய் அள்ளித் தந்ததும் இந்த இரவுதான்.

எது இந்த இரவென யாரும் அறியார். ரமழானிலா? ஆம்! நோன்பின், திருமறையின், மகத்துவங்களின் மாதம் ரமழான். ஆதியும் அந்தமுமாய்

முதற் பிறையின் கீற்றினைக் கொண்ட இம்மாதத்தின் முப்பது இரவு களினுள்தான் இரவுகள் அனைத்தினதும் மகுடமான மாண்பு நிறை இவ்விரவும் சங்கமித்துள்ளது. அது பதினேழாம் இரவென்பாரும், இருபத்து மூன்றாவதென்பாரும், இருபத்தைந்தாவதென்பாரும், இருபத்தேழு என்றே அடித்துக் கூறுவோருமாகப் பல்வேறு சாரார் உளர். ஆயிரம் மாதங்களினும் உயர்வானது இந்த இரவு எனக் குர்ஆனே வியந்துரைக்கும். என்றாலும், இதுதான் இந்த இரவு என நிச்சயமாக அறிந்தவன் இறைவன் மட்டுமே.

இறைத்தூதரின் அக்குகையைக் காணவென நான் பல முறை அம்மலை மீது ஏறியுள்ளேன். குனிந்து நெளிந்தே செல்ல வேண்டிய அளவுக்குத் தாழ்வான வாயில். உள்ளேயும் கூனிக்கிடக்க மட்டுமே போதுமான இடம். என்றாலும், இதுவே விண்ணுலகச் செய்தி முதன் முதல் வந்த தளம். சுவனத்தின் வியனுறு மண்டபம். அதன் மீது நான் ஏறும் போதெல்லாம் என் கால்கள் என்னை ஏய்க்க, கிறக்கமடைந்து கீழே விழாதிருக்கவென எதையேனும் பற்றிக் கொள்வேன். அழகின் நிறைவைக் காணும் போதெல்லாம்கூட நான் அதுபோலத்தான் நிலை தடுமாறுகிறேன். அவ்வேளைகளில் என்னையே நான் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. நமது சிறப்புமிக்க கணங்களே, நம்மை வலிமை யிழக்கச் செய்வனவும் அல்லவா?

கவனத்தைச் சிதைக்கும் சின்னச் சின்ன மனிதச் சலனங்களுக்கு மேலாக, தூரத்தில் இருப்பதை மலைச் சிகரத்திலிருந்துச் சுலபமாகக் காணலாம். ஹிறாவின் முகட்டிலிருந்து, மக்காவையும் தாண்டிய ஹிஜாஸின் சேய்மைப் பழுப்பில், கோத்திரங்களின் அசைவை, பயணியர் குழுக்களின் நெளிவை, நினைவு மறந்த நாள் முதலாகத் தம் மந்தையின் அருகேயே என்றென்றும் நின்றிருக்கும் இடையர் கூட்டங்களைத் தெளிவுறக் காணலாம். அழகில், செய்யும் தொழிலில், கொடுமையில், மாறும் தகைமையில் அமிழ்ந்து, அமைதியாக ஊர்ந்து செல்லும் ஓர் அற்புத உலகம் அது. மானிட பேதங்களோ, பயனிலாக் குரல் ஒலிகளோ மலை முகட்டிலிருப்போரைச் சென்றடைவதில்லை. இறைவனின் செய்திகளுக்கென்றே செவிகள் திறந்திருக்கும்.

# இறைச் செய்திகள்

இஸ்லாத்தின் ஆரம்ப ஒளிச் சுடர்களின் இன்பத்தை அனுபவித்தவர்கள் நாங்கள் என்பதால் நீங்கள் எம்மீது பொறாமை கொள்ளவும் கூடும். உண்மையில் எங்கள்மீது நீங்கள் இரக்கமும் அனுதாபமுமே காட்ட வேண்டும். பேருயர் அறிவினை ஏற்கும் பக்குவம் இல்லா மனங்கள் எம்முள் வளராதிருக்க எமக்குள்ளேயே நாங்கள் நடுநடுங்கி வளர்ந் தோம். கல்வியறிவில்லாதோராய்க் குறுகிய வரையறைகளுள் வாழ்ந்து வந்தவர்கள் நாங்கள். அறிவியல் துறைச் சாதனங்கள் ஏதுமில்லை எமக்கு. எங்கள் இதயங்களுள் நாங்கள் மிகத் தெளிவாக அறிந்து கொண்ட சத்தியங்களைக் கோட்பாட்டு முழக்கங்களாய்ச் சமைக்கும் கலையும் தெரிந்திலோம். இன்றோ, சின்னஞ்சிறார் கூட அனைத்தும் தெரிந்துள்ளனர். பற்பல துறைகளிலும் ஒட்டகைச் சுமையளவு அறிவினைத் தன் சிறு தலைக்குள் தாங்கியுள்ளான் என் மகன். நாங்கள் அக்காலை கொண்டிருந்ததோ ஆரம்ப இறை வாசகங்களின் பாரிய ஒளிகள் மட்டுமே,

கூறும், இறைவன் ஒருவனே! அவன் தேவைகளற்றவன்.
அவன் பெறவுமில்லை; பெறப்படவுமில்லை.
அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை.

இறைத்தூதர் முஹம்மது அவர்களுக்கு இறை வாசகங்கள் அருளப் படும் தருணங்களில் அவரை நான் பலமுறை கண்டிருக்கிறேன். உடன் அவர் நடுங்கி, அண்டி ஒதுங்குவதற்கேற்ற மூலையை நாடுவார். கடுங் குளிரால் நடுக்கும் இரவுகளிலும் அவர் முகத்தில் ஓடும் வியர்வையை நான் கவனித்துள்ளேன். அவருள் வேதனை விளைதலை, நடுங்கும் உடம்பு பேதலிப்பதை, கரங்கள் பக்கத்திலிருப்பவற்றைக் கடினமாய் இறுக்கி முறுக்கிப் பிடிப்பதையெல்லாம் கண்டுள்ளேன். பிறர் சொல்வன எதையும் செவியுறாதவராக, நல்லுணர்விழந்த சூழலில் நாழிகை சில கழிப்பார். ஏன் கூடாது? விண்ணகத்தோரால் அழைக்கப்பட்டவர் மண்ண கத்து மாந்தர்க்குச் செவிகளைத் திறந்து வைத்திருக்க வேண்டுமா, என்ன?

இறை வாசகங்கள் எப்போது வரும் என்பதை அறிந்தவரல்லர் அவர். சூழவிருப்போருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதோ, தம் இல்லத்து அலுவல்களில் மூழ்கியிருக்கும் போதோ, ஒட்டகைமீது பயணம் செய்து கொண்டிருக்கும் போதோ... எப்போதென்றில்லை. உடன் அவர் ஒதுங்கி மேலங்கியால் தம்மை இறுகப் போர்த்திக் கொள்வார். ஆரம்பத்தில் சிலவேளைகளில் மணியோசைகளை,

சிறகுகள் வேகமாய்க் கடந்து செல்லும் ஒலிகளை, சங்கிலிகள் முட்டி யெழுப்பும் ஓங்காரங்களைச் செவியுற்றனர்.

பல சந்தர்ப்பங்களில் வானவர் அவர் முன் தோற்றம் பெற்று உரை யாடுவார். கையெட்டும் தொலைவிலேயே நாங்கள் இருந்துள்ளோம். இருந்தும்கூட அவரை நாங்கள் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

தன் தூதருக்கு இறைவன் அருளிய வாசகங்கள், நாம் ஒருவருக் கொருவர் உரையாட உதவும் சொற்களால் அமைந்திடவில்லை. நிச்சய மாக, இறைவன் நம் தலைகளின் வெறுமையான பொந்துகளாகவே நம் வாய்களைப் படைத்துள்ளான். இறைவனின் வாசகங்கள் முஹம்மதின் இதயத்துள் அழுத்தப்பட்டன. தூதர் எழுந்து எம்மிடையே வந்த பின்னரே அவ்வுணர்வினை வார்த்தை வடிவில் நினைத்துத் தொடுக்க இறைவன் அனுமதித்தான். அதன் முழுமை நிறை ஒழுங்கில் ஒரு சொல்லேனும், வினையேனும், உரியேனும் வழுவிலாதமைந்தன. பின்னர், அவை தோல்களில், பட்டைகளில், செம்மறிகளின் எலும்பு களில் என கைக்குக் கிட்டிய அனைத்திலும் பதியப்பட்டன. அனைத்தும் மாற்றங்களேதுமின்றி ஜிப்ரீல் அளித்தவாறே அமைந்தன.

நபிகளார் அடையும் துயரினைக் கண்டு சிலவேளைகளில் தீர்க்க தரிசனத்தின் மீது நான் கொண்ட வியப்புணர்வையும் விஞ்சியதாக அமைந்தது, அவர் மீது நான் கொண்ட அன்புணர்வு. அவரை, அண்மிட நினைப்பேனாயினும் கால்கள் முன் வரா. இறையோன் சக்தியின் முன் யாரே எழலாம்? உன்னதமான அத்தருணங்களின் போதான தமது உணர்வுகள் குறித்து ஒரு முறை முஹம்மது எங்களுக்குக் கூறினார்: "என்னிலிருந்தும் என் ஆன்மா பிய்த்தெடுக்கப்படுவதாக நான் உணராமல் இறை வசனங்கள் ஒருபோதும் எனக்கு அருளப்பட்டதில்லை."

விண்ணுலகம் முழுவதும் இடையறாது இயங்குகிறதோ என நாங்கள் எண்ணுமளவு தொடர்ந்து திருவசனங்கள் அருள் செய்யப் பட்ட வண்ணமிருந்தன. நாங்கள் பெருமகிழ்ச்சியில் திளைத்திருந்தோம். அவ்வேளை, நாங்கள் இளைஞர்கள், இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இருந்தவர்கள். ஒவ்வொரு விடிவின் புத்தம் புது உதயம் எம் சிந்தையுள் விரைவாய்ப் படிந்தது. பரிதிகளின் நடனமல்ல நாங்கள் கண்டது, தந்திரச் செயல்களின் மாயை இல்லா மந்திரம் குர்ஆன்; முழக்கங்கள் இன்றிக் கொண்டாடும் வெற்றி; எழுதியோர் இல்லா நூல்.

## மக்கத்து எதிர்ப்பு

அவர்கள் ஏன் எம்மை வெறுத்தார்கள்? பழைமையில் ஊறி, மரபுகளில் மரத்து நின்றாலும் அவர்கள் தீயவர்களல்லரே! விருந்தோம்பலில் சிறந்தோர்; கௌரவம், அகௌரவம் குறித்துத் தமக்குள் வகுத்த நியதிகளைத் தவறாது பேணி வருவோர்; பாலை நிலத்து வாழ்வின் கொடுக்கல், வாங்கல், உபகார பந்தங்களைச் சிதையாது பாதுகாப்போர். அவர்களது இதயங்களின் கடுமைதான் அவர்களது வாழ்க்கையமைப் பையும் கடினமாக்கியிருந்தது. உண்மைதானே! கழுதைகளின் முதுகு களில் வாழ்வோர்தான் அவற்றை வதைக்கவும் செய்வார்கள்.

அவர்கள் எம்மையும் எமது ஏக இறைவனையும் எதிர்த்தது, தமது தெய்வங்கள் மீது கொண்டிருந்த பக்தியினால் அல்ல. நாத்திகத்தில் கடவுளர் மீது காட்டும் அன்பு என்பது பெரியதொன்றல்ல. சுரண்டலும், நறுநெய்பூசலும் ஒரே வேளையில் கடவுளர்க்குச் செய்யப்பட்டன. பண்ட மாற்றுச் செய்தல் போன்றதொரு முறை அது -''உன்னை நான் வணங்குவேன் ஓ ஹுபல்! உனக்கு மரியாதை செய்து அன்பளிப்புகளும் கொண்டு வருவேன். உன்னிடம் மீண்டும் மீண்டும் வந்து, உன்னைத் தொடர்ந்து வாழச் செய்வேன்-இழந்துபோன என் ஒட்டகையை நான் அடைந்து கொள்ள நீ எனக்கு உதவினால்!''

பிலால் ஆகிய நான், அறிவீனத்தில் அக்கடவுளரை ஒரு காலத்தில் வணங்கியவன். அவற்றுடன் நல்லுறவு பாராட்டவேண்டிய அவசியம் இன்று எனக்கு இல்லை. அக் கடவுளரின் பலத்தையும் பலவீனத்தையும் ஒளிவு மறைவு இன்றிப் பகர்தல் அவசியம்.

மரத்தாலும் கல்லாலும் ஆனோர் அக்கடவுளர். நொறுங்கிச் சிதையும் கல்லையும், எரிந்து கரையும் மரத்தையும் கடவுள் எனக் கொண்டு வணங்கும் மூடரல்ல அவர்கள். அந்தக் கல்லினுள்ளும் மரத்தினுள்ளும் புனித ஆன்மா ஒன்றை உருவகித்து அந்த ஆன்மாவையே வணங்கினர் அம்மக்கள். அக்கடவுளரின் பலவீனம் துலாம்பரமாகியதும் இங்குதான். அவர்களது கடவுளர், தாம் வாழ, கஅபாவைப் போலக் குறிப்பிட்ட ஓர் இடத்தைக் கொண்டிருந்தனர். அவர்களது ஆதிக்கமும் சக்தியும், அடுத்து வரும் சிலையின், கோயிலின், கோத்திரத்தின், நகரின், கடவுளரின் எல்லையில் முற்றுப்பெற்றன. மக்காவில் கதவொன்றைத் திறக்கும் கடவுளால் மதீனத்தில் அதனை மூட முடியவில்லை. அக்கடவுளர்தம் பெருமை அது.

அதனிலும் இழிவு மேலும் உளது. இக் கடவுளர் தம்மை வழிபடுவோரின் தேவைகளைப் பொறுத்து அவர்களில் உயர்வானோராகவும் இருந்தனர்; தாழ்ந்தோராகவும் கூட இருந்தனர். ரோமர்கள் கூடத் தமது மடமைநிறை காலங்களிலும் கடவுள் எவ்வாறெல்லாம் மக்களில் தங்கியிருந்தனர் என்பதை நன்கு அறிந்தே இருந்தனர். பெயர் சூட்டப் படாவிடில் கடவுளர் தொழில் இழந்து விடுவர்; வழிபடப்படாவிடில் வாழ்வையே இழந்து விடுவர். ஜூலியஸ் ஸீஸர் தனக்கென்று கடவுளரைக் கொண்டிருக்க, அகஸ்டஸ் ஸீஸர் தன் சொந்தக் கடவுளரைத் தனியே கொண்டிருந்தார். அரசர்கள் மாறக் கடவுளரும் மாறினர். தாராளமாகக் கொடுப்பதால், அல்லது கொடாது விடுவதால், வழிபடுவதால், அல்லது புறக்கணித்து ஒதுங்கி நடப்பதால், மனிதர்கள் கடவுளரை ஆக்கினர் அல்லது அழித்தனர். மனிதனுக்குக் கிட்டிய அதிபயங்கரமானதோர் அதிகாரம் இது.

என்னை அவர்கள் வெறுப்பதற்கிருந்த காரணங்களுள் ஒன்று ஏக இறையின் சக்தியைப்புரிந்து கொள்ளப் போதிய பலமில்லாதவர்களாக அவர்கள் இருந்தமை ஆகும். மறுமையில் உடல் மீண்டும் உயிர்ப்பிக்கப் படுவது குறித்து நபிகளார் விவரித்த வேளை அவர்கள் எவ்வாறெல்லாம் புகைந்து எரிந்து எரிச்சல்பட்டு வாதிட்டனர் என்பது என் நினைவில் எழுகின்றது. எழுந்து நிற்பதற்கு யாரேனும் கைதாங்கி உதவி செய்ய வேண்டுமளவு கொழுத்துப்பருத்த உடம்புடைய அபூலஹப், மக்கிப் போன மானுட எலும்பொன்றைக் கொண்டு வந்து, நபிகளாரின் முன்னால் தன் மெல்லிய வலுவிலா விரல்களால் வருடி நொறுக்கினான். ''இதனை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் என்கிறீரோ? இதனை மீண்டும் மனிதனாக்கிடுவீரோ?'' என வினவிய அவன், தன் கையிலிருந்த எலும்புத் துகள்களை நபிகளாரின் முகத்தில் ஊதினான். புழுதியை முகத்திலிருந்தும் துடைத்துவிட்ட நபிகளார், மூச்சடைத்துத் திணறிக் கொண்டிருந்த அந்த வணிகப் பெருமகனை அமைதியுடன் நோக்கி, ''மனிதனை முதலில் உருவாக்கிய இறைவன், மீண்டும் அவனை உயிர்ப்பிப்பான்'' என்றார். எப்போதுமே, அபூலஹபை அஞ்சியவன் நான். அச்சந்தர்ப்பத்தில் அவனை அதிகமாகவே அஞ்சினேன். அவனது சினத்தின் கனத்தினால் அவனைச் சூழ்ந்த நிலம் குலுங்கியது. இந்த உலகத்திலான தன் பெரும் வாழ்வின் ஒரு பகுதி மற்றோர் உலகில் தொடரும் என்ற எண்ணத்தை அபூலஹப் தன் சிந்தையில் கொள்ள இயலவில்லை.

நாத்திகர் பலரைப் பார்த்துள்ளேன் நான். அனைவரும் ஏதோ ஒரு வகை தத்துவத்தினை உயர்த்திப் பிடித்து அப்பெருமையிலேயே வாடினர். தம்மால் காணவியலா ஒன்றை ஏற்க இயலாதோராய், 'மனிதனே

அனைத்தும்; அவனது முடிவும் அவனே!' எனக்காரண காரியம் காண்பர். மறுமை உலகம் என்பது புவியின் கீழான, திறப்பிலாப் புதைகுழியே தவிர வேறில்லை. மாட்சிமை பெற்றிருந்த ஜூலியஸ் ஸீஸர் கூட வெற்றிவாகைகளின் பெருமிதத்தின் போது மேடையி லிருந்து முழக்கம் செய்தான்: ''மரணமே அனைத்தினதும் இறுதி!'' தன் ஆன்மாவுக்கு மனிதன் தீங்கிழைக்கலாம்; அதனைக் கெடுக்கலாம்; உருவிழக்கச் செய்யலாம்; கறைபடுத்தலாம். ஆனால், அதனை அவனால் கொன்றுவிட இயலாது. தற்கொலை என்பது கூட உடலைப் பொறுத்தது மட்டுமே; ஆன்மாவுக்கில்லை. அழிக்க முடியாத, அழிவுறாத தன்மை யுடையது ஆன்மா. ஒவ்வொரு மனிதனும் தனது சுய அழிவுறாத் தன்மைக்காகப் பதில் சொல்லியே ஆகவேண்டும். இருந்தும் என்ன? தன் விரல்களுக்கி டையில் எலும்புத் துண்டொன்றைத் துகளாக்குவதன் மூலம் இறைவன் இல்லையென நிரூபித்துவிடலாம் எனக் கருதினான், அபூலஹப்.

என்னதான் இருந்தாலும் அபூலஹபின் சினத்துக்கு ஏதோ ஓர் அர்த்தம் இருக்கவே செய்தது. சவக்குழியிலிருந்து சான்றெடுத்தாவது தான் விளங்கிக் கொள்ளா மர்மமொன்றை நசுக்கிட முனைந்தான் அவன். அந்த ஞானம்கூட அவனது நண்பர்களிடம் இருக்கவில்லை. அவர்களது நகைப்புக்கும், கேலிகளுக்கும் மதுரசத்து மயக்கங்களுக்கும் இலக்காயமைந்தது எமது சின்னஞ்சிறிய கந்தைக் கூட்டம்.

அவர்கள் எம்மைப் பரிகசித்தனர்; எம்மீது உமிழ்ந்தனர்; சாணத்தை யும் வெறுப்பையும் எம்மீது எறிந்தனர். உமிழ் நீரையெல்லாம் அவர் களது ஈரச் சளியாய்க் கொண்டு துடைத்தெறிந்து விடலாம். எனினும், நபிகளாரை அவர்கள் அவமதித்தமையே எம்முள் குருதி வடியச் செய்தது. சுவனத்தின் மதிப்பை, வானவர் தம் விருப்பைப் பெற்றுக் கொண்ட ஒருவர், மரணத்துக்காளாகி மறைந்து விடும் இந்த அற்ப மானிட ஜன்மங்களின் பரிகசிப்புக்காளாகலாமா? இறைவனின் தூதரோ அனைத்தையும் பொறுமையுடன் தாங்கி நின்றார்கள். நிச்சயமாக, பொறுமையே இறைத்தூதர்தம் பேராயுதம்; ஏக இறையோன் அளித்த மார்புக் கவசமும் அதுவே. இவையேதும் எனக்கில்லை.

இக்ரிமாவின் தலைமையில் ஒரு நாள் சிலர் என்னை வளைத்துக் கொண்டனர். அனைவரும் என்னையே தம் விரல்களால் சுட்டி நின்றனர். எவரும் எதுவும் உரைத்தனரில்லை; சொல்லேதுமில்லை; ஒலி யேதும் எழவில்லை. சிறியதொரு குறுநகையே அனைவர் முகங்களிலும் சிலிர்த்தது. நான் அஞ்சியிருக்க வேண்டும். ஆம்! வகையறியாது நாக்குழறினேன் நான். வலப்புறமாய் நான் திரும்பினால் ஒருவன் தன் விரல்களால் ஊசிபோல் என் இடப்புறம் குத்துவான். பம்பரமென என்னைச் சுழலச் செய்தனர். தெம்பிழந்தேன்; அவர்களது விரல்களின்

வலையில், புன்னகைச் சுழிகளில் சிக்கித் தவித்தேன். முன்னாள் அடிமையை வீழ்த்தி முறியடிக்கும் அத்தனை வித்தைகளும் கைவரப் பெற்றிருந்தோர் அவர்கள்.

முழங்கும் சிரிப்புகளுடன் அனைவரும் அகன்றனர்.

அப்போதைய நிகழ்வுகளை இப்போது அசைபோட்டுப் பார்க்கிறேன். அவர்கள் எம்மை வெறுத்தமைக்குக் காரணம் சாதாரண மானிட இயல்பே எனப் புரிகிறது. சத்தியம் தன் தலையை உயர்த்தும்போதெல்லாம் தமது வாழ்வில் பூதம் ஒன்று வந்து நுழைந்துவிட்டதுபோல் அஞ்சி, முந்திச் சென்று, அதனை முளையிலேயே கிள்ளியெறிய முனைதல் மானிட இயல்பு; நியதி. சத்தியம் எப்போதும் ஆரம்பத்தில் பகை போலவே தோன்றும். எனவேதான், அதன் மீது அத்துணை வெறுப்பும், காழ்ப்பும்.

## பரிகாசத்தின் முடிவு

இந்த பரிகாசச் சிரிப்புகள் ஒருசமயம் முற்றுப் பெறவே வேண்டும். நிச்சயமாக அபூஸுஃப்யான் விதூஷகரல்ல. அவரது சிறு சாட்டையும், சிந்தனையில் ஆழ்ந்துள்ளது போலத் தாளம் தப்பாத அசைவில் எழும்; விழும். இஸ்லாம் தொடங்கியதுமே அது ஒரு புரட்சி என்பதைப் புரிந்திருந்தார் அவர். இறைவன் பற்றிய புதியதொரு பரிமாணத்தை மட்டுமல்ல, மானிடர்க்கும்கூட புதியதொரு பரிமாணத்தை முஹம்மது கற்பித்தார். சொத்துகள், உடமைகள் பெரியனவோ, சிறியனவோ அனைத்துக்கும் வரியொன்று விதிக்கப்பட்டது. பணமோ, பொருளோ உடமையோ எதுவாயினும் உள்ளார், இல்லாரோடு பகிர்ந்துகொள்ளல் வேண்டும். ஆம்! நிச்சயம் இது ஒரு புரட்சிதான். வணிகர் குலத்தின் வன்மைக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைந்தது இஸ்லாம். அது தனியார் ஆளுமையோ, அரசியல் ஆளுமையோ எதுவாயினும் சரியே, வலிமை யிலார்க்கு உரிமைகளை அளித்த அது, கோத்திரங்களின், குலங்களின், தனித்துவ உரிமைகளை மறுத்துரைத்தது. முஸ்லிம்கள் தம் வாழ்வைத் தத்தம் குடும்பங்களுக்கல்லாது இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணிப்பது. இவ்வாறான ஓர் எதிர்காலத்துக்கு அரேபியாவில் இடமளிக்க முடியாது.

முஹம்மதை மெய்ப்பொருள் காண வைப்பதற்கு அனைவரும் முயன்றனர் - அபூஸுஃப்யானும் கூடத்தான். அதாவது, அவர்கள் சரியெனக் கொண்டவற்றை ஏற்கச் செய்வதற்கு, சமூகத்தில் உயர் அந்தஸ்தை, அதிகாரபலத்தை, மட்டுமன்றி கஅபாவின் வருமானத்திலிருந்து ஒரு பங்கைக்கூட லஞ்சமாய்க் கொடுக்க முனைந்தனர் அவர்கள். தீர்க்க தரிசன ஞானத்தை லோகத்தின் அற்பப் பொருள்களுக்கு விலைபேசி விடலாம் எனக்கருதினர் அம்மூடர். மானுடக் கற்பனையிலும் இயலாக் கரும மொன்றை அவர்களுக்குச் சவாலாக விட்டனர் நபிகளார். ''என் வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் வைத்தாலும் கூட என் தூதினை நான் கைவிட மாட்டேன்; இறைவனே அருளிய தூது அது'' எனக் கூறிய அண்ணலார், அவர்களின் ஆன்மாக்களுக்கு இரங்கியவராக, ''உங்கள் குழந்தைகளைக் கொலை செய்துவிடாதீர்கள்'' என்றவாறு அகன்று சென்றனர்.

குழந்தைகளைக் கொல்வது என்பதின் கருத்து என்னவென்பதை நான் உங்களுக்கு விவரித்தே தீரவேண்டும். ஏனெனில், கடந்த முப்பது வருட காலத்திற்குள் முஹம்மது இந்த உலகைக் குலுக்கிச் சுழற்றி முன்

தள்ளி விட்டுச் சென்றுள்ள வேகத்தில் நாம் விண்மீன்களுக்கிடையில் வீசப்படாமல் இன்னமும் இந்த மண்ணில்தான் வாழ்கிறோமா என வியக்க வேண்டியுள்ளது.

என்ன சொன்னாரோ, அதையே மனதிலும் நினைத்தவர் நபிகளார்: ''உங்கள் குழந்தைகளைக் கொலை செய்துவிடாதீர்கள்!''

இஸ்லாத்துக்கு முன்னைய பாலை மணல் வாழ்வில், தாயின் உடலிலிருந்து பாதங்கள் வெளிவரு முன்னமேயே பிறக்கும் குழந்தையின் விதி நிச்சயிக்கப்பட்டுவிடும். குழந்தை ஆணாயின் மகிழ்வு; பெண்ணாக இருந்தாலோ வெறுப்பு. காதுகளுக்குள்ளாக இரகசியம் பேசிக்கொள்வர். போதியளவு பெண் குழந்தைகள் ஏற்கெனவே குடும்பத்துள் இருந்தால், அல்லது கோத்திரத்துக் கூடாரங்களுள் கூடுதலாகவே இருந்துவிட்டால் பிறந்த மழலையின் விதி முடிந்தது. மணிக்கொடி தறிக்கப்பட்டதும் பாலைவெளியினுள் அவள் கொண்டு செல்லப்பட, உடலை மணலால் மூடிக் கொல்வார்கள்.

கொலையையும் ஒரு கலையாகவே கொண்டிருந்த அம்மக்கள் பெண் சிசுக் கொலையை நியாயப்படுத்தத் தர்க்கரீதியான காரணங்களையும் கைவசம் வைத்திருக்கவே செய்தனர். உயிரை எடுப்பதால் உயிர் காப்பதே அவர்கள் செய்தது. பிரச்சினைக்குத் தீர்வு காட்டுவது தாமல்ல; பாலையின் பொருளாதாரமே என்பர் அவர்கள். புதியதொரு வாய் என்பது வேறோர் உடம்பின் வெறுமையான வயிறு. மட்டுமல்ல, பெண்ணெனும் பிறப்பு, தன்னினத்தை பெருக்கி வளர்க்கின்றது. பெருகிப்பெருகிக் கடவுளரின் தேர்வையும் அவர்களே நடத்துகின்றனர். ஆண்களிலும் அதிகமாகப் பெண்கள் பெருகும் இச்சமமின்மையைத் திருத்தியமைத்தலே அவர்கள் செய்தது. பருவ வளர்ச்சிப் பயன் நிச்சயம் தேவையானதே. அதற்கெனச் சில பெண் சிசுக்கள் காருண்ய மனதுடன் விட்டு வைக்கப்பட்டன.

அவர்களது வாதங்களைச் செவியுறுவது அவலத்தையே விளைவிக்கும், படைப்பின் புனிதத்துவம் அவர்களுக்குத் தெரியவில்லை என்றாலும், யாருக்காக யார் அழுவது? அரேபியாவில் நபிகளார் பெண்டிருக்கான சமத்துவம் குறித்துப் பிரச்சாரம் செய்து வந்த அதே வேளை, பிறிதொரு தளத்தில் கிறிஸ்தவ பிரதம குருக்கள், பெண்களுக்கு ஆன்மா உண்டா இல்லையா எனத் தீர்மானம் செய்ய மாநாடு நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களது தீர்ப்பு என்னவென நான் அறியேன். இங்கே ஸிரியாவில் அனைத்தும் கூறுவர்; ஒன்றும் கூறாமலும் விடுவர். பெண்களைப் பொறுத்தவரை மதங்கள் கொண்டுள்ள முரண்பாடான கருத்துகளையெல்லாம் எண்ணியெண்ணி நான் வியப்படைகிறேன். கிறிஸ்துவின் தாயார் மர்யத்தைப் பெருமையாய் மதித்துப் பாராட்டும் அதே மக்கள்,

மானிடர்க்கெல்லாம் தாயான ஹவ்வாவை எத்துணை எளிதாக அவ மரியாதை செய்கின்றனர் என்பதெல்லாம் எண்ணி வருந்துகிறேன்.

பல கடவுளரை மறுதலித்ததை விடவும், மதலையர்க்களித்த பாதுகாப்பை விடவும், அவர்களைச் சினங்கொள்ளச் செய்தது, நபிகளார், மனைவியரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியமையாகும். முஹம்மதின் முன்னரோ, உடல்தினவு திருப்தி காணும்வரை அல்லது ஒட்டகைச் செல்வம் போதுமான அளவு உள்ள வரை மனைவியரைக் கொள்வதில் பின் தங்காதோராயினர் ஆடவர். சிலரின் நறுமணப் பஞ்சணையில் ஒருத்தி நகர்ந்து இன்னொருத்தி வந்து தன் மன்னவன் அருகில் உறங்குவதும், அவர்கள் தொகை பத்தும் இருபதும் என்று பெருகுவதாக இருந்தது.

இஸ்லாம், மனைவியர் எண்ணிக்கையை நால்வர் என வரையறை செய்தது. தனியொரு மனைவியைக் கொண்டிருத்தலே மேன்மை எனும் ஆணையும் கூடவே விதியானது. நால்வர் மனைவியராயின் நால்வருமே சமமாய் மதிக்கப்பட வேண்டும். மனைவியெனும் உரிமையால், அவர்கள் மீதான கடமைகள் குறைவற, சரிவர நிறைவு செய்யப்பட வேண்டும். இயலாவிட்டால் தனியொரு மனைவியைக் கொள்தலே தக்கது.

பெருங்கொடையாக வாய்த்த இச்சிறப்பினை விரும்பி அனுபவிக்கப் பெண்டிர் விரைந்தனரோ? - அவ்வாறேதும் நிகழ்ந்து விடவில்லை. அவர்களும் நபிகளாரை நிந்தனை செய்தனர். அவர்கள் செய்த போர் முழக்கங்கள் இன்னமும் என் செவிகளில் எதிரொலிக்கின்றன. சட்டத் திற்கமைந்து ஐந்தாம் மனைவியை எவரும் அனுப்பிவிட்டால் அவளை யார்தான் பொறுப்பேற்பார்? யார்தான் வீட்டுக்குள் சேர்த்துக் கொள்வார்? யார்தான் மனைவியாய்க் கொள்வார்? யாரே உணவளிப்பார்? யார் தழுவுவார்? பாலை வாழ்வில் பல மனைவியரைக் கொண்டிருத்தல் சர்வ சாதாரணம். அதற்குக் காரணம் ஆடவரது வன்பேராசை என்பதை விட அவர்களின் பரந்த உதார உள்ளம் என்றே கூறலாம். எனவே, மனைவியர்க்கியற்றிய வரையறையானது ஆரம்பத்தில் பெரும் குழப்பங் களை ஏற்படுத்துவதாக அமைந்தது. பெண்கள் அனைவர்க்கும் இரக்க மேதுமிலாக் கொடுமையொன்றாகவே இது கொள்ளப்பட்டது.

அத்துடன் நிறுத்திவிடவில்லை நபிகளார். இதயத்துள் வானவர் ஒருவர் முகிழ்த்துள்ள நிலையில் நன்மைகள் விளைத்தலை எப்படித் தான் நிறுத்தலாம்? இரு சாரார்க்கிடையிலும் வேற்றுமைகள் இருந் தாலும்கூட, பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்களே என வலியுறுத் தினர் நபிகளார். பெண்ணானவள் ஆணுக்கொரு பெருந்துணை மட்டுமல்ல; இருவரும் ஒருவருக்கொருவர் பாதுகாவலர் எனவும்

மொழிந்தனர். இருவர்க்கும் ஒன்றே இறுதித் தீர்ப்பு நாள். ஒன்றே தீர்ப்பும் என்றும் பகர்ந்தனர்.

நபிகளாரை இன்று உளமார விரும்பிப் போற்றும் இந்த உலகம் அன்றைய போழ்தில் இந்த எளிமையான கருத்துகளுக்காகவே அவரை வெறுத்துத் தூற்றியது. ஒரு காலத்தில் இழிவுக்கும் பரிகாசத்துக்கும் உள்ளாகும் எண்ணங்களே பின்னொரு காலத்தில் போற்றிப் புகழப் படுகின்றன. முற்றிலும் சுவை பெறுவதற்கு முன்னர் பழமானது கசக்கத் தானே செய்கின்றது!

என்னையோ, என் மனைவியையோ சமமாய்ப் படைத்தனன் இறைவன் என நான் சிலவேளை வியப்புறுவதுண்டு. நேற்றைய இரவுதான் ஹெரோடோடஸின் நூலொன்றில் பூரிப்புடன் நான் ஆழ்ந்திருந்தபோது அங்கு வந்த என் மனையாள் பட்டென விளக்கை அணைத்து விட்டாள். ஹெரோடோடஸைவிட என் மனைவியை நான் நேசிக்காது இருந்திருப்பின் நிச்சயம் அவளை அடித்திருப்பேன். யாரறிவார், அவள் ஒரு வேளை நாத்திகர்தம் நூல்களிலிருந்தும் என்னைப் பாதுகாத்திருக்கலாம்.

எவ்வாறாயினும் நான் ஏற்கெனவே கூறியதுபோல பரிகாசச் சிரிப் புகள் இப்போது முற்றுப்பெற்றன.

## அபிஸீனியா நோக்கி...

முதுமையடைந்து, மரணத்தின் வாயிலில் நிற்கும் நிலையிலும்கூட, கொடுமைகள் இழைக்கப்படுவதைக் காணும்போது நான் கொதிக்கிறேன். கொடூரத்தை நன்கு அனுபவித்தவன் என்பதால் நான் மற்ற அனைவரையும்விட, கொடுமைக்கு எதிராகப் பிரார்த்தனை செய்யும் தகுதியும் அறிவும் கொண்டுள்ளேன். பொருள் அறிந்து பிரார்த்திப்பவனது பிரார்த்தனையை நிச்சயமாக இறைவன் செவிமடுப்பான்.

சித்திரவதை செய்வான், தான் பாழ்படுத்தும்
சரீரத்திலேயே தன்னைக் காணும்படி செய்வாயாக!
அதுவே, அவன் காண வேண்டியது. வேறெதனையும்
பெறத் தக்கவனல்லன் அவன்.

தூக்கிலிடுவோனின் சொந்தக் கழுத்தே தூக்கில்
இடப்படும் நிலை வந்தால்;
தான் அளிக்கும் தீர்ப்புக்கு நீதிபதியே உள்ளாகும்
நிலை நேர்ந்தால்; நிச்சயம் அவை மறுக்கப்படலாகாது.

நீதிகேட்டு நிற்போரே நீதிபதிகளாகட்டும். எந்த
ஒரு நீதிபதியும் தனக்கென நீதியைப் புனிதம் செய்து
தன் சொந்தக்கன்றுபோல் கொள்ளும் புன்மை வேண்டாம்.

மனிதக்குல நீதியும், சுவனத்து நீதியும்
இறை ராஜ்யத்தின் ஆதிக்கத்திலேயே உள்ளன.
மனிதக்குல நீதியை மதியாது
இழித்துக் கொடுமை செய்வான்
இறைவன் அருளையே இழிவு செய்கிறான்.
சித்திரவதைகள் செய்வோர் மட்டும் தாம் இழைத்த
பாவங்களுக்காக ஒரு முறையல்ல - இருமுறை பதில்
கூறச் செய்வாயாக! அவர்கள் வதை செய்யும்
வேளையிலேயே தமக்குரிய தண்டனையைச் சுகிக்கச் செய்வாயாக!

கொடுமையைக் காணுந்தோறும் கொதித்தெழும், பிறப்பிலேயே அடிமையான கறுப்பன் பிலாலின் பிரார்த்தனை இதுவே. ஓ... நான் மீண்டும் ஒழுக்கவியல் போதனைகள் நிகழ்த்தத் தொடங்கிவிட்டேன்... பொறுத்துக் கொள்ளுங்கள்... வரலாறு கூறுவதாகத்தானே வாக்குத் தந்தேன்? நீங்கள் சுவைத்துக் களிப்பதற்காய், கழியினில் கோத்துத் தீயினுள் பக்குவம் செய்த தக்க பதத்திலான இறைச்சியைப் போலத் தருகிறேன் அதனை.

மூர்க்கமும் கொலையும் மனத்திற்கொண்டோராய் நாங்கள் திகைப் புறும் வண்ணம் திடீரென அவர்கள் எம்மீது வீழ்ந்தனர். விண்ணகம் தான் நபிகளாரின் விழிகள் வழியே கண்ணீர் சொரிகின்றதோ என அண்ணலார் உற்ற துயர் கண்ட நாங்கள் கலங்கினோம். அத்துணை துயர்கள் மத்தியிலும் தான் கொண்ட பாதை விட்டு வேறு வழி நடத்திட அவரால் இயலவில்லை; அவர் முயலவுமில்லை. தீர்க்க தரிசனத்தின் வழி நடக்கும் பாதம் வேதனைகள் மிகக் கொண்டு, உறுதியான கற்பாறை மீது பதிக்கப்பட வேண்டுமென்பதே இறைவனின் விருப்புப் போலும். என்றாலும், அவ்வழியில் பின்தொடர்ந்து செல்வோர்க்கோ நன்மை பயக்கும் மாபெரும் செய்திகளுடனான, மகிழ்வும் எளிமையும் மிக்க தொரு மார்க்கமாக அது அமைந்திருக்கிறது.

இஸ்லாத்துக்காக மரணத்தைச் சுகித்த முதல் தியாகி ஒரு பெண். அபூ ஜஹ்ல் தன் அறிவீன வெறியில் அப்பெண்ணினுள் ஈட்டியைப் பாய்ச்ச, சுவனம் அடைந்தார் அம்மாது. அவர் பெயர் ஸுமையா. அம்மாரின் தாய் அவர். ஹுபலை வணங்கிட மறுத்ததே அவர் செய்த குற்றம்.

கூர்முனை ஆயுதங்களால் குத்தப்பட்டும், சாட்டைகளால் விளாசப் பட்டும் ஏனைய பலர் மரணத்துள்ளாக்கப்பட்டனர்; அல்லது மரணத்தின் வாயில் வரை தள்ளப்பட்டனர். துயர்களினால் வளைந்து இஸ்லாத்தின் உறவினைத் துறந்தனர் சிலர். மெய்தான்; என்றாலும், சாட்டையின் இயல்பினை நன்கறிந்த நான் நிச்சயம் இம்மண்ணுடல்களை மன்னிக்கவே செய்வேன். அவர்களது சக்திக்கப்பால் வருத்திட விரும்பாமல் இறைவனே தன்னை மறுத்துரைக்க அவர்களை அனுமதித்தான் போலும். என்றும் கருணை மிக்க இறைவன் தாங்கிட இயலாப் பளுவெதனையும் ஒரு போதும் மனிதன்மீது ஏற்றுவதில்லை.

ஒருவர் பின் ஒருவராக அவர்களது வதைகளை அனுபவிக்க வேண்டி யவர்களானோம். நபிகளார் செயல்பட வேண்டியது அவசியமாயிற்று. குடும்பப் பாதுகாவல் ஏதும் இன்றிப் பலவீன நிலையில் இருந்தோர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று அண்ணலார் முடிவெடுத் தார்கள். குடும்பங்களின் பகைமைகளை, அல்லது வம்சப் போராட்டங் களை அஞ்சி, அவர்களது துயருறுத்தல்களினின்றும் தப்பித்திருக்கக் கூடியவர்கள் ஊரிலேயே இருந்து கொள்ளலாம். எனக்குப் பாதுகாவலர் அபூபக்ர் என்பதால் நானும் தங்கியிருக்க முடிந்தது.

ஓர் இரவு, அலீயின் மூத்த சகோதரர் ஜஅபர், பெண்டிர் மூவரும் ஏனையோர் ஆண்களுமாகப் பதிமூவருடன் பாலையுள் மறைந்து தப்பினார்கள். அவர்கள் நாடியது, கடலின் அப்பால், நான் அறிந்திராத எனது நாடான அபிஸீனியாவை. நீதிக்குப் பெயர் பெற்ற கிறிஸ்தவ அரசர் ஒருவரின் ஆளுகையில் இருந்தது அப்போதைய அபிஸீனியா. பழகிய

தடத்தில் செல்வது பாதகம் விளைக்கும் என்பதால் கிணறோ மனிதரோ இல்லாத பாலையின் வறண்ட பகுதிகளூடாக அவர்கள் சென்றனர். இம்முதல் அகதிகளுக்குப் பாலை வெளியின் கொடுஞ்சுரத்தில் இருந்த ஒரே நிழல், அவர்களின் இறப்பை எதிர்பார்த்து அவர்களது தலைகட்கு மேலாகச் சுற்றிப் பறந்துகொண்டிருந்த கழுகுகளின் சிறகுகள் மட்டுமே.

பெரிய நகரங்களைவிடச் சிற்றூர்களில் கூர் விழிகள் அதிகம். பாலையுள் மறைந்தோர் குறித்து மக்கா விரைவிலேயே அறிந்து கொண்டது. அக்கணத்திலேயே அவர்களைப் பிடித்துக் கொண்டுவர வீரர்கள் சிலரைக் குதிரைகளுடன் அனுப்பினார் அபூஸுஃப்யான். உசிதத்தைப் பொறுத்துப் பாலையிலேயே அவர்களை முடித்து விடவும் உத்தரவிடப்பட்டது. அவர்களது பாதச் சுவடுகளைக் குதிரை வீரர்கள் கண்டது மட்டுமல்ல, அவர்களை அடுத்தே சில மைல் தூரம் பயணமும் செய்தனர். என்றாலும், அக்குதிரை வீரர்கள் இவ்வகதிகளைக் காண்பதையோ, அவர்களது குதிரைகள் மோப்பம் பிடிப்பதையோ இறைவன் தடுத்துவிட்டான். குளம்புகளுக்கும், கொடுவாள்களுக்கும் இடையில் இடுக்கண் உறாது நடந்து சென்றார் ஜஅபர். அற்புதம் தான் நிகழ்ந்ததென நம்புவீராயின் நம்புக! நானோ, பாலையை, அதன் விழி கூசச் செய்யும் பிரகாசத்தை, மணல் மேடுகளின் நீண்டு பரந்த கறு நிழலினைப் பயன் படுத்தும் வகைமுறை தெரிந்த ஜஅபரின் திறமையைப் போற்றுவேன். அற்புதங்களே நிகழ்ந்தன என்றாலும், அவையும் ஜஅபரினதே. தன் நிழலின் இருளுக்குள்ளேயே தன்னை மறைத்துக்கொள்ளும் தனித் திறன் வாய்ந்தவர் அவர். ஆனாலும், சந்தேகமின்றி இறைவன் ஜஅபருக்கு சாதுரியத்தை அதிகமாகவே ஈந்திருந்தான்.

வருந்தும் விழிகளுடன், மறைந்தோரைத் தேடியதற்கு ஆதாரமாய்ச் சமர்ப்பிக்கச் சான்றுகள் ஏதும் இல்லாதோராக, அபூஸுஃப்யான் அனுப்பிய வீரர்கள் சோர்ந்து குலைந்து மக்கா திரும்புவது கண்டு, தப்பிச் செல்வதே தக்க செயல் எனக் கொண்ட நாங்கள் ஏனையோரையும் அனுப்ப லானோம். இருபாலாருமாய் எண்பத்து மூவர் செங்கடல் கடந்து அபிஸீனியா அடைந்தனர்.

அபிஸீனியாவிலும் ஆபத்து தொடரவே செய்தது. மக்காவில் அபூஸுஃப்யானின் குரல் வரவர ஆழ்ந்து, பணிந்து, மிருதுவாய், அபாய மிக்கதாக மிளிரலாயிற்று. அக்காலவளவில் அபூஸுஃப்யான் பேசுவதைச் செவிமடுக்க வேண்டுமாயின் அவர் முன் நெருங்கிக் குனிந்திருக்க வேண்டும் என்பர். சற்றே பின் சாய்ந்தால் உம் முன் விழுந்து அழியுமே தவிர உம் செவிகளுள் விழாது அவர்தம் வார்த்தைகள். ஆயினும், விறற்கடை அவர் முன் குனிந்தாலோ, அனைத்தையும் நீங்கள் தெளிவான, தூய சொற்களில், மிகத் துல்லியமாகக் கேட்கலாம். ஆம், அவரது

கௌரவம் கேள்விக்குள்ளாகியிருந்தது. அடுத்துள்ள நாடொன்றில் மக்கத்து மக்கள் எண்பத்து மூவர் தப்பிச் சென்று திரிவதை அனுமதிக்க முடியாது - அது வர்த்தகத்திற்குக் கேடு விளைவிக்கும். பாலை வெளியிலோ, பரந்த செங்கடலிலோ அவர்களைக் கைப்பற்ற முடியாவிட்டால் அவர்கள் மறைந்திருக்கும் இடம் சென்றேனும் அவர்களைக் கொண்டு வர வேண்டும் - ஜூடாக்களின் சிங்கம் எனத் தன்னை வர்ணித்துக் கொண்ட அப்பேரரசர் நஜ்ஜாஷீயின் அரியாசனத்தின் கீழே அவர்கள் பதுங்கியிருந்தாலும் சரியே.

ஜூடாக்களின் சிங்கத்தை நாடி அம்ர் இப்னு அல்-ஆஸின் தலைமையில் பெருமதிமிக்க பரிசுகளையும் நட்புறவுக் கடிதங்களையும் சுமந்து சென்றது ஒரு தூதுக்குழு. இப்போது எகிப்தை வென்று வாகை சூடியுள்ள பெருவீரனான அம்ர், அன்றைய காலத்தில் விரல் நுனியிலேயே வேண்டியனவெல்லாம் கொண்டிருந்த மென்மையான ஓர் இளைஞன். அம்ருக்கு இறைவன் தோல்வியை அருளினான். இல்லையேல், எண்பத்து மூன்று ஆன்மாக்களைச் சங்கிலியிலும், தன் சொந்த ஆன்மாவை நரக நெருப்பிலும் பிணைத்திருப்பார் அவர். எனவேதான், அம்ர் மீது இறைவன் தோல்விக்கணையைத் தொடுத்தான் என்றேன். அது ஒரு வரலாறு.

அரசர், முஸ்லிம்கள் அனைவரையும் தன் அவைக்கு அழைத்து, சங்கிலியால் பிணைக்கப்பட்டவர்களாக அவர்கள் ஏன் மக்காவுக்குத் திருப்பி அனுப்பப்படக் கூடாது என வினவினார். நிர்க்கதிக்குள்ளான ஜஅபர் திணறினார்; திகைப்புற்றுத் திக்கினார்; தொண்டைக்குள் சிக்கிய சொற்கள் இரண்டனையோ, நடுங்கும் தன் பாதங்கள் இரண்டையுமோ ஒரு சேரச் செய்ய கட்டுப்படுத்த முடியாமல் தவித்தார்.

வெறுப்பும் சினமும் அம்ரில் மின்னின. தன் தர்க்க வாதங்கள் அத்தனையையும் வேதத்து முதுகில் முழக்கியேற்றினார் அவர். தீர்க்க தரிசனம்தான் அவர் சவாரி செய்யும் வாகனமோ என எண்ணத் தோன்றியது. ஜஅபர்மீது குற்றங்கள் பல காட்டிக் கொதித்தார் அம்ர். ஜஅபர் செய்தது தேசத்துரோகம்! மோசத் தூதரின் மொழியினால் வழி பிறழ்ந்து சமூக ஒழுங்கைச் சிதைக்கும் புல்லுருவித்தனம்! தாம் சார்ந்த மதத்தையும் சமூகத்தையும் துறந்தோடும் அற்பத்தனம்! தேவ நிந்தனை செய்யும் அறிவீனம்! இறுதியாகவும், தீர்க்கமாகவும், இஸ்லாம் என்பதே நகைப்பை விளைக்கும் அபத்தம் என நிறுவினார், துணுக்குக் கல்போல தூய நாத்திக அம்ர். அவர் கொண்டிருந்த சமய அறிவு சிறிதே. ஆயினும், ஏளனத்தறிவோ ஏராளம். அச்சில நிமிடங்களுள் அபிஸீனிய அரசவை முழுவதும் சிரிப்பில் ஆழ்ந்தது. ஜஅபருக்கான சங்கிலி தரையில் அலைந்தது. என்ன செய்வது? புத்தி சாதுரியத்தை மனிதனுக்களித்த இறைவன்தான் அறிவீனத்தையும் அளித்துள்ளான். சிலபோது ஒரே

தலையினுள்ளேயே இரண்டையும் கலந்திருப்பான். அம்ருக்கு நிகழ்ந்ததும் அதுவே. அவர்தன் வெற்றியில் தழுவினார் தோல்வி. அல்லது, வரலாற்றின் சாலைகள் பல கடந்துவிட்ட இப்போதைய என் பார்வையில், அவர், தோல்வியில் கண்டார் வெற்றி!

அது நிகழ்ந்தது இவ்வாறு தான். இறைத்தூதர்க்கெல்லாம் இறுதி முத்திரையாய் வந்த முஹம்மது அவர்களுக்கு முன்னர் வந்த ஏராளமான இறைத்தூதர்களுள் ஒருவரான, யேசுநாதர் எனும் இறைத்தூதர் ஈஸாவை நாம், முஸ்லிம்கள் அறிந்துள்ளவாறு கூறினார் ஜஅபர். இருந்தும் மக்கள் நேசம் மித மிஞ்சிவிட்டதன் காரணமாக அர்ச்சனைக்கும் உள்ளானார் யேசு.

அபிஸீனியாவிலும் யேசுநாதர் மீதான மக்களின் அன்பு ஆழப்பதிந் திருந்தது. அவரது பெயர் கூறப்பட்டபோதே அக்கிறிஸ்தவ அரசரின் கண்களில் நீர் துளிர்த்தது. சினத்தின் சிலிர்ப்பு எனவே, அக்கண்ணீர்த் துளியினைக் கொண்டார் அம்ர். ஆன்மாவின் குருட்டுத்தனம் மிகப் பயங்கரமானது. அக்கணத்தில் அம்ர் பார்வையிழந்தவரானார். தம் மேற்போர்வையினை மிக்க அமளியோடு தோள் மீதெறிந்து, கால்கள் இரண்டையும் வெற்றிக் களிப்பில் அகற்றி வைத்து, கொடுவாள் கொண்டதொரு கொலைஞன் போல் நின்று, தனது இறுதிப்பானத்தை விடுவிக்கலானார் அம்ர், ஜஅபரே என்னிடம் கூறியவை இவை:

''யேசுக்கிறிஸ்து பற்றி இவர்கள் கூறும் பொய்கள் தான் எத்தனை! கிறிஸ்து வெறுமனே மற்றுமோர் இறைத்தூதரே தவிர அவர் இறைவனின் மகன் அல்ல என்கிறார்கள். தந்தை, தனயன், தரணியில் எவருமே கண்ணுறா ஒன்று என கடவுளர் மூவரை நீங்கள் வணங்குவதாக அவர்கள் கூறுகின்றார்கள். கிறிஸ்துவின் புனிதத்துவத்தை மறுத்து, மனிதரே அவர் என்கிறார்கள்.''

எத்துணை புலமையாளன் இந்நாத்திகன்! எத்துணை தெளிவான, எல்லா மதத்தையும் கற்றறிந்தவருடையதே போன்ற உரை! தம் முழுமுதல் தலைவர் குறித்து கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள கருத்துக் களை முஸ்லிம்கள் யேசுநாதர் குறித்துக் கொண்டுள்ள நம்பிக்கை களுடன் முரண்படுத்திக் காட்டுவதில் எத்துணை அழகிய நுண்மை யைக் கையாண்டார் அம்ர். ஜஅபரின் திசையில் திரும்பினார் மன்னர். ''கிறிஸ்து நாதரின் லௌகீக பிறப்பு குறித்து எமக்குக் கூறும்''. 'லௌகீகப் பிறப்பு' எனும் வாசகத்தைப் புறங்கையால் ஒதுக்கிவிடுவது போன்ற மன்னரின் பாவனையே சிறைக்காவலரை முன்னால் வரச்செய்யும் சாடையாகவும் அமைந்தது. ஜஅபர் அக்காவலரின் இடையில் நுழைந்து முன்வந்து கூறினார்: ''கிறிஸ்துவின் பிறப்பு குறித்துக் குர்ஆன் கூறுவதையே நான் கூறுவேன். நான் அறிந்தது அது மட்டுமே!''

முற்றும் நம்பிக்கையிழந்ததோர் குரல் அது. எனினும், அது அரசரின் சிரசை உயர்த்தியது. அப்போதுதான், இழந்திருந்த தம் குரலை மீண்டும் பெற்றுக்கொண்டார் ஜஅபர். அது தவிர, அவருக்கு வேறு மீட்சி இல்லை. பேச்சு மட்டும்தான் அவருக்கிருந்த ஒரே பற்றுகோல். சங்கிலிக் கோவையை நோக்கியோ, சிம்மாசனத்திருந்த மன்னரின் சினத்தை நோக்கியோ, அரியாசனத்தை அடுத்து கருங்கற்சிலைகளாய்க் கர்ச்சித் திருந்த நான்கு சிங்கங்களை நோக்கியோ, எங்கேனும் நோக்கிப் பேசுவது மட்டுமே பிழைப்பதற்கிருந்த ஒரே வழி. சிலர் கூறுவர், பிலால் போல் செவ்வையாய்ப் பேசினர் ஜஅபர் என்று - என் பெயர் இங்கு வருவதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும் - இருபது ஆண்டுகள் கழிந்தபின் அம்ரே என்னிடம் அவ்வாறுதான் கூறினார். ஆனால், பிலால் ஒரு தாரை மட்டுமே, தொழுகையின் வேளைகளை மட்டும் அறிவிக்கும் பேச்சாளர்; உயரத்திருந்தே உரைசெய்யும் வசதி படைத்தவர். அம்ரோ இன்னமும் தன் தேன்கூட்டில் தேனீ பிடிக்கின்றார்.

உய்யும் வழி பிறிதேதும் இல்லா ஒருவன் போல், அறிவுறுத்தல் செய்யும் திண்மையுடன் அன்றைய தினம் பேசத் தெரிந்திருந்தார் ஜஅபர். பிரமிப்படைந்திருந்த அவர்களது முகங்களுக்கெதிரே, கன்னித்தாயின் கருப்பையிலிருந்து அவதரித்த இறைத்தூதர் ஈஸாவின் பிறப்பு பற்றி, பத்தொன்பதாம் அத்தியாயம், மர்யத்தின் வாசகங்களை ஓதினார் அவர். அவ்வவ்வரிகளை, அவ்வந்நிலைகளில் செவ்விய முறையில் சிறப்புறவே ஓதியதால் இறைவனே அவ்வார்த்தைகளை அளித்தவன் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவுகூறும். அவர் தன் குடும்பத்தி னரை விட்டு விலகி, கிழக்குத் திசையிலுள்ள அறைக்குச் சென்று தன் மக்களின் முன் திரையிட்டுக் கொண்ட சமயத்தில் நம்முடைய தூதரை அவரிடம் அனுப்பி வைத்தோம். அவர் சரியான ஒரு மனிதருடைய தோற்றத்தில் அவர் முன் தோன்றினார்.

(மர்யம்) ''நிச்சயமாக நான் உம்மிடமிருந்து என்னை இரட்சித்துக் கொள்ளு மாறு ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன். நீர் நன்னடத்தை உடையவராக இருந்தால்... (இங்கிருந்து அப்புறப்பட்டு விடும்)'' என்றார்.

அதற்கவர் ''பரிசுத்தமான ஒரு மகனை உமக்களிப்பதற்காக நான் உம் இறைவனால் அனுப்பப்பெற்ற ஒரு தூதர்தான்'' என்றார்.

அதற்கு அவர் (மர்யம்), ''எனக்கு எவ்வாறு மகன் ஏற்பட முடியும்? எம்மனித னும் என்னைத் தீண்டியதில்லையே! நான் கெட்ட நடத்தை உள்ளவளும் அல்லவே!'' என்று கூறினார்.

அதற்கவர், ''அவ்வாறே (நடைபெறும்) 'அது எனக்கு எளிது; அவரை

மனிதர்களுக்கு ஒரு அத்தாட்சியாகவும், நம்முடைய அருளாகவும் நாம் செய்வோம். இது விதிக்கப்பட்ட ஒரு விஷயம்' என்று உமது இறைவன் கூறுகிறான்'' என்றார்.

பின்னர் (தானாகவே) மர்யம் கருக்கொண்டார். கர்ப்பத்துடன் (அவர் வெளியேறி) தூரத்திலுள்ள ஓர் இடத்தைச் சென்றடைந்தார்.

பின்பு, அவருக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டு, ஒரு பேரீச்ச மரத்தடியில் சென்ற பொழுது, ''இதற்கு முன்னதாகவே நான் இறந்திருக்க வேண்டாமா! முற்றிலும் நான் மறக்கடிக்கப் பட்டிருப்பேனே'' என்று (அரற்றி)னார்.

(மரத்தின்) அடிப்புறமிருந்து (ஜிப்ரீல்) அழைத்து ''நீர் கவலைப்படாதீர்! உமக்குச் சமீபமாக உம் இறைவன் ஓர் ஊற்றை ஓடச் செய்திருக்கிறான்.

இப்பேரீச்ச மரத்தின் கிளையை, நீர் உம் பக்கம் பிடித்துக் குலுக்குவீராக. அது பக்குவமான பழங்களை உம்மீது சொரியும். (பழங்களை) புசித்து (ஊற்றின் நீரைக்) குடித்து கண் குளிர்ந்திருப்பீராக!''

*முழுச் சபையின் விழிகளும் அழுதன. எங்கனும் மெல்லொலிகள் எழுந்தன. ஜூடாக்களின் சிங்கம் ஜஅபரை அணைக்கவென அரியணை விட்டு எழுந்தார். சங்கிலிகளுக்குப் பதிலாக அரசரின் கரங்களால் தான் சூழப்பட்டுள்ளதை உணர்ந்தார் ஜஅபர். ''மலையை நிகர்த்த தங்கம் தரினும் உங்களை நான் அவர்களிடம் ஒப்படைக்கமாட்டேன்'' எனக் கூறிய நஜ்ஜாஷீ தரையின்மீது தன் கைத்தடியால் கோடொன்றை இழுத்தார். வேதாகமத்துக்கும் குர்ஆனுக்கும் இடையிலுள்ள வேற்றுமை எத்துணை சிறியதென்று காட்டிட. குலுங்கிய கால்களுடன் செய்வ தறியாது தவித்தார் அம்ர். என்றாலும், அம்ர் அல்லவா! அரசரை நோக்கி மெல்ல தலையசைத்து, அனைத்தும் ஒரு சூதாக, தற்போதைக்குத் தன் பகடைக்காய் தவறுதலாக விழுந்துவிட்டதாகக் காட்டிப் புன்சிரிப் பொன்றை உதிர்த்து நின்றார்.*

*சிங்கங்களுக்கும், தேனுக்கும், நீதிக்கும் பெயர் பெற்றிருந்த அபிஸீனிய நாடு அது. பண்டமாற்றின் வணிகக் கூடங்களின் நகரான மக்காவின் தராசுகளில் நிறுக்கப்பட்டது நீதியல்ல - வாசனைத் தைலங் களும் பண்டங்களும் மட்டுமே. இறைவாசகங்கள் மக்கத்தார்தம் புலன் களுக்கு உள்ளாகவில்லை. அவர்களது செவிகள் கேட்டன. இருந்து மென்ன? அவர்களது இதயங்கள்தாம் குருடாகி விட்டிருந்தனவே!*

*சாட்டை விளாசல்களினும் கொடியதான, தயவே இல்லா வாட்டுதல் வகையொன்று முஸ்லிம்களின் மீது வீழ்ந்தது புதிதாய். மனிதத் துவத்தையே தண்டனைக்குள்ளாக்கும் படுபாதகமானதொரு கொடூரம் அது. நபிகளாரின் கோத்திரமான பனூஹாஷிம்கள் அனைவருமே ஆதரவின்றி சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். எவரும் அவர்களை உபசரிக்க இயலாது. உறைவிடமோ, ஆதரவோ, ஒரு பிடி*

உப்போ, சீனியோ, நிழல்கூட அளிக்க முடியாது. நாடு கடத்தி நகர்த்தப் பட்டவர்களாக, தம் முதுகு தாங்கும் சில பொருட்களை மட்டுமே கொண்டவர்களாகப் பாலையுள் தள்ளப்பட்டனர் அவர்கள். நபிகளாரின் செய்தியை அவர்கள் நம்பினரோ இல்லையோ, அவர்தம் போதனை களைச் செவியுற்றனரோ இல்லையோ, அவர் மீது அன்பு காட்டினரோ இல்லையோ அனைவரும் அவருடன் ஒன்றாகத் தண்டிக்கப்பட்டனர். கொடும்பிணி கொண்டான் ஒருவனைக் கடிந்து துரத்தல்போல வேதனை விளைக்கும் பாலையினுள் தள்ளப்பட, நபிகளாரின் கோத்திரத்தில் கொஞ்சமேனும் சேர்ந்திருந்தால் போதுமாயிருந்தது. அவரின் ஒன்று விட்ட ஓர் உடன் பிறப்பின் ஒன்றுவிட்ட ஓர் உடன் பிறப்பாயிருப்பதும் அன்றைய நிலையில் ஆபத்தையே தருவித்தது. பித்துப்பிடித்த முஸ்லிம்கள் பாலை மணல் வெளியில் சூரியக் கதிரின் வெப்பத்தில் கருகி அழிந்து ஒழியட்டும் எனக் கருதிய அபூஸுஃப்யானின் மூர்க்கத்தைக் காட்டும் வகையில் எடுக்கப்பட்டுக் கவனமாக அமுல் செய்யப்பட்ட முடிவு அது.

ஆண்டுகள் மூன்றாய் அல்லல்கள் தொடர்ந்தன. பெயர்த்தற்கு எளிதான குடில்களில், முட்கள் நிறை புதர்களில், பாலையின் தாகத் திலும், பசியிலும் வருந்தினோம். கதிரவனின் எரிப்பால், சிறியோர் கடும் பகல்களிலும், கடுங்குளிரின் காரணமாய் முதியோர் மூண்ட இரவுகளிலும் இறந்துபட்டனர். எங்கு திரும்பினும் துயர்கள் மீதே எங்கள் பாதங்கள் பதிந்தன. விண்ணகத்திலிருந்து ஏதும் வீழாதோ என ஏங்கிய விழியினராய்ப் பரந்து விரிந்த வானகம் நோக்கினோம். இருந்தும் நாங்கள் பொறுத்திருந்தோம். வீண் போகவில்லை. மூர்க்கமானது புற முதுகை முறிக்காது விடலாம்; எனினும், முதுகந்தண்டை அது பலமடையச் செய்யும் என நாங்கள் அறிந்துகொண்டோம். அதனிலும் சிறந்த கொடையேதும் விண்ணகத்திலிருந்து வீழுமா என்ன?

# ஹம்ஸாவும் உமரும்

பாலை வெளியினுள் நாங்கள் தள்ளப்படும் முன்னரே, முகிற் கூட்டங்கள் சூழ்வது போல, நாங்கள் அறியாமலேயே எம்மைச் சூழப் பல சம்பவங்கள் நிகழலாயின.

எமது துன்பங்களின் கடைசி முனை இன்னமும் தொலைவிலேயே இருந்தது. மேலும் தாக்கங்கள் எம்மீது விழலாம்; புதிய வதைகள் வந்து சேரலாம்; விபத்துக்கள் பல வாய்க்கலாம். ஆம், இன்னமும் வர வேண்டியவை ஏராளம் இருந்தன. என்றாலும், தாழ்வுற்றிருந்த எமது தலைகளையெல்லாம் உயர்த்தச் செய்யும் வகையில் நம்பிக்கையூட்டும் சிறு அசைவொன்று முகிழ்த்தது - ஹம்ஸாவும் உமரும் இஸ்லாத்தில் இணைந்தனர்.

குருதியின் சினத்தின் பொங்குதலுடன் உருவானது இவ் விருவரின் மனமாற்றம். அது ஒரு விந்தை. வழியமைத்தவர், நபிகளாரின் சிறிய தந்தையார், பெருத்த உருவினரான ஹம்ஸா. கொடும் விலங்குகளின் வேட்டையிலும் செருகளத்திலும் சிறப்புற்ற வீரரெனப் பாலை முழுதும் புகழ் பூத்தவர். யுத்த களத்தினில் இவர் கைக் கணையினும் கொடியது இல்லை! இவர் தம் ஈட்டியின் துரிதத்தை விஞ்சுவதேதுமில்லை; ஹம்ஸாவின் வாளினை விஞ்சிய வலிமையில்லை; வேட்டையிலும் யாரே இவரினும் வல்லார்! விழிகளின் கூர்மையில், செயல் நுண்மையில், பாதத்து மென்மையில், இனிமை நுகர்வில் இந்த சிங்கத்தை வெல்லும் வீரனிலும் சிறந்தோர் யாரே! வலிமை பிறப்பிக்கும் இனிமை சுவை மிக்கது. ஹம்ஸா, மகா ஹம்ஸா, பாலையில் மலரும் மனங்கவர் மலர்களையும் தம் குதிரைமீது அமர்ந்தவராய்ச் சுற்றி வருவதைத் தவிர கசக்குதல் செய்யாத உயர் பண்பினர். சிற்சில வேளைகளில் தனக்கே உரிய பாங்கில் பிளிறும் பாடல் யாத்து வீர காவியம் பாடியும் நிற்பார்.

''முஹம்மது ஒரு பொய்யர்; மோசடிக்காரர்'' என அபூஜஹ்ல் பொறுப்பிலா முறையில் கூறி நின்றது வேட்டையிலிருந்து திரும்பிய வராக நகருள் நுழைந்து கொண்டிருந்த ஹம்ஸாவின் செவிகளுள் புகுந்தது, அன்றையதினம் மரித்துவிட்ட வாலிப சிங்கமொன்று ஹம்ஸாவின் குதிரையில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் பூரண பல் வரிசைகூட அபூஜஹ்லின் நாவுக்கு அணை போடவில்லை. விவேக மற்ற முறையில் தம் அவதூறை மீண்டும் கிளப்பி நின்றார் அவர். வேட்டைக் கருவியாம் வில்லினை இடது கையேந்தியவராக, குழுமி யிருந்தோர் ஊடாக முன் சென்றார் ஹம்ஸா. அபூ ஜஹ்ல் தவிர்த்து வேறு

எவரும் அவ்விடத்தில் இருக்கவில்லை என்றே அவர் எண்ணினார் போலத் தோன்றியது. எதுவும் கூறவில்லை அவர். எழுந்தது, ஹம்ஸா தன் வில்லின் அடிப்புறத்தால் அபூஜஹ்லைத் தாக்கிய 'துண்' எனும் ஒலி மட்டுமே. முகத்தில் குருதி வடிய வீழ்ந்தார் அபூஜஹ்ல். கவிஞரே ஆயினும் ஹம்ஸா விவாதம் புரிபவரல்ல. தன் தோள் குலுக்கிக் கஅபாவைச் சுட்டியவராய், ''இருளில், பாலை வெளியில் வேட்டை யாடும் வேளையில், வீட்டில் மட்டும் உள்ளவனல்ல இறைவன் என்பதை நான் உணர்கிறேன்'' என அமைதியாக மொழிந்த அவர் தன் இரு பாதங்களையும் நிலத்தில் நன்கே ஊன்றி ஒரு கணம் அங்கிருந்தோர் அனைவரையும் உற்று நோக்கிக் கூறினார்: ''முஹம்மதின் மார்க்கமே என் மார்க்கம்; அவரது இறைவனே என் இறைவன்; துணிவிருப்பவர் யாரும் என்னைத் தாக்கலாம்.'' நபிகளாரைக் காண விரும்பியவராக ஹம்ஸா அவ்விடத்தினின்றும் அகலும்போது இடம் விடுவதற்காக அசைந்ததைத் தவிர அனைவரும் சிலை போல் நின்றிருந்தனர்.

பின்னர் ஒருவேளை, கொன்றொழிக்கும் மனதுடன் கொடுவாள் கையேந்தி நபிகளாரைத் தேடிச் சென்றார் ஒருவர். ஓர் அடியின் விசையால் இஸ்லாத்தை ஒழித்துவிட முனைந்த அவர், கத்தாபின் மகன் உமர். நீண்டுயர்ந்த மேனியர். துள்ளியோடி ஒரே எட்டில் தன் ஒட்டகை மீது ஏறி அமர்வார் அவர் என்பர், உண்மையே. அன்றெலாம் விலையுயர் வாசனை விளைபொருட்களும், மதிப்புயர் கற்களும் பதுக்கி பைஸாந்திய எல்லைக்குள் கொண்டு சென்று கள்ள வணிகம் செய்து வாழ்ந்த துடுக்கும் துணிகரமும் நிறைந்த இளைஞர் அவர். தன் ஒட்டகையையே யொத்த கெட்ட சினமுடையவரும் ஆவார்.

இடிபோல கர்ச்சித்து வந்தார் உமர். தம்மைக் காக்கக் கருவியோ காவலரோ இன்றி அர்கம் வீட்டில் அமைதியாய் இறைவனைத் தொழுது கொண்டிருந்தனர் நபிகளார். நிகழ்வன தெரிந்தால், என்னைப்போலவே, தாமும் நடுங்குவர் என எண்ணி, நபிகளாரை எச்சரிக்கும் நோக்கத்தில் அர்கம் இல்லம் விரைந்தேன். என் செய்தியை பொருட்படுத்திய உணர்வே இல்லாதவராக அவர் கூறினர்: ''உமர் இப்னு கத்தாப் என்னை நாடி வரும் வேளையை இறைவனே தேர்ந்து கொள்வான்.''

வாளேந்தியதொரு பேருருவம் இல்லத்தின்மீது வீழ்வதே போலும் உமர் வருவதைச் சாளரத்தூடே கண்ட நான் கூறினேன்: ''இறைவன் தேர்ந்து கொண்டான், இறைத்தூதரே! இதோ அவர் வந்துவிட்டார்.''

கையில் கொள்வதற்கு ஆயுதம் ஏதும் உளதோ எனத் தேடினேன். கொதித்துக் கொண்டிருந்த சுடுநீர்ச் சட்டியொன்றைத் தவிர அவ்வீட்டில் வேறு ஏதும் இல்லை. கிட்டியது எடுத்துக் கதவடி நோக்கி நடந்தேன். நபிகளார் எழுந்து நின்றார்கள். தன்னைக் காத்துக் கொள்வதிலும்

மேலாக, என்னை அடக்குதற்கே எழுந்தனர் என அறிந்தேன். ''நன்றி, பிலால்!'' என மொழிந்து என் கரத்திருந்த கொதி நீரை அகற்றிக் கூறினர்: ''...ஆனாலும், இதுதான் இறைவன் எனக்கெனத் தேர்ந்துள்ள தருணமாயின், கொதிக்கும் எண்ணெய்கூட எனக்குதவப் போவ தில்லை...'' அவ்வாறு கூறியதாகத்தான் எண்ணுகிறேன். எனினும், மங்கிய என் நினைவுகளை மிதமிஞ்சிப் போற்றிட வேண்டாம். இன்றெல்லாம் நபிகளார் கூறியதாக எதையும் நாம் கூறிவிட்டால் போதும், அது உடனே மார்க்கமாகிவிடுகிறது.

கதவிலிருந்தும் உமர் ஐம்பது கால் தடத் தொலைவிலேயே இருந்தார். அவரது கால் தடத்தளவில் நாற்பது. அவ்வேளை அவர் முன் தோன்றினார் ஒரு முதியவர். அவர் ஒரு யாசகர் என்றே எண்ணினேன். இரப்பதற்குக் கொஞ்சமேனும் உசிதமில்லாத சந்தர்ப்பத்திலும் பிச்சை வேண்டி நிற்பாரும் உளர். சினத்தினும் மிஞ்சிய பரந்த மனத்தவர் என அறியப்பட்டிருந்தவர் உமர். ஆனால், இவ்வேளையோ உமர் எதனையும் ஈயவில்லை. தன் சினத்தையே தாரை வார்த்தார். முதுகிழவரை முன்னுறத் தூக்கிக் குலுக்கிய உமர், மரித்துப் போன மாதர் பெயரால் சத்தியம் செய்து 'அவளைக் கொல்வேன்' என முழங்கி நின்றார். 'அவனைக் கொல்வேன்' என அவர் மொழியாதுவிட்டமை சற்றே ஆறுதல் அளித்தது, திரும்பிய உமர் வந்த திசையிலேயே திரும்பி நடந்தார் - பூதமொன்று இழுத்துச் செல்வது போல் இருந்தது அவரின் துரித கதி.

அன்றைய தினம் இன்னும் முடிந்து விடவில்லை என்பதை நான் உணர்ந்தே இருந்தேன். எடுத்த காரியம் எதனையும், இறைதூதர் ஒருவரைத் தொலைத்துக்கட்டுவதாயினும்கூட, பாதியில் நிறுத்து பவரல்ல உமர். நடந்தவை மறந்து சாளரத்தடியிலேயே நின்றிருந்தேன் நான். அர்கம் வந்து சேர்ந்தார். நாங்கள் இப்போது மூவர் இருந்தோம். முற்றுகைக்குள்ளாகியிருந்தது போல தோன்றியது.

நாழிகை சில கழிய, இன்னமும் வாள் கொண்ட கையோடு, வீதியை நிறைத்த ஆரவாரத்தராய் மீண்டும் உமர் விரைந்து வரக்கண்டேன். உத்தரவு ஏதும் இன்றியே கதவினை மூடி அடைத்தேன். என் பின்னால் வந்து நின்ற நபிகளார் வினவினர்: ''கதவினை ஏன் அடைக்கிறீர், பிலால்?'', ''உங்களைக் காக்க... இறைத்தூதரே!'' என்றேன். அமைதி யான விழிகளால் என்னை ஆழ்ந்து நோக்கி அவர் பகன்றார்: ''இறைத் தூதர் எவரும் தம் கதவை அடைப்பதில்லை பிலால்... இறைவனை நீர் அஞ்சுவீராயின் கதவைத் திறந்துவிடும்.''

வருவாரை எதிர்நோக்கி அறை நடுவில் நின்றனர் நபிகளார். உமரது வாளின் கைப்பிடி கதவில் எழுப்பிய ஓசை தெறித்தது. நபிகளாரே

அனைத்தும் நன்கறிவர். எனக்கிடப்பட்ட உத்தரவை ஏற்றுக் கதவைத் திறந்தேன். உள்ளே நுழைவதற்காய்க் குனிந்தார் உமர். அவ்வேளை நடந்தவற்றை யாரே நம்புவார்! உமர், நபிகளாரை நோக்கினார். அடுத்து என்னையும், அர்கமையும், இறுதியாய்த் தன் வாளையும் நோக்கினார். பேருணர்வொன்று அவருள் கிளர்ந்தது. அவரது முகத்தை மாற்றியது துயர். தன் இதயத்தைக் கொடுப்பதைப்போல் மேலங்கி தளர்த்திக் கூறினார் அவர்: ''வணங்குவதற்குரிய இறைவன் ஒருவனே, முஹம்மதே! நீர் இறைவனின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.''

உமர் இஸ்லாத்தை ஏற்றது 'மாற்றம்' எனப்படுவதிலும் 'புரட்சி' எனலே தகும். அவரை, நரகத்தின் வாயிலினின்றும் பின்னிழுத்துக் காப்பாற்றிப் புதிய மார்க்கத்தின் உறுதியான ஒரு தூணாய், நபிகளாருக்கு உற்றதொரு துணையாய் மாற்றியமைத்தான் இறைவன்.

உமரது மனமாற்றத்தின் ஆதியும் அந்தமுமான இரு முனைகளையே நான் கண்டேன். அதன் கொடுந்தொடக்கமும் இனிய முடிவும். இடையில் கழிந்த பொழுதின் அற்புதத்தைக் கண்டேனில்லை. அதனை எனக்கு அறிவுறுத்தியவர் கொல்லரான கப்பாப். அவரது நல்ல உருக்குப் போலவே உறுதியான உண்மை அது.

நான் எண்ணியிருந்ததுபோல உமரைத் தடுத்து நிறுத்தியவர் ஒரு யாசகர் அல்லர். அவரொரு வணிகர். மதுரச வணிகர் என்றும் கூறினர் சிலர். சற்றேனும் எதிர்பார்த்திராத வேளைகளில் இறைவன் பக்தி நெறியினரையும் அனுப்புவான்; பாவாத்மாக்களையும் அனுப்புவான்.

''உமது வாள் ஏன் வெளியே வந்துள்ளது?'' என வினவினார் கிழவர்.

''எம் கடவுளரையும் மிஞ்சியவராகத் தன்னைக் காட்டி நாடகமாடும் அந்த வஞ்சகனைக் கொல்ல!'' என்றார் உமர்.

''அப்படியானால், முதலில் உமது வீட்டுக்குச் சென்று உமது சகோதரியைக் கொன்றுவிட்டு வாரும்'' என்றார் முதியவர்.

சிற்சில தருணங்களில் அத்தகு முதியோர்தம் வார்த்தைகள் அசரீரியான ஒலிகளாய் அமைந்துவிடுகின்றன. அவரது பேச்சிலும் பாதிதான் உமரின் மனத்துள் பதிந்தாலுங்கூட, அதுவே நான் சாளரத்தில் கண்டது போல, உமரைச் சினங்கொண்டு வெகுண்டெழச் செய்யப் போதுமானதாயிருந்தது. தன் சகோதரிமீது அளவற்ற அன்பு கொண்டிருந்தவர் உமர். முதியவர் அச்சோதரி குறித்துக் கூறிய மயக்கம் தரும் செய்தி உமருக்கு மேலும் வெறியூட்டியது.

விரைந்து சோதரி வீடு சென்ற உமர், கதவடியில் மறைந்து நின்றார். உள்ளே குரல்கள் கேட்டன. பொருள் புரியாப் புதுச் சொற்கள் பல செவியைத் தாக்கின. ஒரே எட்டில் உதைத்துக் கதவை உடைத்து ஏழடிப்

பூதம் போலும் பாரிய உருவினராய் வாசலில் நின்ற உமர், உள்ளே சோதரி ஃபாத்திமா, அவரது கணவர் ஸஊத், எனது சாட்சி கப்பாப் ஆகியோரைக் கண்டார். தன் ஆடைக்குள் தோல் துண்டொன்றை மறைக்க முயன்ற ஃபாத்திமாவின் முகத்தில் வீழ்ந்தது ஓர் அறை. தாக்குதலின் கடுமையால் நிலத்தில் வீழ்ந்த அவரிடமிருந்து, மறைத்த அத்தோலினைப் பிடுங்கி யெடுத்தார் உமர்.

ஃபாத்திமா மனமாற்றமுற்று வாழ்ந்து வந்ததை நபிகளார் அறிந் திருந்தது போல உமர் அறிந்திருக்கவில்லை. குர்ஆனில் அழகு செறிந்த இருபதாம் அத்தியாயத்தின் சில வசனங்கள் பொதிந்த தோலே தன் கைகளில் அப்போது இருந்ததென்பதையும் அவர் அறியார். அழகிய கவிகளின் சுவைகளையும் விஞ்சி, பிறிதொரு மொழியில் எவ்விதத் திலும் பெயர்க்கவியலா வாசகங்களும் பொதிந்திலங்குவது அது,

> அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறில்லை; அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன.

கையில் இவ்வாசகம் கண்ட உமர், குருதி வடியும் முகத்தவராகப் ஃபாத்திமா தன் கணவர் பின்னால் பதுங்கி ஒளிவதைக் கண்டார். குற்ற உணர்வு மீதூறப் பெற்றவராய்த் தன் தலையைச் சுவரில் அறைந்து கதறினார் உமர்: ''எனக்கு நீ செய்தது என்ன?'' நகைப்பையும் உள்ளத்துள் கிளர்ச்சியையும் எழுப்பும் வினா அது. வாயில் குருதி வழிய, பதில் கூற அஞ்சி நின்றார் ஃபாத்திமா. அவரது மன்னிப்பை வேண்டும் வகையில் கையிலிருந்த தோலை நீட்டிக் கூறினார் உமர்: ''இதை வாசித்துக் காட்டும். நாம் பிரிந்து போவதில் ஏதும் பயன் இருக்குமாயின் வாசித்துக் காட்டும்.''

ஃபாத்திமாவின் நடுங்கும் விரல்கள் அதைத் தாங்க இயலவில்லை. எனினும், கப்பாப், இரும்புப் பாளங்களை பறவைச் சிறகுகளாக வளைக்கும் கப்பாப், அதனைப் பெற்று வாசித்தார். கேட்டு நின்ற உமரை, அமைதியாய், மெதுவாய் அவரறியாமலேயே ஆழ்ந்ததொரு வியப்பு ஆட்கொண்டது. திகைப்பும் வியப்பும் பொங்க, இறைவனின் வாசகங்களை ஓதி நின்றாரின் இதழ் அசைவுகளை உற்று நோக்கி யிருந்தார் உமர். உடன், மாபெரும் இனியதோர் உணர்வு தன்னுள் ஊடுருவிச் செல்லத் தம் தலைமுதல் பாதம்வரை நடுங்கியதாகப் பின்னொரு காலத்தில் உமரே என்னிடம் கூறினார்.

இஸ்லாமிய உலகுக்கு இன்று தலைமை ஏற்று நிற்கும் உமரின் மனமாற்றம் நிகழ்ந்தது இவ்வாறே.

# துயர ஆண்டு

துயர ஆண்டு என்றே அது வழங்குகின்றது. அந்த ஆண்டில் அனைத்தும் கெட்டன. குவியல் குவியல்களாய் ஆபத்துகள் தொடர்ந்து எம்மீது வீழ்ந்தன. எமது விசுவாசங்களும் நம்பிக்கைகளும் கலக்கத்துக்குள்ளாகு மளவு துயரங்கள் சூழ்ந்தன. விண்ணகத்தை அண்ணாந்து நோக்கி, இறைவன் சினத்தை வருவிக்க நாம் எப்போது என்ன தவறுகள் இழைத்தோம் என வினவி நின்றோம்.

உண்மையில், நபித்துவத்தின் ஆறாம் ஆண்டளவில் நாங்கள் ஒரு நூறு பேர் அளவு வளர்ந்திருந்தோம். உலக மக்கள்தொகையில் நூறு என்பது பொருட்படுத்தத் தக்கதொரு தொகையல்ல. ஆனால், நாங்கள் ஒருபோது பத்துப்பேர் மட்டுமே இருந்துள்ளோம். முதிர்ந்த வயதினனாய் டமஸ்கஸில் வாழ்ந்து வரும் எனக்கு, சாரிசாரியாய் முஸ்லிம்களின் பெருங்குழுக்கள் நடமாடித் திரிவதைக் கைத்தடிமீது சாய்ந்தவனாகக் கண்டுகொண்டிருப்பதிலும் மகிழ்வு தருவது வேறு ஒன்றுமில்லை. முப்பது ஆண்டுகளின் முன்னரோ, நாங்கள் அனைவருமே ஒரு மெழுகு வர்த்தியைச் சூழக் குழும முடிந்தது. இன்றோ, இறைவன் எம் ஒவ்வொரு வரையும் ஒவ்வொரு லட்சத்தளவு பெருக்கி வைத்துள்ளான். இந்த மண்ணின் மேல் உலவித் திரிவதில் நிச்சயம் நான் உவகையடையவே செய்கிறேன். ஆனால் துயர ஆண்டின்போதோ இந்த மண்ணின் கீழ் ஆகிவிடக் கூடாதா என அடிக்கடி விரும்பி எண்ணியிருந்தேன்.

கதீஜா மறைந்தார். இருபத்தைந்தாண்டு காலம் நபிகளாரின் ஒரே துணைவியாய் இருந்தவர் அவர். நான் முன்னர் கூறியது போல ஒரு சமயம் நபிகளார் மீது விசுவாசங்கொண்ட தனியொரு ஜீவனாக இருந்தவர். ஆரம்ப இறைவசனங்கள் அருளப்பட்ட போதான நபிகளாரது அச்சங்களிலிருந்தும் ஆறுதல் கூறியவர் கதீஜா. தனது செல்வங்கள் அனைத்தையும் நபிகளாரோடு பகிர்ந்து கொண்டது மட்டுமின்றி, இல்லார்க்கும் வறியார்க்கும் அவற்றைப் பகிர்ந்தளிப்பதிலும் கூட சமபங்கு வகித்தவர். தன்னுள்ளேயே மகத்துவங்கள் பொதிந்தவராய் நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் தாயாய் நின்றவர்.

ஒரு நாள் திடீரென கதீஜா மரணமானார். இரவு வீழ்வதன் முன்னமேயே அடக்கம் செய்வதற்காய் அவரைச் சுமந்து விரைந்தோம், - எம்மவரே ஆன கதீஜா!

அடுத்து மறைந்தார் அபூதாலிப். அன்புக்கும் இழப்புக்கும் இடையே ஊஞ்சலாடியதொரு வாழ்க்கை அவருடையது. நபிகளாரை நேசித்தும்

சிலை வணங்கியாய் மரித்தார். இறந்து பட்டாரின் மரித்த மதத்தை எறிந்திட வியலாத இயல்பினர். அபூதாலிபை அவர் தம் மூதாதையர் சரியாகத்தான் பயிற்றுவித்திருந்தனர். இருந்தும் அவர்தான் நபிகளாருக்கு நற்றுணையாய் அமைந்தவரும். சதிகாரர்களையெல்லாம் மிகைத்த வனான இறைவனே அபூதாலிபுக்குச் சிலை வணக்கத்தைத் தேர்ந்து கொண்டான் என்றுதான் நான் எண்ணுகிறேன். இருளில் வாழ்வதன் மூலம் அவரால் ஒளியைத் திறம்படக் காத்துக்கொள்ள முடிந்தது. அபூதாலிப் எம்மைச் சேர்ந்திருந்தால் எம்மோடு அவரையும் பிரஷ்டம் செய்திருப்பார்கள். ஆயின், எமக்கெங்கே ஆதரவு? அவர்களுள் ஒருவராய் இருப்பதன் மூலம் எம்மவர் இருவராயிருந்தார் அவர். நான் கூறுவது இறை நிந்தனையான வார்த்தையென்றே நீங்கள் கருதலாம். என்றாலும் கூட, என் இறப்பின்போது அபூதாலிப் இறைவனை நெருங்கியுள்ள தரத்தில் பாதியாவது எனக்குக் கிட்டலாகாதா என அவாவுகின்றேன்.

மரண மூச்சின் நெருக்கத்தின் போது, மக்கத்துப் பெருங்குலத் தலைவர்களைத் தன் படுக்கையின் ஒரு புறமும் இறைத்தூதர் அவர் களை மறுபுறமுமாக அழைத்திருத்தி மடியும் தன் உடலின் குறுக்காய் இவர்களுக்கிடையே அமைதியைக் கொண்டுவர முனைந்தார் அவர். சிலை வணக்கத்துடன் எவ்வித நல்லுறவினையும் ஏற்படுத்திக் கொள்வது நபிகளாரின் சக்திக்குட்பட்ட கருமமல்ல. ஏக இறைவனை மட்டுமே வணங்க வேண்டுமென அவர் வேண்டியபோது, தம் செவிகளில் அச்செய்தி புகுந்திடா வண்ணம் அவர்கள் கைதட்டி, கூச்சலிட்டு அவர் குரல் தாழச் செய்தனர். கூச்சலின் துயரத்தின் மத்தியில் அபூதாலிப் மூச்சடங்கினார்.

அமைதியில் ஆழ்த்தப்பட்டனர் நபிகளார். இது காலவரை ஹாஷிம் வம்சத் தலைவராய், அத்யந்த நண்பராய் இருந்து மறைந்த அபூதாலிபைத் தொடர்ந்து, வம்சத் தலைமைப் பீடத்துக்கு வந்தவர் பரம வைரியான அபூலஹப். இரத்தமும் சதையுமாய் நெருங்கி விளங்கிய உறவினரும் பிரிக்கப்பட்டனர். சம்பிரதாயம், சமயம் அனைத்திலும் அக்கினியின் தந்தையாம் அபூலஹபின் கனத்த குரலே பேரதிகாரம் படைத்ததாய் விளங்கியது. லாத், உஸ்ஸா, மனாத் எனும் கடவுளரைத் தன் சொந்தப் பெண்டிரே போல போற்றிக் காத்த அபூலஹப் ஒவ்வொரு விடியல் வேளையிலும், அக்கடவுளர் தரும் இன்பம் குறித்தும், அவை தம்முள் கருக்கொண்டு வைத்திருக்கும் செல்வங்கள் குறித்தும் உவப்புடன் பிரஸ்தாபிப்பான். பாவம்! இம்மூடனுக்கு இறுதி வீழ்ச்சியைக் கொணர்ந்தது அவனது சிலை வணக்கமே. நபிகளார் மீது அவன் கொண்டிருந்த அடங்காச் சினமே பெருந்தீயாகி, அவன் தன்னைத் தான் வீழ்த்தி எரித்துக்கொண்ட சூளையாய் அமைந்தது. சிவந்து வீங்கிய

முகத்தினனாய்த் தன் சினத்தாலேயே இறந்துபட்ட அவனது ஈன ஆன்மா பிறர்க்கெல்லாம் ஓர் எச்சரிக்கையாக எரிந்து கொண்டிருக்கிறது. அவன் உயிரோடுலவும் போதே இறைவன் அவனது ஆன்மாவுக்குத் தக்க தீர்ப்பு வழங்கி நரகத்தில் அதற்கென ஒரு தனியிடம் ஒதுக்கி வைத்தான். அக்கினியெனப் பெயரிய நூற்றுப் பதினொராம் அத்தியாயத்தில் இறைவன் அவனையே சுட்டுகின்றான்:

அழியட்டும் அபூலஹபின் இருகரங்கள்;
அவனுமே அழியட்டும்.

அவனுடைய பொருளும், அவன் சேகரித்து
வைத்திருப்பவைகளும் அவனுக்கு யாதொரு
பயனுமளிக்கா.

அதிசீக்கிரத்தில் அவன் கொழுந்து விட்டெரியும்
நெருப்பினை அடைவான்.

அவனது மனைவி அவ்ரா, அபூலஹப் போலவே தீயவள். நான் சிறுவனா யிருந்த வேளை, வெண்ணிறக் குடையொன்றைத் தாங்கியவளாக அவள் அடிமைகள் திருத்தப்படும் அசிங்கங்களைக் காண வருதலை நினைவில் கொண்டுள்ளேன். அவளை நான் அஞ்சியிருந்தேன். முட்கள் செறிந்த பொதிகளைத் தும்புக் கயிற்றால் கட்டி, நபிகளாரின் கதவடியில் வைத்துத் தழல்கொண்டு எரித்தல் அவளது பின்னைய காலப் பொழுதுபோக்கு. கணவன் மனைவியரை இறைவன் நரகில் பிரித்து வைத்துவிட வில்லை. அவனுடனேயே அவளும் இடப்பட்டாள்.

விறகு சுமக்கும் அவனுடைய
மனைவியோ...

அவளுடைய கழுத்தில், முறுக்கேறிய
ஈச்சங்கயிறுதான்.

அவர்களுக்காக நான் இரங்குகிறேன். உய்வுக்கென அவர்களுக்குள்ள ஒரே நம்பிக்கை, நபிகளாரை அண்மியிருந்தமை மட்டுமே. இப்புவி மீதினில் வெப்பதட்ப விளைவுகளை நபிகளாருடன் பகிர்ந்து வாழ்ந்தமை மட்டுமே அவர்கள் கண்ட பலன். இறைவன் அவர்களையும் மன்னித் தருளலாம். ஏகனின் நியதிகள் பற்றி ஊகித்திடுதல் சிறியேனுக்குத் தகுமானதல்ல.

கூட்டமாய்க் கூடவும், உபதேசங்கள் புரியவும் தடைகள் பல விதி யாயின. இதயக் கடுப்பும், பேய்மைச் சினமும் மக்காவை விடக் குறைந்த வேறிடம் எங்கும் கிட்டாதா என நபிகளார் எண்ணலாயினர். இறை யோனின் பாதுகாப்பு கிட்டிய ஒருவருக்கு, மண்ணகத்துத் தெருக்களில் பாதுகாப்பு இல்லாத நிலை.

தாயிப் நகரை நாடலாம் என முடிவெடுத்தனர் நபிகளார். கொதிக்கும் பாலை வெளியிலிருந்து மேலெழுந்துயர்ந்த மலைப்பிரதேசம் அது. தேனின, வண்ணச் சிறகினச் சோலைகள், நறுங்கனித் தோப்புகள் சூழ்ந்த நகரமான தாயிபின் மக்கள், வெண்ணிறக் கல்லொன்றின் வடிவில் 'லாத்' எனும் பெண் கடவுளை வணங்கி வந்தனர்.

விரைந்து செல்லும் ஒட்டகைகள் பல கொண்ட சிறந்ததொரு வணிகராய்ச் சீர் பெற்றிருந்தவர், நன்மைகள் புரிவதிலேயே செல்வங்கள் அனைத்தும் செலவழித்து விட்டவராய் இப்போது பாதணி தவிர்த்து வேறு ஏதும் இல்லா நிலையில் எழுபது மைல் தொலைவிலுள்ள தாயிப் நோக்கிச் செல்லலானார். ஒட்டுகள் மலிந்த ஒரேயொரு மேலங்கி மட்டுமே அவரிடமிருந்தது. பாலையில் எழும் மணற்புயலிலிருந்தும் தம் முகத்தினைக் காத்திடப் போதுமான போர்வையும் இல்லாப் பரிதாபம். இந்நிலையிலும்கூட ஆடை அணிகலன்களின் மகத்துவம் வாய்ந்த வேறொரு மனிதரை நான் கண்டதில்லை. சேதமுற்றுச் சிதைந்து போன ஆடையானாலும் அது இறைத்தூதர்தம் உடம்பில் சுவர்ண ஒளி வீசுவதாகவே அமையும்.

தொடர்ந்து செல்ல முயன்றோம் நாங்கள். ஆனால், எம்மைத் திருப்பி அனுப்பி விட்டார் அவர். பரிவாரங்கள் தேவையற்றவராக அவர் பயணம் தொடங்க, நாங்கள் அஞ்சி நின்றோம். பாலையில் பயணம் என்றால் எதிர்ப்படுவதென்ன? பாழ்பட்ட கிணறுகள், சுழன்று தாக்கும் காற்றுகள், எரிக்கும் கதிரவன், எதிர்பாரா விபத்துக்கள், பகைவர்கள்!

எமது அச்சங்கள் நியாயப்படுத்தப்பட்டன. பச்சைப் புண்களும் பசியும் தாகமும் வருத்த இடிந்துபோய்த் திரும்பினர் நபிகளார். மணற்றரையில் கொஞ்சதூரம் உடலை இழுத்தவராகவே வந்து சேர்ந்தனர். கழுத்தைச் சுற்றியிடப்பட்ட ஒரு பாறாங்கல்லை போலும் மௌனம் அவருள் அழுந்தியிருந்தது. வார்த்தையேதும் பேசாதவராக தன் படுக்கையை அடைந்தனர். பின்னரே நாம் நடந்ததை அறிந்தோம்.

நலமே தாயிப் சேர்ந்த நபிகளார், இனிப்புகள் கொறித்தும், பழரசங்கள் உறிஞ்சியும், பஞ்சணை மீதமர்ந்திருந்த நகரின் மூத்த குடியினருடன் சந்திப்பொன்றுக்காக அனுமதி வேண்டினர். கரமேந்திய கிண்ணங்களின் விளிம்பு வழியாக அவர்களது பார்வையில் மிதந்தது இகழ்ச்சி வெறி. வேதவாக்கல்ல அவர்கள் விழைந்தது; வம்பு விளையாட்டே. தம் தர்க்க வாதங்களை இறைத்தூதர்மீது தொடுத்தனர், குளிர்ந்த மதுரசத்து மாண்பில் ஊறிய தாயிப் தலைவர்கள். ''இறைவனின் தூதராயிருப்பின் வானவராக இருக்கும் தகுதியினரானீர் நீர். உம்மோடு உரையாடும் அருகதை எமக்கில்லை. இறைத்தூதர் அல்லராயின் வஞ்சனையாளர் ஆவீர் நீர். எம்மோடு உரையாடும் அருகதை உமக்கில்லை.''

வாதத் திறனால் தம்மைத் தாம் வியந்தோராய் எழுந்து நின்ற அவர்கள் தம் இயற்கைச் சொரூபம் காட்டி நின்றனர். தாயிபின் இயற்கைச் சொரூபம் கற்களும் பாறைகளுமே. இறைவனின் தூதரை வதைத்துத் துயருறுத்தி மீளவும் கடும் பாலையுள் தள்ளிவிடச் சிறார்களை ஏவினர் அத் தலைவர்கள். நன்மை தீமையறியாது கத்திக் குளறிக் களிப்பு மீதுறக் கூக்குரல் பெருக்கிக் கொடூரம் செய்வதில் பரவசம் கண்டு கூத்தாடும் சிறார்களின் கரங்களில் கற்களும் ஆயுதங்களாய் அமைய, நபிகளார் அடித்துத் துரத்தப்பட்டார்கள். தமது வாழ்விலேயே துயரத்தின் உச்சத் தினை உணர்த்திய நாள் அது என்றனர் நபிகளார்.

அன்றையதினம் அண்ணலார்க்குச் சற்றேனும் ஆறுதல் அளிப்பதாய் அமைந்தது, இறைவனிடமிருந்து கிட்டிய ஒரேயோர் அனுக்கிரகம் மட்டுமே. ஆங்கொரு சோலையுள் வேலை செய்து கொண்டிருந்த 'அத்தாஸ்' எனும் கிறிஸ்தவ அடிமை, நபிகளார் மீது இரங்கி திராட்சைக் குலையொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார், திராட்சைக் குலை யொன்றின் மூலம் சுவனத்தையே அடைந்துகொண்ட அத்தாஸ் எத்துணை பாக்கியவான்! இத்தரணி வாழ்வில் பொதிந்துள்ள திடீர் வெகுமதிகள் தான் எத்தனை! சுவனத்துக்கான வழி நெடியதாய் நீண்டுள்ளது போலவே குறுகியும் அமைந்துள்ளது. அத்தாஸின் பாதையை நான் அறியேன்; என்றாலும், நான் அவரை நேசிக்கிறேன்.

## யத்ரிப்

தாயிப் இரவின்போது தாரகைகள்பல வானிலிருந்து மாயமாய் மறைந்தன என்பர். தாரகைக் கன்னியர் எழுவர் கண்ணீர் சிந்தினர் என்றும் கூறுவர். இவை சாதாரண விவரணம், ஏற்கலாம். அக்கன்னியர் வாய்குழறி அழுததைத் தாம் செவியுற்றதாகக் கூறுவாரும் உளர். இது அபத்தம். அன்றைய இரவு நானும் வானத்தைப் பார்த்திருந்தேன். எதையும் கேட்கவில்லை; புதுமைகள் நிகழத்தான் செய்தன. ஆனால், அவை நிகழ்ந்த இடம் வேறு.

ஓர் இரவு, தண்ணிலவு ஒளியில், பன்னிரு மனிதர், நபிகளாருக்குத் தம் நகரத்தைத் தருவதற்காக வந்திருந்தனர். அவர்களில் எவரையும் நான் அதற்கு முன்னர் கண்டதில்லை. அவர்களைக் காண நாம் எண்ணி யிருந்ததுமில்லை. எனினும், அவர்கள் நபிகளாரை நாடி வந்திடத் தக்க காரணம் இருக்கவே செய்தது. அவர்களுக்கிடையில் அமைதியை நிலைநாட்ட அவசியப்பட்டனர் நபிகளார். 'அவ்ஸ்', 'கஸ்ரஜ்' எனும் இரு கோத்திரத்தாரின் நகரம் யத்ரிப். அவர்களுக்கிடையில் எப்போதும் போர்! போர்! அவ்ஸ்களின் ஒவ்வொருவர் ஆழ் மனத்துள்ளும் கஸ்ரஜ்களில் ஒருவர் இழைத்த கடும்புண்கள், கஸ்ரஜ்கள் ஒவ்வொருவரையும் துயருறுத்தியது அவ்ஸ்கள் இழைத்திருந்த படுகாயங்கள். சகோதரத்துவ பிரச்சாரம் புரிந்து வந்த இறைத்தூதர் பற்றிய செய்திகளைச் செவியுற்று, அவர் மூலம் தம்முள் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளவென வந்திருந்தனர் இம்மதீன வாசிகள். ஆறு ஆண்டுக்கால இடைவெளி யுடன் நபிகளாரின் தந்தையும் தாயும் மதீன மண்ணிலேயே மரண முற்றிருந்தனர். ஏற்கெனவே அண்ணலாரின் மூல வேர்கள் மதீன மண்ணில் கலந்திருந்தன.

அவர்கள் கூறியவற்றை நபிகளார் அமைதியாகக் கேட்டிருந்தனர். பழிவாங்கலுக்கும் கொடும்வதைகளுக்கும் அப்பால் வாழவும் பேசவும் என எதனை நாடி நபிகளார் தாயிப் நகர் நோக்கிச் சென்றார்களோ, அதனைத் தாமே உவப்புடன் தருவதாகக் கூறினர் மதீன வாசிகள். ஈயப்படுவதைப் பற்றியெடுத்தல் இறைதூதர் ஒருவரது தகைமைக்குரிய செயலாகுமா? வந்தவர்கள் நபிகளாரைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்; தம்மைத் தாம் நன்கு தெரிந்துகொள்ளவும் வேண்டும் என வலியுறுத்தினர் நபிகளார். எனவே, இஸ்லாத்தின் அடிப்படைகளைத் தக்கபடி தெரிந்துகொள்ள அவர்களுக்குத் துணையாக முஸ்அபை அளித்தனர். தற்போதைய சிந்தனையே தொடர்ந்து இருக்குமாயின்

அடுத்த வருடம் அவர்கள் தம்மிடம் வரலாம் என்றுரைத்தனர் இறைவனின் தூதர்.

அந்த ஒரு வருடம் முடியுமுன் ஐந்து வருட முதுமை அடைந்து விட்டோம் நாங்கள். திணறலில் மாண்டு கொண்டிருந்த எமது தோற்றம் கவலையையே தோற்றுவித்தது. மதீனத்தார் மீண்டும் வருவரோ? அவர்கள் மெய்யாய் இந்த உலகில் வாழ்பவர்கள் தாமோ? வெறும் கனவுகள் தான் நாம் கண்டோமோ? என்றெல்லாம் ஏக்கத்துடன் எண்ணலானோம். தனது கடவுளர் இவ்வவனியில் வாழ்வதை உறுதி செய்யத் தன் சவுக்கு மட்டுமே போதும் என அபூலஹப் இன்னமும் நம்பியிருந்தான். எம் சொந்த வீடுகளே எமது சிறைகளாகத் தொடங்கின. பலவீன நம்பிக்கையினர் சிலர் தம் நம்பிக்கை துறந்து, இறையருளால் வந்த பாதுகாவலைத் தம் பிடிவாதத்தால் புறக்கணித்து இழந்து விட்டார் முஹம்மது எனப் புகார் செய்தனர். அம்புலி ஒளியில் அன்றிரவு வந்தவர்கள் பன்னிரு அரபியரல்லர்; வானவர்கள் என்று அவர்கள் கருதினர் போலும். குறையிலும் நிறையிலும் தம் மக்களை நன்கே அறிந்திருந்த நபிகளார் விண்ணகத்திருந்து வீழ்ந்த கயிறல்ல மதீனத்து அழைப்பு என்பதை மனத்துள் ஆழமாகவே கொண்டிருந்தனர். மனிதரிடையே உயர்ந்தேற அதனைப் பயன்படுத்தக் கூடுமாயிருக்கும். என்றாலும், அதன் வலிமை பரீட்சிக்கப்பட வேண்டும். ஆம்! வலிமை மிக்கதாகவே விளங்கியது அது!

மீண்டும் அவர்கள் வந்தார்கள். அதே திங்கள்; அதே நிலவு. 'ஒலி யேதும் எழுப்பாது மணற்பறவையே போல அமைதியாக வந்தோம்' என்பார் முஸ்அப். இரகசியமாய்ச் சந்திக்கும் இடமாக அகபாவைத் தேர்ந்திருந்தனர். எல்லோருமாக, பன்னிருவரல்ல, எழுபத்தேழு பேர் வந்திருந்தனர். மக்காவில் எம் அனைவரது தொகையையும் நிகர்த்தவர் களாயிருந்தனர் அவர்கள். இப் பெருந்திரளைக் கண்டதும், எம்மை வளைத்துப் பிடிக்க இடப்பட்ட ஒரு கண்ணியோ இது என்றும் கலங்கினேன். எதிலும் அவசரம் காணும் பருவம் அது. அவ்வேளை சிரிப்பொலி சில என் செவிகளுள் புகுந்தன. பெண்டிர் சிலரும் அவர்களுள் இருப்பது தெரிந்து ஊக்கம் மண்டியது உள்ளத்துள்ளே. மாதர் முன் கொடுக்கும் வாக்குகள் இருமடங்கு உறுதியுடன் காக்கப் படுமல்லவா?

ஆண்களோடு, இப்போது பெண்களும் சேர்ந்து தம் முன்னைய வேண்டுகோளையே மீட்டனர். மதீனாவில் வந்து வாழவும் தம்மிடையே அமைதி நிலைபெறச் செய்யவும் வேண்டுமென நபிகளார் வேண்டப் பட்டனர். மௌனம் சாதித்திருந்தனர் அண்ணலார். வரலாற்றின் போக்கு, தேசங்களின் தோற்றம், இறைப்பாதையிலான மானிட முன்னேற்றம்

அனைத்துமே அந்த மௌனத்தில் சங்கமித்திருந்தன. கால ஓட்டத்தின் அச்சிறு இடைவெளி எத்துணை மகத்தானது என்பதை நாங்கள் அப்போது உணர்ந்திருக்கவில்லை. உலகத்தின் மாற்றங்கள் அனைத்துக்கும் அடிப்படையாய் அமைவதாயிருந்தது சின்னஞ்சிறியதொரு நிகழ்வே. இறைவனின் தூதரது வெறும் தலையசைவு அது.

இறைவனின் தூதர் மதீனத்தாரிடம் வேண்டி நின்றது ஓர் உறுதி மொழி மட்டுமே. குருதி, முத்திரை, சத்தியங்கள் அனைத்தும் கொண்டது போல எண்ணி இதனை 'அகபா உடன்படிக்கை' என வரலாறு பெயர் சூட்டி அழைக்கிறது. நான் செவியுற்றதோ மென்மையாக விடுக்கப் பட்ட ஒரு வேண்டுகோளே. தனியோர் இறைவனையே வணங்குதல்; பெண்களுக்குத் தீங்கிழையாதிருத்தல்; பெண் சிசு கொலை தவிர்த்தல்; பொய்யும் திருடும் ஒழித்தல்; இறைவன் ஆணைகளை ஏற்று நடத்தல்; தன்னையும், தன்னைச் சார்ந்தோராய் வருவார் அனைவரையும் பாது காத்தல் என்பவற்றுக்கான உறுதிமொழியொன்றே அவர் வேண்டியது. எச்சரிக்கைகளும் சில விடுக்கவே செய்தனர் நபிகளார். தாம் அவர் களுடன் வாழ வரினும் அவர்கள் மட்டுமே தம்மைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது; தரணியர் அனைவர்க்கும் தம் உளம் திறந்திருக்க வேண்டும்; ஒரு கோத்திரத்தை, ஓர் இனத்தை, ஒரு நிறத்தைத் தான் தேர்ந்திட முடியாது.

உண்மையில் நபிகளார் அவர்களிடமிருந்து வேண்டியதுதான் என்ன? அவரின் வார்த்தைகள் மிகத் தெளிவானவை; கருத்தில் மயக்கங்கள் ஏற்படுத்தாதவை; ஒளிவு மறைவு இல்லாதவை. அவையும் இத்துணை மென்மையாக உரைக்கப்படுதலை நான் ஒரு போதும் கேட்டதில்லை. அவர்களது கடவுளர் அனைவரையும் விறகாய் மாற்றி எரித்து விடும்படி; அரேபியாவின் ஏனைய பிரதேசங்களினின்றும் தம்மைச் சுய பிரஷ்டம் செய்து கொள்ளும்படி; தமக்காக போர்கள் செய்யவும் தயாராய் இருக்கும்படி, நபிகளார் வேண்டினார்கள். ஏற்கெனவே முஸ்அப் அவர்களுக்குக் கற்பித்திருந்தவை அனைத்தும் அவர்கள் நெஞ்சங்களில் ஆழமாய்ப் பதிந்திருந்தன. இறைவனின் கட்டளைப்படி, பிறருடன் தம் சொத்துக்களை - மரத்திலிருந்து அகற்றிய சிறு தோடையொன்றின் கீற்றாயினும் சரியே - பகிர்ந்து கொள்தல் வேண்டும் என்றும் அவர்கள் உணர்ந்திருந்தனர்.

மதீனத்தார் விடுத்தது ஒரேயொரு வினாவே: ''பிரதியாக நாம் என்ன பெறுவோம்?'' தனியொரு சொல்லால் பதிலிறுத்தனர் நபிகளார்: ''சுவனம்.'' ஆடவர் அனைவரும் அவர்தம் கரம் பிடித்து உறுதி கூறினர். பிறர் மனை தொடுதல் பண்பற்ற செயலென்பதால், பெண்டிர் உறுதிகூற, நபிகளார் தலையசைத்து ஏற்றனர்.

இவ்வாறு தான், அகன்ற பாறைகள் சூழ்ந்த நிலத்தின் மத்தியில், காய்ந்துபோன நதிப்படுகை ஒன்றில், வெறும் வாய்மொழிப் பரிமாற்றலால் விளைந்தது அகபா உடன்படிக்கை. அன்றைய இரவு, குறித்த ஓர் இடத்தில்தான் நாங்கள் இருந்தோம் என்பதற்கில்லை என்றே நான் - நீங்கள் காண்பதுபோல, ஆபிரிக்காவின் கறுப்பு மனிதனான நான் - கருதுகிறேன். இறைவனின் பாதுகாப்பில் தான் நாங்கள் இருந்தோம். அகபாவை அடுத்து, இஸ்லாம் பலமிக்கதொரு சக்தியாக மிளிர்ந்தது. இறைவனின் தூதர், நீதி வழங்குபவராய் நிலை பெற்றனர்.

# மதீனா நோக்கி...

நான் பிலால், இப்போது ஒரு மக்கள் தலைவன். புன்னகை எழுகிறது, இதனைக் கூறுகையில். என் பெருமைப் பிணியை மன்னித்துவிடுங்கள். இருந்தாலும் என்ன? நான் ஒரு சாமான்யத் தலைவன் அல்ல. சிலரே உரிமை பாராட்ட முடிந்ததுபோல, நான் இயற்கையிலேயே ஒரு தலைவன். ஒவ்வோர் அடிமையின் அடிமனதிலும் குடி கொண்டிருப்பது தப்பிப் பிழைத்துச் சென்றுவிடும் முனைப்பே. ஆம்! நான் தலைமை அளித்ததும் தப்பிச் செல்வதற்கே. ஜ்வாலையின் தந்தை அபூஜஹ்லுடைய கோபாக்கினியின் வெம்மை எம் பின்னால் பரந்து சுழன்றது. பூதமொன்று பின்னாலிருந்து துரத்தும்போது யார்தான் கதாநாயகனாய் மாறாதிருப்பர்?

மக்காவை விட்டு மதீனா நோக்கி நாங்கள் சிற்சிறு குழுவினராய், பற்பல தவணைகளில், பல்வேறு இரவுகளின் இருளில் சிறுகச் சிறுகச் சென்றோம். எங்கும் தோன்றினர் நபிகளார், எம்மைப் பரீட்சித்து ஊக்கமும் உற்சாகமும் அளித்தனர். எமது புலப்பெயர்வுகளைத் திட்ட மிட்டு, புறப்படும் வேளைகளையும் புகன்று அருகிருந்தனர். அவர் பெரிதும் அஞ்சியது, பாலை வெளியில் எம்மனைவரையும் அழித் தொழிக்கும் படுகொலைகள் ஏதும் வீழ்ந்திடுமோ என்பதே. நாங்கள் கூட்டமாகச் செல்தல் தகாது. பல வழிகளில் பிரிந்து சென்று எட்டாத் தொலைவு சென்ற பின்னரே நாங்கள் ஒன்று கூடினோம். எனக்கு அளிக்கப்பட்ட குழுவில் ஆடவர் அறுவர். இருவர் பெண்டிர். சிறுவர் மூவர். குழந்தைகளுள் ஒன்றை ஏந்தியவர்களாக முதல் மைல் வரை வந்து எம்மை வழியனுப்பினர் நபிகளார். எம்முன் சிங்கமொன்று எதிர்ப் பட்டிருந்தாலும்கூட, நிச்சயம் அதனை நான் கிழித்துக் குதறியிருப்பேன். ஆம், நான் இப்போது ஒரு மக்கள் தலைவன்.

விட்டுச் செல்லும் இடத்துக்கும் சேரவேண்டிய இடத்துக்கும் இடைவெளி, இருநூற்றைம்பது மைல். கோடையில் ஒன்பது நாள் பயணம். சிறார்களுடனாயின் பதினொரு நாட்கள். பல்லாயிரக் கணக் கானோர் இவ்விடைவெளியைக் கடந்து சென்றுள்ளனர். அவர்களின் ஒவ்வொருவரது பாதச் சுவட்டையும் மணலால் மூடி அழித்துள்ளது, பாலைக்காற்று-எமது பாதச் சுவடுகளைத் தவிர. நாங்கள் சுமந்து சென்றது வணிகப் பொருட்களல்ல; இறைவனுக்கான பொறுப்பு. உலகில் கடிகாரங்கள் இயங்கும் காலமெல்லாம் எமது அடிச்சுவடுகள் அழியாதிருக்கும். நாங்கள் தான் முதலாம் ஆண்டின் முதலாம் நாள்.

எமது காலக் கணிப்பைத் தொடங்கி வைத்தது எமது பெயர்வு; எமது ஹிஜ்ரா. எமது பாதச் சுவடுகளே காலத்தைத் தொடங்கி வைத்தன.

ஆண்டின் நடுப்பொழுது. பயணங்களுக்கு எவ்விதத்திலும் உகந்த காலமல்ல அது. இருந்தாலும், எமது பிரயாணம் பெருந்துன்பம் விளைப்பதாய் இருந்தது என நான் கூறமாட்டேன். காற்றை நாங்கள் அஞ்சியிருந்தோம், வாராமலே அது அகன்றது. எம்மைத் தொடர்ந்து வந்தோரும் யாருமிலர். விண்மீன்கள் சுடர்விட்டுத் தெளிவாக வழி காட்டின. ஐந்தாம் நாள், சேய்மையில், அடிவானத்துப் பரப்பில் மூன்று அல்லது நான்கு நாடோடியர் விரைந்து செல்லல் கண்டோம். கடிதில் அவர்கள் எம் கண்விட்டு மறைந்தனர். சிறுவன் ஒருவன் தீக்கோழி யொன்றைக் கிளப்பிவிட்டான். இடைவழியில் சுவைக்கலாம் என அதனைத் துரத்திச் சென்ற நான், நிலத்தில் வீழ்ந்து உருண்டதுதான் கண்ட பலன். பாலையில் நிகழ்ந்தனவாய்க் கூற வேறு ஏதும் இல்லை.

சிற்சிறு நோவினைகள் இருக்கவே செய்தன. துயரங்களே இல்லாது கோடைப்பாலையில் யார்தான் பயணம் செய்ய இயலும்? சிறார் மூவரும் இடைக்கிடை நோய்வாய்ப்பட்டாலும் எம் முதுகுகளின் மீது செய்யும் சவாரியில் களி கூர்ந்தனர். தோழர் ஒருவரது காலில் புண்ணொன்று அரும்பிப் புரையிட்டது. மூன்று நாட்கள் அதனை மூடி மறைத்திருந்தார் அவர். மூன்றாம் நாள் அதனைக் கண்டுகொண்டேன் நான். அவரது காலில் அல்ல; விழிகளில். நான் கண்டுகொண்டதைத் தெரிந்துகொண்ட அவர், நான் வார்த்தையேதும் பேசுமுன்னரே காலடி நீட்டிக் கடுகி விரையலானார். நிச்சயம் அம் மனிதர் வெந்தழலில்தான் நடந்திருப்பார். எல்லோரையும் முந்தியவராக வெகு தொலைவில் ஒற்றைத் தனி மனிதராய் விரைந்து கொண்டிருந்த அவரின் பின்னால் ஓடிச் சென்று காலைக் காட்டும்படி கெஞ்ச வேண்டியிருந்தது. தன் கரம் என் தோளில் இட்டவராய் நொண்டி நொண்டியே மதீனா நுழைந்தார் அவர்.

இதுவே எமது புலப்பெயர்வு; இஸ்லாமிய மொழிமரபில் ஹிஜ்ரா.

## இறைத்தூதரின் புலப்பெயர்வு

நாம் கண்டுகொள்ளவியலா ஓர் அச்சம் எம் புலப்பெயர்வில் இருந்தது. ஆறாம் நாள் எம்மைக் கண்டார் ஹம்ஸா. கொடிய விலங்குகளைக் கலைத்துத் துரத்தி, களைத்துப் போனோர்க்கு ஊக்கமளித்து, சோர்ந்து பிந்தியோர்க்கு உற்சாகமூட்டி, கண்ணுறக் காக்கும் இடையர் போல சுற்றித் திரிந்து வந்த அவர், நாங்கள் கேட்கக் கிஞ்சிற்றேனும் விரும்பாச் செய்தியொன்று சொன்னார். தம்மைப் பின்பற்றியோர் அனைவரும் மக்காவை விட்டு வெளியேறும் வரை தாம் அங்கிருந்து அகலப் போவதில்லை எனத் தீர்மானம் எடுத்திருந்தனர் நபிகளார்.

எம்மிலிருந்தும் அவர்களை விலகியிருக்கச் செய்தனர் நபிகளார். மக்கத்துப் பெரும் பிரபுக்கள் தம் கரங்களுள் இராணித் தேனீ. சாமான்ய தேனீக்கள் குறித்து ஆரவாரிப்பானேன்! தம் கொலைஞர், பகைவர் நடுவில், தம்மைக் கொன்று போடும்படி அழைப்பு விடுப்பவரைப் போல நபிகளார் வெளிப்படையாகவே உலவி வர, நாங்களெல்லாம் வேறு புலம் நாடி விரைந்து கொண்டிருந்தோம். நபிகளாரின் வீரம் விண்ணகத்திலிருந்து அருளப்பட்டதொன்று.

நடந்தவை அனைத்தும் எம் செவிகளையெட்டப் பல வாரங்கள் எடுத்தன என்றாலும், அவற்றை உங்களுக்கு இப்போதே கூறிவைத்தல் தான் ஒழுங்கு.

மக்கத்துப் பெருங்குடிகள் அனைவரும் நபிகளாரைக் கொன்று விடுவதென்றே தீர்க்கமானதொரு திட்டம் தீட்டியிருந்தனர். அறிவிற் சிறந்தார் அனைவரதும் சிந்தைகள் ஒன்றுபடச் செயற்பட்டிருந்தமைக்கு இத்திட்டம் ஒரு சான்று. கொலையையும், கொன்ற தம் கரங்களையும் ஒரே பாத்திரத்துக் குருதியில் கழுவிக் கலைவதே அவர்கள் திட்டம்.

ஏழு கோத்திரங்களின் ஏழு பிரதிநிதிகள், தம் ஈட்டிகள் ஏழினை நபிகளாரின் செவ்விய மேனியில் செருகுவதே அவர்களது கொலைத் திட்டம். ஒவ்வோர் ஈட்டியும் ஒவ்வொரு கோத்திரத்தினது என்பதால் எந்தவொரு தனிக் கோத்திரத்தையும் குற்றஞ்சாட்ட இயலாது. எந்த ஒரு தனி மனிதனும் இப்பழியில் அகப்படான், சம்பிரதாயம் அது. எழுவராய்ச் சிந்திய இரத்தத்துக்குப் பழி வாங்குதலும் இலகுவல்ல. கழுவித் துடைத்து வேறு கருமம் பார்த்தலே உத்தமம்.

ஏழு ஈட்டிகளின் பிரயோகத்தைப் பிரேரித்தவன் ஷைத்தானே எனச் சிலர் கூறுமளவு அத்துணை நுண்மையுடன் தீட்டப்பட்ட திட்டம் அது. மனித உருவெடுத்து மக்கத்துப் பிரபுக்களின் கூட்டத்தில் அவன்

அமர்ந்திருந்தான் என்பர். அது அவனால் இயலாத காரியமல்ல. மானிட ஆடையணிந்து, மானிட உருவமெடுத்து நடத்தலில் ஆசை மிகுந்தவன் ஷைத்தான். அவையில் அவனை அடையாளம் காணுதல் கடினம். கருமத்தில் கண்ணாயிருப்பான் அல்லது கவனமே இல்லாதிருப்பான். புத்தித் திறம் மிக்கிருப்பான் அல்லது சோடை போய்ச் சோர்ந்திருப்பான். நரகினை பெற்றவனாயினும், தரணியில் பற்பல தலைகளுள் உறைபவன் அவன். என்றாலும் ஷைத்தான் திறம் மெச்சுதல் அவசியம். சுவனத்தி லிருந்து வீழ்ந்து புவனத்தில் அலையும் பேர் புகழ் நடிகனல்லவா அவன்!

ஷைத்தானோ, வணிகரோ, அனைவரும் தோற்றனர். ஈட்டிகள் உயர்ந்தும் எவருள்ளும் பாயவில்லை. கனத்த துயிலில் ஆழ்ந்திருப்பர் தூதர் என்றெண்ணிக் காரிருளில் எழுவரும் நபிகளாரின் இல்லம் சூழ்ந்தனர். வருங்கேடு முன்னமே உணர்ந்திருந்த அண்ணலார், சோதரர் அலீயைத் தம் படுக்கையில் தமக்காய்ப் படுக்கச் செய்திருந்தனர். நான் அறிந்தோர் அனைவரிலும் அடக்கம் மிக்கவர் அலீ. புன்னகை மலர்த்தி, வெறுமையாய்க் கிடந்த படுக்கையை அவர்களுக்குக் காட்டி நின்றார் அவர்.

மக்காவினின்றும் நபிகளார் வெளியேறி விட்டனர். இருந்தும் ஆபத்து இன்னமும் தொடர்ந்தது. நபிகளாரை அல்லது அவர்தம் சிரசை மீண்டும் மக்கா கொண்டு வருவார்க்கு நூறு ஒட்டகைகள் பரிசெனப் பறை சாற்றினார் அபூஸுஃப்யான். குதிரைகளும் ஒட்டகைகளும் பரபரத்து ஓடின. சேணம் கட்டுதல், பாய்ந்தேறி அமர்தல் என எங்கணும் அமர்க் களம். நூறு ஒட்டகைகள் என்பது எவரையும் கிளர்ந்தெழச் செய்யும் ஒரு பரிசே. அதனிலும் வேட்கையை உந்துவது மனித வேட்டை. மனிதன் தன்னினத்தவனே ஆன ஒருவனை எத்துணை ஆவேச வெறியுடன் கூச்சலும் கொக்கரிப்பும் கொண்டு துரத்துவான் என்பதை முன்னாள் அடிமையாயிருந்த அனுபவத்தில் நான் உறுதியுடன் கூற இயலும். தன்னினத்துத் தசையும் குருதியும் அஞ்சியோடும் இருகால்களும் தரும் வேட்டைச் சுவையை அச்சமும் மூர்க்கமும் மிக்க விலங்குகள் கூட மானிடனுக்கு என்றும் அளியா. எனினும், நம்ருதே போலும் அவன் தன்னைத் தான் பெரு நெருப்புள் துரத்திக் கொள்கிறான்.

பரந்த பாலையினூடாக மதீனா செல்லும் முனைப்பில் ஈடுபடாதது, நபிகளாரின் சாமர்த்தியம். அபூஸுஃப்யான் தன் குதிரைப்படை வலை யைப் பரப்பியதால் பாலை வெளி நபிகளார்க்குக் கழுமரம். மாறாக, மதீனா நகர்க்கு மாற்றமாய் அமைந்த எதிர்த் திசையில் இறைவன் அவரை வழிசெல்லச் செய்து, தௌர் மலையின் குகையொன்றில் மறைந் திருக்கச் செய்தான். குர்ஆன் கூறுவது போல இறைவன் சதிகாரர்கள் அனைவரையும் மிகைத்தவன். நபிகளாரோடு இருந்தார் அபூபக்ர்.

எவருக்கும் துணிவூட்டும் சுவை நிறைந்தது நூறு ஒட்டகங்களெனும் உறுதியான பரிசு. வாய்ப்புக்கேடாக மக்காவில் அப்போது அடிச்சுவடு கொண்டு வழிகண்டு பிடிப்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அபிஸீனியன்; என்னையே நிகர்த்த கறுப்பன். பாலையின் தனிப்பெரும் எஜமானாய் விளங்கினான் அவன். சுழலும் காற்றைச் சுவாசித்து வெட்ட வெளியில் விரைந்த பறவையின் சுவட்டையும் பிடிப்பான் அவன் என்றும், பாறைகளில்கூட பாதப் படிவங்களை முகர்ந்து காண்பான் என்றும் கூறுவர். காற்றினைக் காணும் திறனும் கொண்டவன் அவன் என்பர், அவன் நண்பர். எல்லோரும் முன்னோக்கிச் செல்ல, இந்த ஞானவானோ பின்னோக்கிச் செல்வதே தகும் என வற்புறுத்தினான். ''பாதை அமைப்பவர் முஹம்மது; நானல்ல'' - இது மட்டுமே அவன் கூறியது. அவனது திறன் தௌர் மலைக் குகையின் வாசலுக்கே அவனை இட்டுச் சென்றது. தோள் குலுக்கிப் பாறையொன்றின்மீது அமர்ந்தான் அவன். அவன் கடமை தீர்ந்தது; மீதியை ஏனையோர் செய்யலாம்.

உமையா, அபூஜஹ்ல், உடன் வந்த கொலைஞர் அனைவரும் குகையின் வெளியே நின்றிருந்தனர்.

''முடிந்தோம் நாம்'' என்றார் அபூபக்ர், ''இருபது பேர் அவர்கள், நாம் இருவர் மட்டும்.''

நபிகளார் மெல்லவே மொழிந்தார்கள்: ''இறைவனும் இங்குள்ளான். இறைவன், நீர், நான். நாம் மூவர்.''

அவ்வேளை ஆங்கொரு சிலந்தி குதித்துக் கீழே குகைவாய்க் குறுக்கில் தன் வலைப்பின்னலை ஆரம்பித்தது. அதேவேளை வெண்புறாக்கள் இரண்டு தம் அலகுகளில் குச்சிகள் சில ஏந்திவந்து, நுழைவாய் அருகில் அவசரமாய் ஒரு கூடு அமைத்தன. நபிகளாரும் அபூபக்ரும் குகையின் இருளில் கூனிச் சுருண்டிருந்தனர்.

என் முன்னாள் எஜமான் உமையா வாளேந்திய கையுடன், என்றும் போல் இயற்கையை அச்சுறுத்தியவனாகப் பாறை மீது ஏறி வந்தான். சிதறிப் பறந்தன புறாக்கள். வெடிப்பொன்றில் பதுங்கி மறைந்து கொண்டது சிலந்தி. ஆயினும், அவற்றின் கைவண்ணம் உமையாவை வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தன. தெளிவான சான்றுகள் - சிலந்தி வலை சிதையாமல் எவரும் குகையுள் நுழைந்திருக்க முடியாது. இடையீடு செய்வார் மத்தியில் பறவைகள் கூடுகட்டாது. அபிஸீனிய ஞானவானைச் சபித்துத் தன் குதிரையேறி மறைந்தான் உமையா. தடம் தொடர்வானும் தன் வழி சென்றான். அதன் பின்னர் அவன் எந்த ஒரு மனிதனையும் கண்டுபிடிக்க முனைவதில்லை எனச் சபதம் செய்ததாகச் செவியுற்றேன்.

இயல்பாக நிகழும் நிகழ்ச்சிகள்தான் அவை. சிலந்திகள் வலை பின்னுவதும், புறாக்கள் கூடு கட்டுவதும். இருந்தும், அன்றைய நாள் இறைத்தூதரின் உயிர் தொக்கியிருந்தது, சிலந்தி வலையொன்றில். இறை மார்க்கத்தைக் காத்து நின்றன இரு புறாக்கள்.

தம்மைத் தேடி வந்தோர், நாடியது கிட்டாமல் நலிவுற்றுக் களைத்துத் திரும்பும் வரை மூன்று நாட்கள் அக்குகையினுள்ளேயே இறைவனின் சந்நிதியில் இருந்தனர் இருவரும். நான்காம் இரவு, பாலைப் பரப்பின் சுற்று வழிகளையும் வெறுமை வெளிகளையும் நன்கறிந்த அர்கத் எனும் நாடோடி வேண்டிய உணவும், ஒட்டகைகள் இரண்டும் கொண்டுவந்து சேர்ந்தார். இறைவனையும் இறைத்தூதரையும் ஏற்றுக்கொண்டவரல்ல அர்கத்.

இருளில் இடறி இறங்கிய மூவரும் மதீனாவிலிருந்து மேலும் சேய்மையுற்றோராய் மேற்கு நோக்கியே பயணப்பட்டனர். நாட்கள் இரண்டு கழிய, செங்கடல் அண்மி வந்த வேளை, வழக்கமான வழிகள் அனைத்தையும் துறந்து வடக்கு நோக்கிப் பெரும் அரை வட்ட வடிவில் பாதையமைத்துச் சென்றனர். இப்படிச் சென்றும் கூட, நபிகளாரைத் தேடிச் சுடு மணல் வெளியில் சுற்றித் திரிந்ததொரு வீரன் இவர்களைக் கண்டு கொண்டான். அவன் ஏறியிருந்ததோ அரேபிய நாட்டின் சிறந்த தொரு குதிரை. எனினும், இறைவன் அக்குதிரையை மணலிடையே வீழ்ந்திடச் செய்தான். அம்மனிதனும் அவ்விடத்திலேயே முஸ்லிமானார் என்பர்.

இதற்கிடையில்,மதீனாவில் நாங்களெல்லாம் வழிமீது விழி வைத்து எதிர்பார்த்தவர்களாய் இருந்தோம். அன்றாடம் காலையில் பாலை வெளியினுள் செல்லும் எம்மை நாழி சில கழிய சூரியன் எரித்துத் தகித்து வீடு நோக்கி விரட்டிடுவான். மிகக் கொடூரமாயிருந்தன அன்றைய நாட்கள். பயணஞ் செய்வோரும் தம் பயணத்தை இடை நிறுத்தி, உயர்ந்த சூரியன் உச்சியைக் கடக்கும் வரை துகிலின் நிழலில் தஞ்சம் காணுமளவு வெம்மை. இன்னமும் நினைவில் பசுமையாய்ப் பதிந்திருக் கிறது அன்றைய நாள் நிகழ்வுகள். ஆம்! வாரம் ஒன்றாய்க் காதோரம் இதழ் வைத்து ரகசியமாய்த்தான் நாங்கள் உரையாடி வந்தோம்.

ஒருநாள் நடுப்பகல் கழிந்த வேளை, திடீரென ஒலியொன்று எழக் கேட்டு ஓடினோம் அனைவரும். முதன் முதல் அவர்களைக் கண்டவர் ஒரு யூதர். அவரது நீண்ட பார்வை நீடு வாழ்க. கானல் கொதிப்பில் மெல்லவே அசைந்து, தொலைவுச் சிறுமையில் தோன்றிய மெலிந்த உருவங்களாய், ஒட்டகை மீதமர்ந்திருந்த அவர்கள் மேலும் கீழுமாய் ஊர்ந்து வந்தனர். மண்ணிடை வீழ்ந்து, எகிறித் தடுக்கி, வெற்றியில் களித்து, வீறிட்டலறி, மகிழ்ச்சியில் சிரித்து, ஈச்சங் கொப்புகள்

கையேந்தியசைத்து, அவர்களை அடைந்துகொள்ளவென விரைந்து ஓடினோம் பாலையுள். இறைவனின் தூதர் தம் நகர் அடைந்தனர். வதைகள் செய்வாரிடமிருந்து இஸ்லாத்தை விடுவித்தது ஹிஜ்ரா.

இறைவனின் தூதர் கிறிஸ்தவ ஆண்டு 622 ஜூன் மாதம் இருபத் தெட்டில் மதீனா வந்தனர். என்றாலும் நமது காலக் கணிப்பை ஆரம்பித்து வைப்பது ஹிஜ்ராவே. ஹிஜ்ரா நிகழ்ந்தது, முதலாம் ஆண்டில்.

# ஒட்டகையின் தேர்வு

ஆங்கொரு மருங்கினில் நின்ற ஈச்ச மரத்தினடியில் தம் ஒட்டகையை விட்டு இறங்குமுன்னமேயே நபிகளார் தம் அரசாண்மையின் முதலாவது தீர்மானத்தை எடுக்க வேண்டியவர்களாயிருந்தனர். ஏனெனில், இந் நகரத்தில் முதலடி வைத்த முகூர்த்தத்திலேயே அதனைப் பிரித்து விடும் அபாயத்துள்ளும் அவர்கள் தள்ளப்பட்டார்கள். உறைவிடமும் உணவும் தருவதற்காகப் பல குரல்கள் ஒவ்வொரு திக்கிருந்தும் ஓங்கின. கிட்டிய அழைப்புகள் அனைத்துமே தயாளத்தால் விடுக்கப்பட்டவையல்ல. சிறப்புமிக்க ஒரு விருந்தினர், உபசரிப்பவர்க்கும் நிச்சயம் சிறப்பினைக் கொண்டு வரவே செய்வார். உபசரணைகளை உவந்தேற்றலில் தவறு களில்லை; ஆனால், அவ்வுபசரணைகளே சிறைக் கூடமாய் அமைந்து விடுவதும் உண்டு.

வற்புறுத்தலில் மிக்கு நின்றவன் வஞ்சக மனங்கொண்ட ஸலூல். இறைத்தூதரைத் தன் எண்ணப்படியெல்லாம் வழி நடத்தலாம் என எண்ணியவனாக ஒட்டகையின் கடிவாளத்தைத் தன் கையில் எடுத்த அவன் கூறினான்: ''மதீனத்தில் சிறந்தது என் இல்லம்; என்னுடன் தங்குக. தோட்டங்கள் பல கொண்டுள்ளேன். விருந்துக்கும் குறை வில்லை.''

சூழ்ந்து கொண்டிருந்தது அபாயம். ஒரு சாராருக்கு உவப்பளிப்பது மறு சாராரை நிராகரிப்பதாயும் முடியலாமல்லவா? என்றாலும், நான் பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளதுபோல, குழப்பத்துள் ஆழ்ந்துள்ள மனிதரே சிலபோது மிக எளிதான தீர்வுகளைக் கண்டு கொள்கின்றனர்.

தம் ஒட்டகை கஸ்வாவின் கழுத்தில் மெல்லவே நபிகளார் தட்டிக் கொடுத்தவேளை அவர்தம் கண்களில் சிறு சிமிட்டலொன்று கண்டேன். ''இத்தனை அழைப்புகளில் எதனை ஏற்பது என நான் அறியேன்; எனது பெரிய இப்பயணத்தில் மிக்க விசுவாசமாக நடந்துள்ளது கஸ்வா. கஸ்வாவே தேர்ந்து கொள்ளட்டும்.'' குழுமியிருந்தோர் முகங்களில் நிறைந்தது குழப்பம். கஸ்வாவோ மிருகத்துக்குரிய தியானத்தில் வாயை மென்று கொண்டிருந்தது. ஒட்டகைக்கான சைகையாகத் தம் கைத் தடியை உயர்த்தினர் நபிகளார். நிச்சயம் இல்லா ஒரு நிலை முடிந்தது. ''என் ஒட்டகை எவ்விடம் நிற்பதென முடிவு செய்கிறதோ அங்கு நான் தங்குவேன். அங்கேயே என் பள்ளிவாசலையும் அமைப்பேன்'' என்றனர் நபிகளார்.

ஒட்டகை விட்டிறங்கிய நபிகளார், அதனை தட்டிக் கொடுத்தார்கள். பாலைச் சோலையின் ஆழப் பரப்பினுள் செல்லலானது கஸ்வா. பளு

மிகப் பெற்று, லட்சணம் குன்றி,பவிசான நடையால் பளுவிலாத் தோற்றம் காட்டி, இதமாய், இதமிலாததாய், மர்மங்கள் மிக நிறைந்து, ஓங்கி உயர்ந்து செல்லும் அம்மாமிச அசைவை நாங்கள் அனைவரும் பின் தொடர்ந்து சென்றோம். அதன் வாலில் தொங்கியோராக நாங்கள் செல்லவில்லைதான். ஆனாலும், அதன் தலை திரும்பும் தளமெல்லாம் திரும்பினோம். நாங்கள் வாழப்போகும் இடத்தையும் நபிகளார் அடங்கும் தலத்தையும் தன் திமிளினுள் கொண்டிருந்தது கஸ்வா என்பதை நாங்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. இறைவனின் தூதர், தம் வாழ்வின் மிக முக்கியமான அரசியல் தீர்வொன்றைக் காணும் பொறுப்பினைச் சுமை தூக்கும் ஒரு விலங்கிடமே விட்டு வைத்தனர், விந்தை!

சிறு தொலைவு நடந்து சென்ற கஸ்வா தன் நடை நிறுத்தியது. நிர்ணயம் இல்லா அந்நிலை ஒரு குலுக்கல் மட்டுமே. அவ்விடம் முகர்ந்து, இலையொன்றைப் புசித்து, சற்றே சொரிந்து, பின்புறம் சொற்பமாய் நகர்ந்து,மறுபடி தன் வழி தொடர்ந்து சென்றது. எம் அனைவரது உணர்வுகள் பெரு மூச்சுகளாய் வெளியேறின. கலங்கிய உளமுடையவனாய் ஸலூல் முதன் முதல் தன் கலப்புறு புகழுரை புகன்றிடக் கேட்டேன். - "நான் எண்ணியிருந்ததைவிட புத்திசாலி இவர். ஒட்டகையின் தேர்வால் புண்படுவார் யாருமிலர்."

கஸ்வாவின் ஈரடிகளை நாலடி கொண்டு கடந்தேன் நான். ஒட்டகைக்கும் இத்தரணியில் நிச்சயம் ஒரு நாள் உண்டு. உலகம் முடிவுறும் நாள் வரையும் இந்த ஒட்டகம் குறித்து நிச்சயம் பேசுவர் இவ்வையகத்தார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அலெக்ஸாந்தரின் குதிரை புஸிபாலுஸ்ஸூம், ரோம சட்டமன்ற அங்கத்தவராய் கலிகூலா நியமனம் செய்த இன்ஸிடாடஸ் எனும் குதிரையும் மறக்கப்பட்ட பின்னரும் நபிகளாரின் ஒட்டகை, ஹிஜ்ராவின் கஸ்வா, மானிடர் நினைவை விட்டகலாது. வெண்தோல் அங்கியும், பரந்தகன்ற நாசித் துளைகளும், தத்துவார்த்த விழிகளும் கொண்ட கஸ்வா முழுமையான ஓர் ஒட்டகையே. முழுமைகள் அனைத்திலும் தோய்ந்திருக்குமன்றோ ஒரு தோஷம்! கஸ்வாவின் முழுமையில் காணக்கிடந்த களங்கம் அதன் இடப்புறச் செவியாகும். இளமைக் காலத் துடிப்பில் மற்றோர் ஒட்டகையுடன் மோதிய வேளை இழந்து பட்டது அச்செவி.

முடிவாகத் தான் நாடிய இடம் கண்டு கொண்டது கஸ்வா. ஐந்து மரங்களால் எல்லை மறிக்கப்பட்டதொரு சிறுவெளி. ஆனாலும், அதன் பாவனைகள் இன்னும் முடியவில்லை. புதிர்ப்பைக் காலியாகி விடவும் இல்லை. வரவிருந்தவை இன்னும் ஏராளம். முழங்கால் மடித்து, குனிந்து, மீண்டும் எழுந்து, தலையினைத் திருப்பி, சூழல் முகர்ந்து, மொய்த்திருந்த ஈக்களை வாலால் அகற்றி, ஜெருஸலம் அமைந்த வடக்

கையும், தெற்கே அமைந்த மக்காவையும் மாறி மாறி நோக்கி, நீர்க்குமிழி முகிழ்ப்பது போலும் ஓர் ஒலியெழுப்பி, மீண்டும் குனிந்து, இப்போது, தன் உடற்பளு முழுவதையும் நிலத்தில் ஆழ்த்தி - தம்ம்!! கழுத்தினை நீட்டி, நாடியை மண்ணில் பதித்து நீண்டு படுத்தது கஸ்வா. தேர்வு முடிந்தது.

ஓய்வாய்ப் படுத்திருந்த ஒட்டகையின் பக்கத்தில் நின்று நபிகளார் கூறினார்கள்: ''இங்கேயே நான் தங்குவேன்; என் பள்ளிவாசல் அமைப்பேன்''.

# பள்ளிவாசல்

அடுத்த விடியலில் அலுவல்கள் தொடங்கின. ஈட்டியொன்று கொண்டு பள்ளிவாசல் நிர்மாணத்துக்கான முதல் கோட்டினைக் கீறினர் நபிகளார். நெடிதுயர்ந்த ஐந்து பெரும் மரங்களுக்கிடையிலான தலமே கட்டிடத்துக் குரிய இடம். இறைவன்தான் எமது தேவைக்கென இம்மரங்களை இவ்வகையில் நட்டு வைத்தானோ என நாம் கருதுமளவு சீரான இடை வெளியோடு பள்ளிவாசலுக்கான தூண்களாய் அமைந்தன அவை. மெய்யாகவே இறைவன்தான் கஸ்வாவை இத்தலம் நோக்கி நெறிப் படுத்தியிருந்தான்.

முதல்கோடு இடப்பட்டு, முதல் வெட்டுடன் மண்புரள, எம்நிலை மறந்து, மகிழ்ச்சிப் பெருக்கோடு வேலையில் திளைத்தோம் நாங்கள். பாதங்களால் மண் அகழ்ந்து கரங்களால் பண்படுத்தினோம். பூரித்த இதயத்துடன் செங்கற்கள் செய்தோம்; கற்கள் சுமந்தோம்; பற்பல மரங்களில் பலகைகள் அறுத்தோம்; சாந்துகள் கலக்கினோம்; புல் பூண்டு களைந்து பூமியைச் சமன் செய்தோம்; குழிகள் தோண்டினோம்; ஏணிகள் ஏறினோம்; உயர்த்தினோம் கூடைகள்; கயிறுகள் பிணைத்தோம்; ஆணிகள் அறைந்தோம். அலுவல்கள் அனைத்தையும் மெத்த இலகு வாகச் செய்த எம்மைக் கண்டோர், நாங்கள் செய்தது வேலையல்ல; நடனம் என்றே சொன்னார்கள்.

எங்கும் நிறைந்திருந்தனர் நபிகளார். வேலைகள் அனைத்திலும் அன்னார் ஒன்றாய்க் கலந்தனர். பல நாள் படுக்கையில் தள்ளும் கடும் பயணம் ஒன்று முடித்து வந்தும் ஒரு கணம்கூட ஓய்வுகொள்ள மறுத்தனர். அண்ணலார் எங்கு சென்றாலும் சிறார் கூட்டமொன்று உடன் பின் சென்றது. அனைத்துச் சிறுவரும் உதவி செய்யும் ஆர்வத்தில். தாமறியா மலேயே கருமங்களைக் குழப்பி நின்றனர். அவர்களது தொந்தரவி லிருந்து நபிகளாரை விடுவிக்க முயன்றேன் ஒருமுறை. ஆயினும், என் மீதே திருப்பி விட்டனர் அம்முனைவை: "பாவம், பிலால்... அவருக்கு உதவி செய்யுங்கள்." என்னை மொய்த்த சிறுவர்களிடமிருந்து நான் மரமேறியே தப்ப வேண்டியிருந்தது. இதைக் கண்ட நபிகளார், முகத்தில் உதிர்ந்த முத்து வியர்வையை வழித்த வண்ணம் வாய்விட்டுச் சிரித்து நின்றனர். குறுநடை நடக்கும் சிறுவன் ஒருவனை மெதுவாகத் தூக்கி, அவன் மென் சிறுகரங்களில் பாதிச் செங்கல் பரிவுடன் இட்டு, சுவரின் அருகே சுமந்து சென்று, கல் பாதியினை ஆங்கு பதிக்க வைத்து, 'எம் பள்ளிவாசலைக் கட்ட நீயும் உதவியதாக இப்போது கூறலாம்' என

அன்பாய் மொழிந்தனர் இறைவனின் தூதர். தன் தாயிடம் மீண்டும் தளர் நடைபயின்று சென்ற அந்தப் பாலகனை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்! அவன் முழு முகத்தினும் பெரிதாயிருந்தது அவன் சிரிப்பு.

எவரும் நபிகளாரை ஓய்வாய் இருக்கச் செய்ய இயலவில்லை. அமர்ந் திருக்கும்படி பன்முறை ஹம்ஸா கெஞ்சியும் ஆனதெதுவும் இல்லை. எமது தோல்வியை வண்ணக் கவியாய் மாற்றி மகிழ்ந்தோம்:

தூதர் தொழிற்பட
சோம்பியாம் அமர்ந்தால்
நழுவினோம் என்றே
நாயன் எமை இகழ்வான்.

சோர்வே இன்றி நபிகளார் அவ்விதம் காரியம் ஆற்றிடத் தக்க காரணங் கள் உண்டென்பது நிச்சயம். அண்ணலார் எப்போதும் எங்களுக்குக் கற்பித்த வண்ணமே இருந்தார்கள். ‘தொழிற்படல், தொழுகை’, என்பர் அவர், ‘தொழிற்படுவான் கரத்தை இறைவன் விரும்புவான்’ என்றும் கூறுவர்.

மிருகங்களின் மீது மிகுதியான சுமையேற்றல், கழுதையொன்றின் மீது இருவர் அமர்தல், ஒட்டகையின் சக்தியை உள்ளதிலும் மேலாய் மதிப்பிடுதல் என்பனவற்றையெல்லாம் எமக்குத் தடை செய்தனர் நபிகளார். கொடுமை இழைத்தல் காண அவர் சினம் மீதூறப் பெறுவர். காரணம் இன்றிக் கால்நடைகளுக்கு ஊறுவிளைவிக்கும் எவரும் நபிகளாரின் புருவச் சுழிப்பையே பகரமாய்ப் பெறுவர்.

பள்ளிவாசல் அமைத்து முடித்தோம்.

## முதல் அழைப்பு

சிறப்பு மிக்க உயர் கட்டிடங்கள் வேறுபல இருக்கவே செய்தன. கட்டடக் கலை பயின்றவர்கள் எவரும் எம்முடன் இல்லை. பைஸாந்தியத்தின் பரிசுத்த தேவாலய விதானத்தின்கீழ் இருந்தவனல்ல நான். என்றாலும், நாங்கள் செய்ய வேண்டியன செய்திருந்தோம். எமது தொழுகைக்குத் தக்கதான பள்ளிவாசலை நாங்கள் அமைத்துக் கொண்டோம். கட்டிட வேலை முடிந்தது. உட்புறத்தரைமேல் இனிதமர்ந்தோம். ஈச்சந்தட்டிக் கூரையின் துளைகளூடாகக் கதிரவன் ஒளி பல்வேறு ரூபங்களில் தரை மீது வீழ்ந்து கொண்டிருந்தது. கூரையை அண்ணாந்து பார்த்தவராக எமது கைவண்ணத்துக்கு அழகான வார்த்தை வடிவம் அளித்தார் ஹம்ஸா: ''மூஸா நபியின் தொட்டிலைப்போல் இருக்கிறது இது!'' ஒப்பீடு நபிகளாரை மகிழ்வித்தது. மெய்யாகவே எமது ஆன்மாவுக்குப் புத்துயிர் அளித்து, குளுமையும் பசுமை நிழலும் கொண்டு கண் குளிர்ச்சி தந்து கொண்டிருந்தது எம் பள்ளிவாசல்.

என்றாலும், இன்னமும் அது முழுமை பெறவில்லை.

இன்னும் ஒன்று அவசியம் என உரைத்தவர் அலீ என்று தான் என் நினைவு. ''குறைபாடு ஒன்று உண்டு... அங்கே உயரே...'' கூரையைச் சுட்டிக் காட்டியவராகக் கூறினார் அவர்: ''ஏதும் ஒரு சமிக்ஞை... மாந்தரை தொழுகைக்கு அழைக்க ஒரு மார்க்கம்!''

''கொடியொன்று ஏற்றிடலாம்'', அம்மார் அளித்த ஆலோசனை இது.

நம்பிக்கையாளர்களைத் தொழுகைக்கு அழைப்பதற்கான சிறந்த மார்க்க மொன்றைத் தீர்மானிப்பதற்காக அச்சிறு பொழுதில் நாங்கள் அனைவரும் முன்னும் பின்னும், மேலும் கீழுமாக வாதப் பிரதிவாதங் களில் சென்று கொண்டிருந்தோம். தம் கரங்களைக் கட்டியவாறு அமர்ந் திருந்தனர் நபிகளார். எமது பிரச்சினையைவிட்டு அகலவில்லை அவர். தம்மை அதனுள் புகுத்திக் கொள்ளவும் இல்லை.

''மணியொன்றை மாட்டலாமோ?''

''அது கிறிஸ்தவர் கொண்டுள்ள சமிக்ஞை''

''முரசு?''

''அதில் இரத்த முயக்கம் அதிகம்''

''ஊது கொம்பு? - யூதர் போல, வலிமை மிக்கது அது.''

''மிருகத் தன்மையும் மிக்கது அது.''

''பெரியதொரு தாரை?''

அமைதியில் சரிவுற்றோம். கொடி, மணி, முரசு, கொம்பு, தாரை? எவர்க்கும் திருப்தியில்லை. கடுமணி ஓசை காதைக் குடையும்; தாரை தலையைப் பிளக்கும்; முரசு குருதியை மூர்க்கமுறச் செய்யும்; கொம்பு உறுமும்; உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் எவரையும் எழுப்பிடுமோ கொடி?

அன்ஸாரிகளில் ஒருவரான அப்த் அல்லாஹ் பின் ஸைத், வளைந்து, வெட்கி, சூழலைத் தான் குழப்பிவிடுவோமோ என்று நெஞ்சத் தஞ்சிய வராக, அடுத்த கணம் உலகத்தையே தான் அதிர வைக்கப் போகும் உணர்வேதும் இல்லாதவராக மெல்லமாக முன் வருதல் கண்டேன். நபிகளாரிடம் ஏதோ கூற அவர் விழைகிறார் என உடன் உணர்ந்து நான் ஒதுங்கி நின்றேன்.

''கனவொன்று கண்டேன்... இறைத்தூதரே!'' எனத் தொடங்கினார் அப்த் அல்லாஹ். ''...அந்தக் கனவில் மானிடக் குரல் ஒன்று எம்மைத் தொழுகைக்கு அழைத்தது.'' தான் கூறுவதை எவரும் கவனிப்பதா யில்லை என்ற ஆதங்கத்தில் போலும் கூற வந்ததை முடித்துக்கொண்டார் அவர். ''...ஒரு சாதாரண மனிதரின் குரல்... இறைத்தூதரே!''

நபிகளாரின் முகம் பார்த்தேன். விழிகளில் தெரிந்தது கண்ணீரின் திரட்சி. அப்துல்லாஹ்வை நெருங்கிக் குனிந்த அண்ணலார் கூறினார்கள்: ''...ஆம்! அப்படித்தான் ஆகும் அது. உமது கனவு இறைவனிடமிருந்து வந்தது... நீர் கூறியது போலவே அது ஒரு மானிட குரலாகத்தான் இருக்கும்...'' மிக மெதுவாகவே அண்ணலார் பேசினர். இனியென்ன? அதுவே, இறுதி முடிவென நான் உணர்ந்து கொண்டேன்.

தீர்மானம் ஆயிற்று. ஆனால் எக்குரல்? யார் குரல்? என்னதான் கூறும் அக்குரல்? மென் குரலா? இனிய குரலா? வன் குரல் உறுமலா? என் மனம் பதைப்புற்றுப் பரந்து திரிந்தது. மழலைக் குரலா? மாதின் குரலா? முதிய குரலா? வீரனின் குரலா? கீதக் குரலா? வித்தகன் குரலா?... நபிகளாரின் ஒரு கரம் என் தோள் மீது வீழ்ந்ததை உணர்ந்தேன்; கண்டேன்.

''உமது குரல்... பிலால்!''

இறைவனின் தூதர் மொழிந்ததை முதலில் நான் உணர்ந்திலேன். அவர் கரம் என் தோளில் வீழ்ந்ததும் ஏனென்றறியாமலேயே துள்ளி யெழுந்தேன் நான். அடிமைத்துவம் என்னுள் பதித்திருந்த உணர்வு அது. கட்டளை இன்னதென உணர்ந்து கொள்ளுமுன்னமேயே பணியைத் தொடங்குவது அடிமையர் பண்பு. அனைத்து முகங்களும் அடியேன் முகம் நோக்கித் திரும்பின. அப்போதுதான் விஷயம் உதயமானது. இருந்தும் இஸ்லாத்தின் குரலாய் மாற்றம் பெறவிருந்த என்னுள் வார்த்தையேதும் எழுவதாய் இல்லை.

என்னை நெருங்கி வந்த ஸைத் தம் கரத்தினை அன்புடன் என் கரம் மீது வைத்துக் கூறிய வார்த்தைகள் இன்னமும் என்னைப் பெருமையுள் கூனச் செய்கின்றன: ''இஸ்லாத்துக்கு அளிக்க அப்படியான ஒரு பரிசு என்னிடம் இருந்திருக்கக் கூடாதா?'' எளியேனுக்களித்த இம் முகஸ்துதியை நானே மீளவும் கூறுவதை நீங்கள் மன்னிக்க வேண்டும். ஸைத் அதனைக் கூறியமைதான் நான் அதனை மீட்டுக் கூறுவதற்கான காரணம். என் அன்பை மிகக் கவர்ந்தவர் ஸைத். இஸ்லாத்துக்காக அவர் அளித்த பரிசுகளை அளவிடத்தான் முடியுமா?

எழுந்து நின்ற நபிகளார் என் முகத்துள் நோக்கினர். அவருக்கு மட்டுமே உரியதொரு நூதனநோக்கு அது. ஸைத் கூறியதிலும் குறை வாகவே அவர் கூறினார்: ''சிறந்ததொரு குரல் உம்முடையது பிலால்! பயன்படுத்தும்!''

''நான் என்ன கூறுவேன் இறைத்தூதரே?''

''இறைவனைப் புகழ்ந்து, அவன் தூதரைப் போற்றி தொழுகைக்காக அழையும். மீண்டும் இறைவனைப் புகழ்ந்து கூறும், போதும்.''

வாழ்வின் கிரீடம் சூட்டப்படும் வேளையில், எப்போதுமே மனிதன் அதனை அவாவி நிற்பதில்லை. நபிகளாரே, இறைவனின் தூதராக அழைப்பு விடுக்கப்பட்ட வேளை போர்வைகளின் கீழ் புகுந்து கொண்டனர். அவருடன் அடியேனை ஒப்பிட முயலவில்லை நான். எனக்கும் அவ்வேளை போர்வைகளே தேவையாய் இருந்தன என்பதைக் கூறவே வந்தேன். எனக்குப் போர்வையும் இல்லை; ஒளியும் தலமும் இல்லை; தப்பிக் கொள்ளவும் வழியில்லை.

''மேலே சென்று தொழுகைக்காக அனைவரையும் அழைப்பீராக'' என்றனர் நபிகளார். 'மேலே' என அவர் குறித்துக் காட்டியது, பள்ளி வாசலின் அருகிருந்த ஒரு வீட்டின் மண்ணாலான கூரையை. உங்கள் மினாராக்கள் பலவற்றை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். படிகளது அழகின் சிறப்பென்ன? உப்பரிகைகளின் பக்குவம் என்ன? உயரத்தின் மாண் பென்ன? உச்சத்தை அடையும் வரை முஅத்தின் மூச்சைப் பிடித் திருக்கலாம். வெள்ளை, கறுப்பு நூல்களிடையிலான வித்தியாசங்கள் காணத் தேவையில்லை அவர்க்கு. தொடுவான் புறத்தெழும் முதலாம் ஒளிக்கீற்று புதிய நாளின் விடிவுப் பொழுதை அவர்க்குணர்த்தும். என் முதல் அழைப்பை விடுக்கவென நான் உயரே ஏறியபோதோ, என் கைகள், மார்பு, வயிறு, முழங்கால், பாதம் என அனைத்தையும் ஒவ்வொன்றாக இழுத்து உயர்த்த வேண்டியிருந்தது. இத்துணை சிரமங்களின் பின்னரும் நான் ஈந்த மரங்களின் உயரத்தைவிட குன்றியே இருந்தேன். மேலே சென்ற பின்னர் என் நிலை முன்னிலும் ஈனம். என் சிந்தையில் எதுவும் இல்லை. யாரை நான் நகல் செய்யலாம்?

நினைவுறுத்தவோ, மறந்து விடவோ வார்த்தைகள் எதுவும் என்னுள் இல்லை.

என்றாலும், எனக்குக் கீழேயோ, அண்ணாந்து மேல் நோக்கிய முகங்களின் கூட்டம்.

முகங்கள் குறித்தும், அவை தம் விழிகளினாலேயே எவ்வாறு ஒருவரைத் தூக்கி விடலாம் என்பது குறித்தும் முதல் முஅத்தின், பிலால் ஆகிய நான் வெகு துலக்கமாகவே கூறிடலாம் என்பதை இறைவன் அறிவான். உயரம் ஏறுதல் தலை கிறங்கச் செய்தாலும், நாம் வீழ்ந்து விடாது எம்மைக் காக்கும் கீழிருக்கும் முகங்கள்.

அந்த முதல் முறையின்போது, அழைப்பு விடுக்க வார்த்தைகள் வராதவனாய்த் திரும்பிப் பார்த்தேன். மூன்றாம் தூணருகில் நின்றனர் நபிகளார். அருகிருந்தனர் அபூபக்ரும் உமரும். மரத்தின் அரைவாசி ஏறியவரே போலும் உயரத்தவர் உமர். உயர்த்திவிடும் பாணியில் தம் கரம் தூக்கினர் நபிகளார். உற்சாகமூட்டும் அதுவே, ஆரம்பம் செய்வதற்கான ஆணையையும் பிறப்பித்தது.

இறைவனைப் புகழ்ந்து, அவன் தூதரைப் போற்றி, தொழுகைக்காக அழையும், மீண்டும் இறைவனைப் புகழ்ந்து கூறும்.

என்று நபிகளார் கூறியிருந்தார்கள். கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு இது.

திரும்பியொரு கணம் நினைத்தேன். பிறகு என் குரலின் பேராழத்துள் அமிழ்த்தினேன் என் சிந்தையை.

[1]அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர்
அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர்

அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்
அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்
அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்

ஹைய் அலஸ் ஸலா(த்)
ஹைய் அலஸ் ஸலா(த்)

ஹைய் அலல் ஃபலாஹ்
ஹைய் அலல் ஃபலாஹ்

அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர்
லாஇலாஹ இல்லல்லாஹ்

இப்போது தினமும் ஐந்து முறைகள், இஸ்லாமிய உலகம் முழுவதும் இவ்வாசகங்களை நீங்கள் கேட்கிறீர்கள். என்றாலும், முதன்முதலில்

அவற்றை மொழிந்த யான் எங்கு அவற்றைக் கண்டெடுத்தேன் என அறிகிலேன். நபிகளாரே ஒழுங்கு முறையை வகுத்துத் தந்தனர். வடிவினை அறிந்து கொண்டால் வார்த்தை அமைப்பில் பாதி வழி கடந்தது போல் தான். இருந்தும், அவற்றைச் சிந்தித்தே ஆகவேண்டும். தம் கரம் விரித்துத் தூக்கிச் சைகை செய்தபோது நபிகளார்தான் அவ்வாசகங்களை எனக்குத் தந்தனரா? யானே அவற்றை அமைத்ததாய் ஒருபோதும் நம்பேன் நான். அவ்வாசகங்கள் என்னுள் திணிக்கப்பட்டன என்றே நம்புகிறேன்.

இறைவனே பெரியவன்!

நான் இறங்கி வந்ததும் நபிகளார் என்னைத் தம் அருகில் நெருங்கி அமரச் செய்தனர். எம்மைச் சுற்றி மக்கள் குழுமினர். கிளுகிளுத்து அகன்றோடிடவெனச் சிறுவர் குழாம் ஒன்றும் வந்தது. நாங்கள் இருவரும் அமர்ந்திருந்த காட்சி, மாட்சிமைமிக்கது. இறைத்தூதரும், அடிமையின் மகனும்! நீண்ட நேரமாக அவர் எதுவும் பேசவில்லை. மர்மத்தில் அமிழ்ந்து மயங்கியவனாய் வீற்றிருந்தேன் நான். தொழுகை நடத்த அண்ணலார் செல்ல வேண்டியிருந்தது. எழுந்து என்னைக் கரத்திடை இழுத்து அணைத்துக் கூறினர் நபிகளார்: ''என் பள்ளி வாசலை நிறைவு செய்து விட்டீர்... பிலால்!''

என் அழைப்பைச் செவியுற்றுப் பள்ளி வாசலுக்கு வந்து குழுமிய அனைவருடனும் இணைந்து இறைவன் முன் சிரம் பணிந்து வணங்கினேன்.

என் வாழ்வினை நான் கண்டு கொண்டேன்; அதுவே என் அமரத்துவமும்.

---

1. இறைவனே பெரியவன்; இறைவனே பெரியவன்;
இறைவனே பெரியவன்; இறைவனே பெரியவன்;

அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை
எனச் சாட்சியம் கூறுகிறேன்
அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை
எனச் சாட்சியம் கூறுகிறேன்

முஹம்மது இறைவனின் தூதர் என்று
நான் சாட்சியம் கூறுகிறேன்
முஹம்மது இறைவனின் தூதர் என்று
நான் சாட்சியம் கூறுகிறேன்

தொழுகைக்காக விரைந்து வாருங்கள்.
தொழுகைக்காக விரைந்து வாருங்கள்.

வெற்றி பெற விரைந்து வாருங்கள்.
வெற்றி பெற விரைந்து வாருங்கள்.

இறைவனே பெரியவன்; இறைவனே பெரியவன்;
அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை

தமக்குள்ளே மோதிக் கொண்டிருந்த இரு கோத்திரத்தாரிடையில் இணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதாகத் தாம் அளித்த வாக்குறுதியை அமல் செய்வதே மதீனாவில் நபிகளாரின் முதல் நடவடிக்கையாக அமைந்தது. அவர்களிடையே ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர் நபிகளார். அராபிய மரபுகளையும் வழக்கங்களையும் பொறுத்தமட்டில் இது ஒரு புரட்சியாகவே அமைந்தது. கோத்திரங் களுக்கும் குடும்பங்களுக்குமான அடிபடிதலுக்கு மாறாக மார்க்கத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு சமூகத்துக்கான அடிபணிதலை இது அறிமுகம் செய்தது; 'ஒவ்வொரு முஸ்லிமும் தன் சக முஸ்லிமின் சகோதரர் ஆவார். முஸ்லிம்களிடையே இன, குல, கோத்திர பேதங்கள் எதுவும் இல்லை'. கோத்திரங்களது செல்வாக்கின் தளர்ச்சி, அரேபியா வைப் பொறுத்த வரையில் இயற்கையையே மாற்றியமைத்துவிட்டது போலாயிற்று.

நபிகளார் ஆணைகள் பிறப்பித்தது மட்டுமன்றி, அறிவுறுத்தல்கள் செய்தும், ஒழுக்க நெறிகள் மூலமும் மதீனாவை பரிபூரணமான ஒரு நகராக அமைக்க முனைந்தார்கள். குர்ஆன் இன்னமும் அருளப்பட்டு வந்தது. மானிடர்க்கான சட்ட நியதிகளாகக் குறிக்கப்பட்டனவெல்லாம் சமூக ஒழுக்க விதிகளாக அவ்வாறே நியமமாயின. இறைவனால் விதிக்கப்பட்ட தண்டனைகள் பிசகுதல்கள் ஏதுமின்றி நிறைவேற்றப் படலாயின. மாற்றங்கள் செய்வதோ குறைவாக அமல் செய்வதோ பெரும்பாவமாகக் கொள்ளப்பட்டது.

ஏற்கெனவே அங்கு வழங்கி வந்த மரபு வழியான சட்ட விதிகள் மிதமாக அமலாயின. வணிக நெறிகள் முதல், வீட்டு நிர்வாகம் வரை, அனைத்துத் துறைகளும் அவற்றுள் அடங்கியிருந்தன. இவற்றை யெல்லாம் நபிகளார் கற்பிக்கவே பயன்படுத்தினர்; தண்டிக்கவல்ல. சீர்திருத்தம் செய்யவே பயன்படுத்தினர்; பழி கொள்வதற்கல்ல.

குர்ஆனின் ஆன்மீக போதனைகளில் பெரும்பாலானவற்றைச் சமூக யதார்த்தங்களாக நபிகளார் செயலுருப்படுத்திக் காட்டியமை, சட்ட வாக்கம் செய்யும் துறையிலான அவரது திறமைகளைத் தெளிவாகக் காட்டித்தந்தது. அவர் காட்டித் தந்த மானிட இரக்க சிந்தனைகள் எல்லாம், அக்காலகட்டத்தில் திகைப்பை விளைவிப்பனவாக அமைந்தன.

அவரின் சமூகக் கோட்பாட்டுச் சிந்தனைகளில் ஏராளமானவை, மேற்கத்திய நாகரிகத்துறையில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு வரை நிறுவனரீதியாக அமைக்கப்படவில்லை.

ஆண்கள், பெண்கள், படைப்பினங்கள் எதற்கும் அநீதியிழைக்கப் படுதலை அண்ணலார் மிகவும் அஞ்சினர்.

## நீதி தருநராய் நபிகளார்

மதீனத்தில் நபிகளார், இறைதூதர்கள் அனைவருள்ளும் இறையருள் நிரம்பப் பெற்றவராக விளங்கினார்கள். ஏனெனில், தம் உபதேசங்களை அவரால் செயலுருப்படுத்த முடிந்தது. அதே வேளை, இந்நிலைமை ஊறு விளைக்கக் கூடியதாகவும் இருந்தது. ஏனெனில், நபிகளாரின் உபதேசங்களைச் செவிமடுத்தோர் அவர் அதன்படி நடக்கின்றாரா எனக் காண அவரின் நடமாட்டம் அனைத்தையும் கவனிக்க முடிந்தது. நபிகளாரை மதீனாவின் தெருக்களில் எந்த நேரங்களிலும் நேருக்கு நேர் காணலாம்; சோபனங்கள் கூறலாம்.

நபிகளார் முழு மனிதராக, பகலில் ஒளியில் வாழ்ந்தனர். நான் இதனை நன்கறிவேன். ஏனெனில், நான் முன்னர் கூறியது போல ஒவ்வொரு நாள் விடியலிலும் என் முதல் அழைப்பை விடுக்கச் செல்கையில் அவரை எழுப்புவதற்காக அவர் கதவில் தட்டி நிற்பேன். விழிகளைக் கசக்கி, நித்திரை கலைத்து, காலைக் கருக்கலில் காலணி தேடிக் கால்களால் துழாவியவாறு எழுந்து வருவர் அண்ணலார். அவர்தம் பாதணிகள் கிட்டுவது நிச்சயமாக தெய்வீக உணர்வினாலல்ல. வெறும் பாதம் மூலமே அதனைத் தேடிப் பெறுவர் அவர். தாம் எழும்முன் ஏனைய அனைவரும் எழுந்திருக்க வேண்டும் எனக் கொண்டு எழும் பிரபு போலும் காலையில் எழுந்தாருமல்லர் நபிகளார். அன்பே அவரின் சாதனம். எதனையும் நன்கு செவிமடுத்து அறிவுரை செய்தனரே யன்றி நியதிகள் விதித்து ஆண்டனர் அல்லர். நாணம் மிக்கிருந்த காரணத்தால் அவர் யாரையும் முந்திப் பேசி உரை செய்தல் அரிது. மாண்பும், அழகும், மதிப்பும், கிருபையும், பணிவும் நிறைந்திருக்கும் அவர்தம் பேச்சில், உரையாடல்கள் நிகழும் வேளையிலும் அவையில் பின்னாலேயே அமர்ந்திருந்து ஆங்கோர் இளைஞன் அதிகப்பற்றுடன் முன்புறம் வளைந்து முழுக் கவனத்துடன் கற்பதுபோல கவனமாய் அனைத்தையும் செவி மடுப்பர். ஒவ்வாக் கருத்துக்கள் எழுப்பியவர் மனம் புண்படப் பேசார். அவர் தம் பதில்கள் பெரிதும் சிறியன. அதற்குக் காரணம் அன்னாரது சிந்தையின் விரைவு. மனிதர்தம் இதயமே நபிகளாரின் சாஸ்திரநூல். நூற்களஞ்சியங்களாய் அமைந்த சிரசுகளை விட சீராயமைந்த இதயங்களையே அவர் விரும்பினார்.

சுவனத்து வாசகங்களை அவர் இடையறாது பெற்று வந்தாலும் தம் கருத்துக்கள் எதனையும் பலவந்தமாய்த் திணித்தவர் அல்லர். இறுதியாய் உரை நிகழ்த்தியவர் தம் கருத்துக்களின் மேலோ கீழோ தம்

அபிப்பிராயங்கள் வைக்க மாட்டார்கள் நபிகளார். ஆயினும், நாங்கள் நன்கறிந்திருந்தோம்: அவர் கூறியவை அனைத்தும் தூயவை; நேர்மை யானவை. எனவே, அவையனைத்தையும் நாங்கள் சட்ட விதிகளாகவே கொள்ளலானோம்.

அபரிமித புகழ் நபிகளாரை அசௌகரியத்திலும் மௌனத்திலும் தள்ளியது. அவரை மிக நெருங்கியிருந்த நாங்கள், எமது பக்தி கலந்த வியப்புணர்வை வினாக்களிலும், இறுகிய பந்தத்திலும், இன்சுவை விகடத்திலும் மறைக்கக் கற்றுக் கொண்டோம். அடுத்தவர் முகஸ்துதி யினால் அவர் அடிக்கடி வேதனைப்படுவதைக் கண்டுள்ளேன் நான். உளமார்ந்த மகிழ்வுடன் அவரைப் புகழ்ந்தேத்தும் நல்லுள்ளம் படைத்தார் முன் நாணியவராக ''...நான் ஒரு சாதாரண மனிதனே... வெறும் மனிதனே...'' எனத் தமக்குள்ளே கூறிக்கொள்வர். ''இறைவன் எனக்கென வைத்துள்ளது எதுவென நான் அறியேன்...'' என அடிக்கடி கூறுவர்.

எம்மனைவரிலும் சிறந்த உயர்ந்தனராக இருந்தும், லௌகீக உடமை களில் எம்மனைவரிலும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தனர் நபிகளார். வெறி கொண்ட கொள்கையினரோ, பட்டினியை வருத்திச் சேர்த்துத் துயருறும் வகையினரோ அல்லர் அவர். எண்ணிலா இரவுகள் அவர் கடும் பசியுடனேயே படுக்கைக்குச் சென்றனர் என்றால், அதற்குக் காரணம் பிறர் நலன். தம்மிலும் கூடிய பசியைக் கொண்டார் ஒருவருக்குத் தமது உணவைக்கொடுத்து மகிழ்ந்திருப்பர் அவர்.

எமது சட்ட நியதிகளாக அமைந்துவிட்டனவெல்லாம் அவர் வாழ்ந்து காட்டியவையே. நபிகளார் நன்மையெனக் கூறியனவும் செய்தனவுமே எமது சித்தாந்தங்களாய் அமைந்தன. ஏந்தலார் மொழிந்த வார்த்தைகள் அனைத்தையும் நாம் எம் மனதிலிருத்தினோம். தவறவிட்டிருப்பின் அவை வெகு சிலவே. அவர் இதழ்கள் உதிர்த்தவை அனைத்தையும் பொறுக்கிச் சேர்த்தோம். ஏற்கெனவே, இராப்பகலாய் அவர்தம் வாக்கு களை மீட்டு வருகின்றனர் மக்கள். ஆனாலும், நாங்கள் அஞ்சுவ தெல்லாம் பின்னல் அலங்காரங்களும் இடைச் செருகல்களுமே. நானே செவியுற்றவை தவிர்த்து அவரின் கூற்றென வேறு வார்த்தைகள் செவியுறின் அவற்றை மதிப்பிட நான் ஓர் உரைகல் கொண்டுள்ளேன். அவை எத்துணைதான் எடுப்பும், ஆழமும், ஏற்றமும், திகைப்பும் ஏற்படுத்துவனவாயினும் எளிமை மட்டுமே அவர் உரைக்குத் தனிச் சான்று. இஸ்லாத்தின் சாதாரண அறிவை விஞ்சிய எதனையும் கூறிய தில்லை அவர்.

## வரலாற்று ஏடு – 2

தம் நம்பிக்கையில் எவ்வளவுதான் சிறந்திருந்தாலும் முஸ்லிம்கள் வறுமைப்பட்டவர்களாகவே மதீனாவைச் சேர்ந்தனர். சிறிது காலம் செல்ல அவர்கள் மதீனாவில் ஒரு பொருளாதாரப் பளுவாக அமையலாயினர். மக்காவிலிருந்த அவர்களது உடமைகளெல்லாம் நிராகரிப்பவர்களின் வசமாகி ஸிரியா நோக்கிய அவர்களது வர்த்தகக் குழுக்களைச் செழுமைப்படுத்தப் பயன்படலாயின. அவ்வாறான ஒரு வர்த்தகக் குழு மதீனாவிலிருந்து மேற்கே சுமார் எழுபது மைல் தொலையில் சென்று கொண்டிருந்தது. பெரும் தயக்கத்தின் பின்னர் அவ்வர்த்தகக் குழுவைக் கைப்பற்றுவதென நபிகளார் தீர்மானம் செய்தனர். தற்காப்புப் போர் தொடுப்பதற்கு நபிகளார் குர்ஆன் வாசகங்கள் மூலம் அனுமதி பெற்றிருந்தனர்.

கி. பி. 624 ஜனவரி, ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, நபிகளார் முன்னூறு பேர் கொண்ட சிறியதொரு படையுடன் முன் சென்றனர். என்றாலும், இப்படையெடுப்புப் பற்றிய செய்தி எவ்வாறோ முன்னமேயே மக்காவை எட்ட, வர்த்தகக் குழு தப்பிச் சென்றது. அதற்குப் பிரதியாக, பத்ர் கிணறுகளின் அருகில், முழு ஆயுதபாணியினரான ஆயிரம் பேர் கொண்ட பாரியதொரு மக்கத்துப் படையை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

பெரும் பலவீன நிலையில் இருந்தாலும்கூட முஸ்லிம்களே பத்ரில் வெற்றியீட்டினர். பாலையின் நடுவில், எவ்வித பிரபலமும் இல்லாத விதத்தில் நிகழ்ந்த இச்சிறு மோதலானது உலகில் நடந்த போர்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துவிட்டது. முஸ்லிம்கள் அன்றைய தினம் தோல்வி கண்டிருந்தால் அப்போதைய சின்னஞ்சிறு முஸ்லிம் சமூகம் முற்றாகவே அழித்தொழிக்கப் பட்டிருக்கும்.

# போர் முனைகளில்...

சண்டை செய்வதில் நான் வல்லவன் அல்ல. எத்துனைதான் முயன்றாலும் வாள் இயக்கும் தந்திரம் எனக்குக் கைவராத கலை. எதிரியாய் அமைந்த ஒரு மனிதனை அளந்து காணவோ, என் முழு வலிமையையும் திரட்டித் தாக்கவோ, மூர்க்கமாய்த் தள்ளி நிலத்தில் வீழ்த்தவோ என்னால் இயலவே இல்லை. எனக்கு போர்க் கலை கற்பிக்க ஹம்ஸாவும் அலீயும் முழு மூச்சாய் முயன்றனர். பத்ரை நோக்கி நாங்கள் சென்ற நாளின் முந்தைய தினம், பள்ளிவாசலின் பின்புறம் என்னை அழைத்துச் சென்று காலை வேளை முழுவதும், பற்பல விதமாய்த் தள்ளுதல், வெட்டுதல், தாக்குதல், பாதவடிகளை வைத்தல் எனப் பலவகை பயிற்சியளித்தார் அலீ. வேகமாய் இயங்கின என் கால்கள். நாணல் போலும் வளைந்து கொடுக்கும் என் உடலின் பக்குவத்தை ஹம்ஸாவே புகழ்ந்துரைத்தார். என் அவயவங்களின் இயக்கத்தைப் போற்றியு ரைத்தார் அலீ. என்றாலும், என் பாதங்களுக்கு இணையாகச் செயல்பட முடியவில்லை என் கரங்கள். எனினும், அதனைப் பொருட்படுத்த வேண்டிய தேவையிருக்கவில்லை. ஏனெனில், எம்மை முன் தள்ளும் உந்து சக்தியாயிருந்தது எமது விசுவாசமே. களங்களில் எம்மை எதிர்த்து நின்ற பகைவர் பனிபோல் உருகி மறைந்தனர். எமது ஆரம்ப போர்கள் பலவற்றை எம் விழிகளாலேயே வெற்றி கொண்டோம் என்றே நான் கருதுவதுண்டு.

பத்ரில் பிரசன்னமாயிருந்தார் பிலால் என்று நீங்கள் கூறுவீர்கள். பத்ரின் முன்னர் நான் இறந்திருப்பினும்கூட நான் அங்கு பிரசன்னமாகியே இருப்பேன். ஆம்! போர் முழக்கமாக நபிகளார் தேர்ந்திருந்தது எனது இம்சைகளின் போது நான் எழுப்பிய ஒலியே - "ஏகன்! ஏகன்!!"

குருதியில் காண்பதற்கு என் திறமைகள் உரியவையல்ல எனக் கண்டுகொண்ட நபிகளார், வேறு பணிகளும், பொறுப்புகளும் தந்தனர் எனக்கு. படையினர்க்கான உணவு விநியோகம் என் பொறுப்பு. போர் வரலாறுகளின் ஏடுகளைப் புரட்டுகையில் வெறும் முன்னூறாயிருந்த எமது தொகை உங்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரியாது. எனக்கிருந்த பொறுப்பும் மிகவும் இலகுவானதாகவே தெரியும். என்றாலும், அன்றைய நாட்களில் நாங்கள் அனுபவித்து வந்த கொடிய வறுமையின் காரணமாகப் போர்க்களம் நோக்கிச் செல்லும் இம்முன்னூறு பேருக்கு உணவளிக்கவும் இறையோனின் கிருபா கடாட்சத்தையே வேண்டி பிரார்த்தித்தோம். எனினும், அற்புதங்கள் ஏதும் விளைவிக்காமலேயே என் பொறுப்பை ஏற்று நடத்தினேன். இரந்தும், இரவலாயும், மறுத்தால்

முறைத்தும், வலிந்தும் மதீனத் தெருக்களில் அலைந்தலைந்து உணவுகள் சேகரித்தேன். எங்கேனும் தானியத்தொரு துகள் காணின் கோழியினும் வேகமாய் அதனை அடைந்து கொள்வேன் நான். எறும்புச் சாரையின் பின் சென்று, அவை சிறுகச் சிறுக சேர்த்தவை அனைத்தையும் நான் எடுத்து வந்தேன் என்று கூறுவதெல்லாம் மிகை; அபத்தம். எறும்புகளை போல நான் செயல்பட்டது மட்டும் உண்மை. இல்லா நிலையை அடுத்தி ருக்கும்போது உணவின் கருகிய உதிரிகளைச் சுமப்பதும் நயம் தானே!

இறுதியில் முடிவே ஆதாரமாக அமைந்தது. பட்டினியால் பத்ருக் களத்தில் முஸ்லிம்கள் எவரும் வீழ்ந்துவிடவில்லை. எமது முயற்சி களும் சிரமங்களும்தான் அன்றையதினம் அவர்களது வயிறுகளை நிரப்பி வைத்தன என்றால், அது தவறு. நிச்சயமாக, சுவனம்தான் அன்றைய தினம் அவர்களின் பசி போக்கியது.

ஏனென்றால், நாங்கள் புறப்படும் முன்னமேயே இறைவன் மிகத் தெளிவான முறையில் எமக்கு அருள் கூர்ந்திருந்தான். எமது விருப்பப்படி செயல்படவில்லை நாங்கள். அனுமதியோடு தான் நாங்கள் போரா டினோம். தற்பாதுகாப்புக்காக, வரையறைகள் விதித்தே, நாங்கள் போர்முனை சென்றோம்.

> (நிராகரிப்போரால்) அநியாயத்திற்கு உள்ளானவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) போர் புரிய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. நிச்சயமாக இறைவன் இவர்களுக்கு உதவிசெய்யப் பேராற்றலுடையோனாக இருக்கின்றான். இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். எங்களுடைய இறைவன் ஒருவன்தான் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்!... (22:39,40)

> இறைவனுடைய பாதையில் (நீங்கள் செல்வதைத் தடுத்து) உங்களை எதிர்த்தோருடன் நீங்களும் போர் புரியுங்கள். ஆனால், நீங்கள் வரம்பு கடந்துவிட வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக வரம்பு மீறியவர் களை இறைவன் நேசிப்பதில்லை. (2:190)

போர் வீரராக நபிகளார் முன்வந்த வேளை களங்களனைத்திலும் சிறந்ததொரு தளபதியாகவே தோன்றினர். அணிவகுப்பு முறைகளை யும், கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் அவரே வகுத்துத் தந்தனர். ஒழுங்குகளின்றி, தனித்தனி சிற்சிறு மோதல்களாய் நீர்ச்சுழி போல தானே தோன்றித் தன்னுள் மறைவதாகவே இருந்து வந்த பாலைவன போருக்கு நாங்கள் புதியதொரு காட்சியை, புதியதொரு பரிமாணத்தைக் கொண்டு வந்தோம்.

எம்மை இறுக்கி, நெருக்கமாக அமைத்தனர் நபிகளார். ஒவ்வொரு மனிதரையும் கோட்டையொன்றின் ஓர் அங்கமாக்கி வைத்தனர். அதனால், நாங்கள் ஒருவரில் ஒருவர் பெருகி நின்றோம். நால்வர்

ஐவரானோம். வாளும் கேடயமும் அம்பும் ஈட்டிகளும் ஒன்றிணைந்து போர் மரபுகளைச் செவ்வனே ஆற்றின. சிறப்புமிக்கதொரு தளபதியாகத் துலங்கினர் அண்ணலார். எமது களங்கள் அனைத்திலும் அவர்தம் கலையையே பிரயோகித்து வெற்றிகள் பல கண்டோம். மாற்றம் செய்த வேளையிலெல்லாம் தோற்றோம்.

தொழுது பிரார்த்திப்பதற்காக நபிகளார் முன்னமேயே தம் கூடாரத் தினுள் சென்றனர். வெளியில் நடக்கும் போரினைக் காணும் வேட்கை அவருக்கில்லை. எனினும், உள்ளே செல்லுமுன்னர் எமக்கொரு வாக்குறுதியளித்தனர்: ''இன்றைய தினம் வாள்களின் நிழலில் சுவனம் இருக்கிறது... இன்று வீர மரணம் எய்துவார் வானவர்களால் சுவனத் துக்குத் தூக்கிச் செல்லப்படுவர்...''. நிபந்தனைகள் சிலவும் இருந்தன. மரணத்தை விளைக்கும் காயங்கள் முகப்புறத்திருக்க வேண்டும்; முதுகுப்புறம் அல்ல - போரில் ஏற்படும் திடீர்த் திருப்பங்களின் போது, வீரத்துடனும் போர் உபாயமாகத் திரும்புகையிலும் முதுகேற்ற காயங்கள் தவிர. அவ்வேளைகளில் அவையும் வீர விழுப்புண்களாயமையும்.

இவற்றையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், எத்துணை நுண்மையுடன், நபிகளார் எம்மை வழி நடத்தினார்கள், எத்தகு தலைமைத்துவம் எமக்குத் தந்தார்கள் என்பதைக் காட்டுவதற்கே. கொள்கை நெறி நிலைநிறுத்தவே போராடினோம் நாங்கள்; உலக இச்சைகளைத் தணித்துக் கொள்ளவல்ல. போர்க் களங்களில் உலக இச்சைகளைத் தவிர்ந்திருப்பதென்பது இலகுவான ஒரு காரியமல்ல. ஏனெனில், பொருதும் வீரனின் குருதியானது நிலத்தில் வழிவதற்கு வெகு முன்னமேயே சிரசு நோக்கித்தான் பாயத் தொடங்குகின்றது. மூர்க்கமாய் முன் பாய்பவன், பின்னர் பின்னிச் சரிவான், குருதியின் தரிப்பிடம் பொறுத்ததே விளைவு.

விதிகளும் நியதிகளும் விதித்து போர்களைக் குறைத்திடவே அவாவினர் நபிகளார். போரின் கொடுமைகளை மனிதாபிமான ஒப்பந்தங்கள் மூலம் பிரதியீடு செய்ய முயன்றார் அவர். என்றாலும், நபிகளாரால் போர்களை தவிர்க்க முடியவில்லை. ஏனெனில், அவை அவர் மீது திணிக்கப்பட்டன.

மீண்டும் என்னைத் தேர்ந்தனர் நபிகளார். அண்ணலாரின் அறிவிப்பாள ராக மாறினேன். ஜனவரி மாதத்து மாலை அது. பாரசீகப் பரப்பிலிருந்து வீசிய குளிர்காற்று நடுக்கிக் கொண்டிருந்தது. நாங்கள் ஒன்றாய் இருந்த கால முழுவதும் அன்றுபோல் அண்ணலார் அக நினைவு உட்குழிந்து அத்துணை அமைதியாய் முழு மௌனமுடன் இருந்து கண்டதில்லை. அவர் கூறுவன கேட்க சிரம்மிகத் தாழ்த்திக் குனியவேண்டியிருந்தது. மீண்டும் அவர்தம் சொற்கள் அமைதியுள் மறைந்து சென்றன.

மறு நாள் காலையில் குரல் எழுப்பி நின்றேன் நான். மதீனத்து மரங்களுக்கென் முதுகு காட்டி, படையணி செல்லும் பாலைக்கு என் முகங்காட்டி நின்றேன். வானப் பரப்பில் மெல்லியதொரு முகில் கீற்று. அக்கீற்றினுள் ஏதும் படைப்பினம் இருந்திருப்பின் அதுவும் என் குரல் கேட்டிருக்கும். ஏனெனில், நான் கூறியவற்றால் நானே பெருமை மிகக் கொண்டிருந்தேன்.

போர்முறை நியதிகள் இதோ!
பெண்டிர், சிறார், பயிர் செய்வோர்,
வயது முதிர்ந்தார்,
ஊனமுடையார் யார்க்கும் ஊறிழைத்தல் தகாது.
கனி மரங்கள் தறித்தல் தடை.
அனுமதியின்றி நீரோ, கொடுப்பனவின்றி
உணவோ பெறல் கூடாது.
கைதிகள் எவரையும் பிணைத்தல் தகாது.
கைதிகள் நடக்க, நீர் சவாரி செய்தல் தடை.
சரண் புகும் எதிரியை ஆதரித்தல் கடமை.
சிறாரைத் துயருறுத்தல் கெடுதி.

சிறார் குறித்த எச்சரிக்கையை மீளவும் பகரப் பணித்தனர் அண்ணலார்.

மதீனம் விட்டு நீங்கினோம் நாம். எழுபது ஒட்டகைகள், இரண்டே குதிரைகள் சகிதம் முன்னூற்றுப் பதினான்கு பேர். எம்மை எதிர்த்து மக்காவிலிருந்து புறப்பட்டு வந்தோர் தொகை ஆயிரம். துணையாக எழுநூற்றைம்பது ஒட்டகைகள்; ஒரு நூறு குதிரைகள். உடற் கவசமாய் நாங்கள் மரபட்டைகளைச் சுற்றியிருக்க, இரும்புக் கவசங்கள் அணிந் திருந்தனர் எம் பகைவர். குதிரைகளில் அமர்ந்து அவர்கள் எம்மைச் சூழ்ந்து நின்றமை எம்மைச் சுற்றி ஓர் அரண் அமைக்கப்பட்டு விட்டது போலவே தோன்றியது. இருந்தும் எமக்கே வெற்றி!

போர்க் கைதியொருவனை பச்சை இரத்தம் உறைந்த நிலையில் கொன்றேன் என என் மீது சாட்டப்பட்டுள்ள குற்றத்திலிருந்து என்னை நான் தற்காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மெய்யாகவே, என் இரத்தம் உறைந்துதான் இருந்தது. அந்த மனிதனைக் காணும் தோறும் என் இரத்தம் உறைந்து போகவே செய்யும். எரிக்கும் கோடை கூட எனக்கு நடுக்கும் குளிர் காலமாகி விடும். ஏன் நடக்காது? மரணத்துள் தள்ளப்படும் வரை என்னைக் கசை கொண்டு வதை செய்த என் முன்னாள் எஜமான் அவன் - உமையா!

மாலைப்பொழுதை அண்மிய கருக்கல் அது. வெற்றியின் பின் களை களையும் நேரம். போர்க் கைதிகள் எம் பாசறைக்குள் கொண்டு வரப் படலாயினர். உமையாவும் அவர்களுள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு

முன் உமையாவுக்கும் பிலாலுக்கும் இடையில் போலவே, இப்போது பிலாலுக்கும் உமையாவுக்கும் இடையில் எவ்வித தயையும் இல்லை; கருணையும் இல்லை. பளீரென ஒரு கணம் அனைத்தும் இருண்டு போய்விட்ட ஓர் உணர்வு என்னுள். விழி குருடாக்கும் கதிரவன் கண்களுள் பட்டுத் தெறித்ததொரு நினைவு. என் குருதி உறைந்திருந்தது; சினமோ கொதித்துக் கொண்டிருந்தது.

அவன் குதிரை மீது; நான் தரையில். நிறை கவசத்துள் அவன்; வெறுமையாய் நின்றேன் நான். ஆனாலும், நான் அவனைத் திகைப் புறுத்தலாம். அவனைச் சூழ்ந்திருந்தோரின் இடையில் புகுந்து, அவன் முன் நான் நின்றதை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மெய்யாகவே, அவன் சரண் அடைவதற்காகத்தான் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தான். இறுமாப்புக் களைந்து தன் தலையைத் தாழ்த்தியிருந்தால் அவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்திருக்கக் கூடும். தனது வாளை நிலத்தில் விட்டிடலே அவன் செய்ய வேண்டியிருந்தது. என் தோழர்கள் என்னைப் பிடித்து நிறுத்தித் தடுத்திருப்பர். என்றாலும், அச்சிறு காரியம் செய்ய அவனால் இயலவில்லை. முன்னாள் அடிமையின் முன்னால் சரணடைதல் இயலாதக் கருமமாய் இருந்திருக்கலாம். அவ்வாறாயின், தன் மரணத்துக்குத் தானே காரணமாயிருந்துள்ளான் அவன். மட்டுமல்ல, மூடனே போலும், தனது பெருமைக்குப் பகரமாகத் தன் குருதியையே சிந்தியுள்ளான்.

உமையா தன் குதிரையை என் மீது திருப்பினான். மீண்டும் 'அடிமை' என்றே என்னை விளித்தான் அவன். சிரித்து அதனைப் புறக்கணித் திருக்கலாம். என்றாலும், அவ்வாறு செய்யவில்லை நான். அவனை அலட்சியம் செய்ய இயலவில்லை என்னால்.

நான் முன்னர் கூறியதுபோல மனிதரை அளந்து காணுதல் எனக்கியலாக் கருமம். என்றாலும், இவ்வேளை நான் அதனைத் திறம்படச் செய்தேன். என் கால்களும், தொடைகளும், கைகளும், கண்களும் அவனை நிந்தனை செய்வதில் ஒன்றிணைந்தன. என்னைத் தாக்குவதற்கெனக் கரம் உயர்த்திய வேளை, தன் கவசங்களின் மத்தியில் சிறியதொரு இடை வெளியைக் காட்டினான் உமையா. வயிற்றின் குறுக்காய் ஓர் அங்குல அகலம்கூட இல்லா இடைவெளி. இரண்டாம் நாள் பிறையை மிகாத அளவு. அதுவே போதுமாயிருந்தது எனக்கு. அந்த இடைக்குள் இட்டேன் தனியொரு செருகல். அவனது வாளின் வீச்சொலி என் சிரத்தை அண்மிச் சென்றது... எங்கோ தொலைவில் ஒரு பறவையின் சிறகொலி போல்...

அவனது பெருத்த உடல் என்மீது வீழ்வதைத் தவிர்த்திடப் பின்னால் நகர்ந்தேன். அவனைக் கவனித்துக் கொள்தல் இன்னமும் என் பொறுப்பே என்பது போல் அவனைத் தூக்கவும் முனைந்தேன் ஒரு

கணம் என நான் சத்தியமாய்க் கூறுவேன். அங்கிருந்தோர் அவனைப் புரட்ட, மீண்டும் அவன் முகம் கண்ட போதுதான் நான் செய்தது அறிந்து கொண்டேன்.

பெரிய துக்கம் என்னுள் படர்ந்தது. எஜமானின் அடிக்குப் பதிலடி கொடுக்கவோ, திருப்பித் தாக்கவோ முடியாத அச்ச உணர்வே அடிமை யாகப் பிறந்த ஒருவனுக்குத் தாய்ப் பாலுடன் புகட்டப்படுவது. அடிமை ஆகிவிட்டால் அவனது முதல் உணவுத் தட்டுடன் அடிமைக் கூட்டினுள் வீசப்படுவதும் அதுவே. ஏனெனில், கிட்டக் கூடிய தண்டனை கிஞ்சிற்றேனும் இரக்கம் இல்லா மூர்க்கம் கொண்டது. இப்போதோ, நான் அந்த எஜமான் மீதே நின்றிருந்தேன். அவன் குருதியில் நனைந்த வாள் என் கரத்தில். உள்ளுணர்வுகள் என் உடலை எரித்துக் கொண்டிருந்தன.

அந்தக் கொடிய ஒரு கணத்தினை நினைத்தவனாக, இருளுக்குள் வினாக்கள் விடுத்தவனாய் எத்தனை இரவுகள் நான் உறக்கமின்றி உழன்றிருக்கிறேன். முன்னாள் அடிமை பிலால், இறைவனே மறு தலித்தும், பழிவாங்கும் பாதகமொன்று இழைத்துவிட்டேனா? உன்னத நோக்கம் ஏதும் என்னுள் இருந்ததா? அந்த கணம் அவன் போர்க் கைதியாய் இருந்தானா? அல்லது பொருதும் உளமுடையவனாய்ப் பொங்கிக் கொண்டிருந்தானா? தன்னைத் தான் காத்துக்கொள்ள அவன் என்னைத் தாக்க முனைந்தானா? அல்லது விரும்பி அவனை நானே கொன்றொழித்தேனா? அல்லது அவன் சினம் காரணமாய் நிரபராதியோ நான்? அன்று என் வாளை உயரச் செய்தது தான் என்ன? அவன் எதிர் காலமா? என்னுடையதா?

என்னையும் உமையாவின் பிணத்தையும் சூழ்ந்திருந்த என் தோழர்கள் அனைவருமே வாழ்த்தினர் என்னை. என்றாலும், உமையாவுக்கும் எனக்கும் இடையிலான முடிவுக்குச் சாட்சிகள் யாரும் இல்லையென் பதை நான் நன்கறிவேன். எம் உறவின் இறுதியில் நாங்கள் இருவர் மட்டுமே தனித்திருந்தோம்.

## வரலாற்று ஏடு – 3

கி.பி. 625 ஜனவரி, புலம்பெயர்ந்த மூன்றாம் ஆண்டு, புதியதொரு மக்கத்துப்படை அபூஸுஃப்யானின் தலைமையில் மதீனா நோக்கி வந்தது. மீண்டும் முஸ்லிம்களின் தொகையைப் பெரிதும் விஞ்சிய தாயிருந்தது அது. வீரர்களில் முஸ்லிம்களின் ஒருவருக்கு மக்கத்தார் மூவர். குதிரைப்படையிலோ ஒன்றுக்கு ஐம்பது.

நபிகளார் இப்போதும் போரையே தேர்ந்து கொண்டனர். தமது தூதின் வலிமைமீதும், வானவர்களது உதவியிலும் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர் அண்ணலார். நகருக்கு மூன்று மைல்கள் வடக்கே உஹத் எனும் குன்றின் அடிவாரத்தில் படைகள் மோதிக்கொண்டன.

பத்ர் போலவே உஹதிலும் இறுதிக் கட்டம் வரை முஸ்லிம்களுக்குச் சாதகமாகவே போர் சென்று கொண்டிருந்தது. எதிரிகள் குழப்பங்களுக்கு உள்ளாகியிருந்தனர். வெகு விரைவாகவே கிட்டியது வெற்றி. எனினும், முழுமையாகவல்ல. உள்ளம் பூரித்தவர்களாக முஸ்லிம் படையினர் போர்ப் பொருட் சேகரிப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த வேளை, ஒரு குன்றின் பின்னால் ஒளிந்திருந்த பலமிக்க குதிரைப்படையினர் திடீரென பின்புறத்திலிருந்து தாக்கலாயினர். முஸ்லிம்கள் சிதறியோட வேண்டியதாயிற்று. நபிகளாரும் மிக அரிதாகவே உயிர் பிழைத்தனர். விசுவாசிகள் கூட அவர் மரணித்துவிட்டதாகவே கருதியிருந்தனர். வீரத்திறம் வாய்ந்த ஹம்ஸா கொல்லப்பட்டார்.

வெற்றிக்காகவன்றி கௌரவத்துக்காகவே போராடி வந்த மக்கத்தார், தமக்குக் கிட்டிய வாய்ப்பினைத் தொடர்ந்துகொண்டு செல்லத் தவறி விட்டனர். எதிர்ப்புக்களேதும் இன்றி மதீனாவை அவர்கள் கைப்பற்றிக் கொள்ளக்கூடிய சூழல் இருந்தது. இருந்தும் வெற்றிக் கீதங்கள் முழக்கியவர்களாக அவர்கள் திரும்பிச் செல்லலாயினர்.

# உஹத்

மேலது கீழாய் கீழது மேலாய் முன்னும் பின்னும் முரண்பாடடைவதே செருகளம் என நாங்கள் உஹதில் உணர்ந்தோம். பொருகளம் இறுதியில் காட்டித் தருவது அறம் செய்தாரையல்ல; மரணியாது நின்றாரையே! வாள் ஓர் அறிவிலி. மதத்தின் ஏடுகளில் ஒரு பக்கம்கூட எழுதியதல்ல அது. போரின் முன்னும் பின்னும் நடந்தவை தான் அதன் மாண்பினைக் காட்டுவது. ஆம்! போர் அழைப்பின் முன்னும், செந்நீர் சிந்திச் செருகளம் நீங்கிய பின்னும்.

உஹதின் இறுதியில் கால் பரப்பி, மார்தட்டி நின்றோர் அவர்களே. திடுக்குற்று, திகைப்புற்று, அடக்கப்பட்டு எம் உயிர்காத்துக் கொள்வதற் காய்ப் பரபரத்து ஓடினோம். அவர்கள் வெற்றி கண்டனர். ஆனால், வெற்றிக் களிப்பில் அவர்கள் செய்ததுதான் என்ன? அவர்களுக்கு மட்டுமே உரித்தான கற்களும் முட்களும் நிரம்பிய அவ்வெளியில் நரகத்துக்கான பயிரை நட்டனர் மக்கத்தார். மரித்தோரை உரித்தனர்; முடம் செய்தனர்; காதுகள், மூக்குகள், வேறு அங்கங்கள் எதையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களது வெற்றிக் குன்றினுள் குடைந்து சென்று அரிக்கும் முதற்புழுக்களாய் அவர்களே விளங்கினர்.

மரித்த உடல்களை ஏன் அவர்கள் சிதைக்க வேண்டும்? உயிரிலா உடல்களுக்கு ஏன் இந்த அகௌரவம்? காரணம் கண்டு கொள்ள என்னால் இயலவில்லை. இறந்து விட்டோரை எதிர்காலத்துக்கான வெருளியாய்க் கொள்ள அவர்கள் முனைந்திருக்கலாம். போரின் முடிவுக்கு நடுவராயமைவோர் மாண்டுவிட்டோரே என என்னைப் போலவே அவர்களும் அஞ்சியிருக்கலாம். உண்மையாயின், வலியாரை வலியிலார் வீழ்த்துவதாகும் அது. அல்லது போர்க் களத்தில் இறுதி யாய் எஞ்சியிருப்பது இறப்பின் இளிப்பே என என்னைப்போலவே அவர்களும் அஞ்சுவதாயிருக்கலாம். ஏதென்றறியேன்!

முரண்பட்டுறுவதே செருகளம் என்றேன். ஆம்! உஹதின் பரந்த நிலத்தில் நாங்கள் ஓடினாலும் அதன் வான விதானத்தைத் தாங்கி யிருந்தோம் நாங்கள். நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களுமான இரு நகரத்தார்க் கிடையிலானதல்ல உஹத். இறைவனுக்கும் எமக்கும் இடையிலான களம் அது. மிகவும் தெளிவாக, மூன்றாம் அத்தியாயம் நூற்றறுபத் தாறாம் வசனம் மூலம் எமக்குரியதொரு பரீட்சைக் களமாகவே உஹதின் தோல்வி அமைந்ததென இறைவன் தன் தூதருக்குத் தெளிவுறுத்தினான்.

இரு படைகளும் சந்தித்த அன்று, உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம், இறைவனின் கட்டளைப்படியேதான் (ஏற்பட்டது). உண்மை விசுவாசிகளைப் பிரித்து அறி(வித்துவிடு)வதற்காகவே (இவ்வாறு செய்தான்).

*பத்ரில் எம் உணர்வுகளைக் கிளறிவிட்ட அவன், உஹத் களத்தில் சாந்தம் புகட்டினான். நபிகளாரின் அழைப்பையும் செவிமடுக்காதோராய் படையணி துறந்து பதறி ஓடினோம் நாங்கள். இறைத்தூதரது ஆணைக்கு அடிபணியாத அந்நிலையிலும் வானவர் வந்து எமக்கு உதவி வழங்குவர் என்றுதான் எண்ணினோம். ஆனாலும், இளஞ்சிறார் சிலபோது கசப்பான கடும் பாடங்கள் புகட்டப்படுதல் போலவே நமக்கும்...*

*அவற்றைக் கற்றுக்கொள்ள நாங்கள் கொடுத்த விலையோ மிகப் பெரிது.*

*உஹதின் தினத்தில் ஹம்ஸா வீழ்ந்தார். ஹிந்தா வாக்களித்த வெகுமதி என்னைப் போலவே ஓர் அபிஸீனியனும் ஈட்டியெறிதலில் வல்லவனு மான அவனை நிச்சயம் கவர்ந்திருக்கும். அவனது ஒரே ஒரு குறி தவறா எறிதலுக்குப் பரிசு, அடிமைத்துவத்திலிருந்து விடுதலை! மட்டுமல்ல, உடல் நிறையளவு வெள்ளி; உயரத்தளவு பட்டு. அவன் வஹ்ஷீ. எவரையும் சாராமலேயே அவன் வீரர் பொருதும் இடமெலாம் புகுந்து நெளிந்து வந்து கொண்டிருந்தான். களம் முழுவதும் அவனுக்கு ஒரே யொரு குறி... ஹம்ஸா!*

*எதிரிகளைச் சிதறடித்துத் துவம்சம் செய்தவராக வீரப் பெருமிதத் துடன் காம்பீர்ய நடையினராய்த் திரிந்து வந்தார், ஹம்ஸா.*

*பின்னால் கிடந்த பிணங்களிடையிருந்து எழுந்தான் கொலைஞன். ஈட்டி கையில். ஒரு வீச்சு. களம் விட்டகன்றான் வஹ்ஷீ.*

*வஹ்ஷீக்காய் என் இதயத்துள் அனுதாபமே வழிகின்றது. விடுதலை யென்பது அடிமையொருவனால் எவ்விதத்திலும் மறுக்கவியலாததொரு லஞ்சம். பட்டும் வெள்ளியும் பொருட்டாய்க் கொள்ளாது தன் நாமமும் துறந்தவனாய் விடுதலையுடன் பாலையுள் தொலைந்தான் வஹ்ஷீ. ஆண்டுகள் பல கழிந்து நபிகளாரிடம் அவன் வந்த வேளை அவர் கரம் பற்றி மன்னிப்பு ஈட்டிக் கொண்டான். ஆயினும், வஹ்ஷீயின் அண்மை தம்மை நோவுறச் செய்கிறதென அவனை அகன்று சென்று விடும்படி பணித்தனர் நபிகளார்.*

உஹதின் தினத்தில் குரூர முகங்கொண்டது, ஹிந்தாவின் அழகு. ஹம்ஸாவின் விலா கிழித்தெடுத்த ஈரலைப் பற்களிடையே இட்டுச் சப்பித் தன் அழகியல் அனைத்தையும் முடம் செய்துகொண்டாள் ஹிந்தா. கவிஞர்கள் கூறியவை சரியாயிருக்கலாம் - படுகளத்தில் பெண்டிரை அனுமதித்தல் குரூரமே.

உஹதின் தினத்தில் வாள் வீச்சொன்று சற்றே தவறி வீழ்ந்தமையால் தான் நபிகளார் மரணத்திலிருந்து பிழைத்தனர். கல்லொன்றினால் தாக்குற்று விழுந்தார்கள் நபிகளார். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மக்காவின் கூர்வாள் வீரனாய்ப் பேர் பெற்றிருந்த இப்ன் காமியா அவர் அருகில் நின்றிருந்தான். சிரமமோ பிசகோ இன்றிச் செய்து முடித்து விடக்கூடிய கொலை அது. உணர்ச்சிகளின் வசம் ஆகாது, ஓடும் குருதியைக் கணக்காய் அடக்கிக் காரியம் புரியும் இப்ன் காமியாவுள் திடீரென பகைமை பற்றியெரிந்தது. மிக்குயர்த்திய தன்வாளை அதி வேகமாய் வீழ்த்தினான் அவன். குறி தவறா வல்லமை வாய்ந்தவன் என எத்துணைதான் அவன் பெயர் பெற்றிருந்தும் அந்த கணத்தில் இழைத்தான் தவறு.

நிகழ்ந்தவை அனைத்தையும் தெளிவாகக் கண்டேன் நான். அது ஒரு கணமல்ல; ஒரு மணித்தியாலமே போலும் மெல்ல மெல்ல அனைத்தும் நிகழ்வதாய் மிகத் தெளிவாக மனக்கண்ணுள் பதிந்துள்ளன. காமியா மகனைக் கொன்றிடவென, உடலும் என் வாளும் ஒருங்குறத் தரை மேல் வழுக்கிச் சறுக்க, நெடுஞ்சாண் கிடையாய்ப் பாய்ந்தேன். அவன் பாதம் மட்டுமே எட்டியதாக நினைவு. உடன் நாங்கள் பன்னிருவர் நபிகளாரைச் சூழ்ந்து நின்றோம். எமது வாள்கள் மேல் நோக்கி உயர்ந்தன.

உஹதின் தினம் முடிவடைந்தது. அபூஸுஃப்யான் தன் வழி சென்றார். இறைபாதையில் மரணித்துயர்ந்தார் அனைவருக்கும் தனித்தனிப் பிரார்த்தனைகள் புரிந்தனர் நபிகளார். காரிருள் சூழ்ந்தது. உயிரிலா உடல் களின் மத்தியில் விளக்கொன்று மெதுவாக அலைந்து கொண்டிருந்தது.

உஹதின் இரவு அது.

## வரலாற்று ஏடு – 4

உஹதில் கண்ட தோல்வியின் பின்னரும் நபிகளாரின் செல்வாக்கும் அவர் கொண்டு வந்த தூதின் சக்தியும் அதிகரித்த வண்ணமே இருந்தன. மதீனாவைத் தாக்காது விட்ட தவறினை உணர்ந்து கொண்டார் அபூ ஸுஃப்யான். இரண்டு வருட காலமாகத் தொடர்ந்த சிறு சண்டைகள், பரஸ்பரத் தாக்குதல்களின் பின்னர் அபூஸுஃப்யான் பெரும் போர் ஒன்றுக்குத் தயாராக வந்திருந்தார். இம்முறை எவ்வித தயையோ, தயக்கமோ காட்டப்பட மாட்டாது. இறுதி முஸ்லிம் அழிக்கப்படும் வரை அவர் ஓயப் போவதில்லை. கி.பி. 627 பிப்ரவரியில் பத்தாயிரம் வீரர்களுடன் மதீனாவின் வடபுறமாக வந்து சேர்ந்த அவரை எதிர்த்து நிற்பது இயலாது போலத் தோன்றியது.

விண்ணகத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் மத்தியிலும் முஸ்லிம்கள் வெளியிறங்கிச் சென்று போரிடத் தயங்கினர். எனினும், நபிகளார் மீண்டும் போருபாயத் தந்திரங்களில் தமக்கிருந்த திறமையை வெளிப்படுத்தினார்கள். பாரசீகத்தவரும் முன்னாள் அடிமையுமான ஸல்மானின் ஆலோசனையின் பேரில் நகரைச் சுற்றிக் குதிரைகளால் கடக்க முடியாத ஓர் அகழியை அமைத்தனர். சாதாரணமான அப்பாது காப்பு நடவடிக்கைகூட அராபிய போர் முறைகளைப் பொறுத்த அளவில் புதுமையான ஒன்றாகவே அமைந்தது. இதனைச் சமாளிக்கும் வகை யறியாமல் திணறினர் மக்கத்தார்.

இடைக்கிடை நடந்த சில தனியார் மோதல்கள் தவிர வேறு பெரும் போர்கள் ஏதும் நடக்கவில்லை. இருபது நாட்கள் கழிந்து சென்றன. பின் திடீரென வீசிய ஒரு புயலின் காரணமாக எதிரிகளின் கூடாரங்கள் முறிந்தன. குதிரைகளும் அச்சத்தால் பதறின. முற்றுகையைக் கைவிட்டு அபூஸுஃப்யான் திரும்பினார். அவரால் எதையும் சாதிக்க முடியவில்லை. தன் எதிரிகளைச் சிதறடித்துத் துரத்திய காற்றின் சக்தியில் இறைவனின் கரங்களையே முஸ்லிம்கள் கண்டனர்.

சமாதானத்துக்கான வாய்ப்பொன்றைக் கண்ட நபிகளார், வியப் பூட்டும் தன்னம்பிக்கையுடன் அதனை அமல் செய்ய முனைந்தனர். தம்மைப் பின்பற்றியோரை, யாத்திரை செய்யும் நோக்குடன், பூரண நிராயுதபாணியராக, மக்கா நோக்கி வழி நடத்திச் சென்றனர். அபூ ஸுஃப்யானின் குதிரைப்படை வீரர்கள் நபிகளாரை ஹுஃதைபியாவில் எதிர் கொண்டனர். ஆயுதமில்லாக் கரங்களையும் யாத்திரிகர்க்கான ஆடைகளையுமே காட்டினர் நபிகளார்.

ஒரு கள்ளி மரத்தின் அடியில் ஹுதைபியா உடன்படிக்கை என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆரம்ப முஸ்லிம்களின் வரிசைப்படுத்தலில் ஹுதைபியாவில் சமுகமளித்திருந்தமை மகத்துவம் மிக்க ஒரு செய்கையாகக் கொள்ளப்பட்டது. நம்பிக்கை, துணிவுடைமை, இஸ்லாத்தின் மீதான தூய்மையான அடிபணிதல், இறைவனிடம் பூரண சரண் என்பனவற்றை உணர்த்துவதாக அமைந்தது அது.

ஒப்பந்தத்தின் பிரதான அம்சமாக அமைந்தது பத்து வருட காலத்துக்கான சமாதானம் ஆகும்.

# பொய்மை

வாளால் பரந்தது இஸ்லாம் என இங்கே, டமஸ்கஸில் அதி விவேகியர் சிலர் கூறித் திரிவது என் செவிகளுள்ளும் விழுந்துள்ளது. மூடர்கள்! மார்க்கம் என்பது விதைத்தல். அறுவடை செய்பவன் இறைவன். அவனை அஞ்சுக!

இருந்தும் அவர்கள் இன்னமும் கூறுகின்றார்கள்: "உங்கள் இறைவனுள் நீங்கள் சரண் புகுவதென்பது, ஏனைய அனைவரும் உங்கள் குதிரைகளுக்குச் சரணடைவதே. இதுதான் உங்கள் இஸ்லாம்." வன்முறையினால் இம்மதத்தைத் தழுவிய ஒருவரை, இஸ்லாத்தினுள் பலாத்காரமாய்ப் புகுத்தப்பட்ட ஒரு நகரத்தைக் காட்டும்படி நான் வேண்டினால் அவர்கள் சாதிப்பது மௌனம்! எனவே, என் குரல் உயர்தல் அவசியம்.

பலவந்தமாய் யாரையேனும் ஒரு முஸ்லிம் மதமாற்றம் செய்வாராயின் நரகு கிட்டுமோ என ஐயங் கொள்ள வேண்டியதில்லை. நரகம்தான் கிட்டும் என்பது உறுதி. மிகவும் சுருக்கமானது இறையோனின் எச்சரிக்கை. 'மார்க்கத்தில் பலவந்தம் இல்லை'. வாள் குறித்து எம்மைக் குறை சொல்வார்க்கு நான் என் கைத்தடியையே காட்டுகிறேன். இளைஞர்தம் உலகில் கிழவன் ஒருவனின் கைத்தடி அமைதியாய் இருப்பது எங்ஙனம்? இருந்தும், என் தடியில் தீனி கட்டி அவர்தம் கழுதைகளை நான் மதமாற்றத்தை நோக்கிச் செலுத்தக் கூடுமாயின் நிச்சயம் நான் நெருப்பில் வெறுப்புற கொளுத்தப்படுவேன். ஏனெனில், மார்க்கத்தில் பலவந்தம் இல்லாதது போலவே, லஞ்சமும் இல்லை.

வாள், பயமுறுத்தல், எலும்பின் முறிவு, லஞ்சம் எதுவுமே ஒரு மனிதனை விசுவாசத்தினுள் செலுத்தாது. வற்புறுத்தலினால் மத மாற்றம் செய்யும் அற்பத் தனத்தை எதிர்த்திருக்கும் அத்தடையின் ஆழத்தில் பதிந்து விளங்குகின்றது, முறிவில்லா, அழகு நிறை, வைர ஒளி வீசும் இஸ்லாம்.

தன்னை விசுவாசிப்பவர் யார் எனத் தீர்மானிப்பவன் இறைவனே; மானிடரல்ல. அத்தியாயம் யூனுஸின் நூறாம் வாசகம் மூலம் டமஸ்கஸில் வாழும் அதி விவேகியர் உட்பட, முழு மனித சமூகத்தாருக்குமென இறைவன் ஒரு வினாவை விடுக்கின்றான்:

> எந்த ஆன்மாவும் இறைவனின் அருள் இன்றி நம்பிக்கை கொள்ள முடியாது. மனிதர்கள் யாவரும் நம்பிக்கையாளர்களாகிவிட வேண்டுமென அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?

ஆயின், எங்ஙனம் வெட்டும் வாளால் விஸ்தரித்தது இஸ்லாம்? எவ்விதத்தும் நடக்காத ஒன்றை ஆதாரபூர்வமாக நிரூபித்த நிலையிலும் நிச்சயம் நடந்தது அது, எனக் கூறுபவர் ஒருவர் இருக்கவே செய்வார்.

முட்கள் நிறை கள்ளியே ஆனாலும் ஹுதைபியாவின் மரம் பெருங்கனி உதிர்த்தது. இலையேதுமிலாத் தனி மரமாயிருந்தும் நிழல் ஈந்து நின்றது, அது ஆயிரவர்க்கு. ஒப்பந்தத்தின் முடிவு ஓர் அற்புதமாகவே இருந்தாலும் கூட, என் உருவக வர்ணனையை நீங்கள் அற்புதமாக்கிக் கொள்ள வேண்டுவதில்லை. முதன் முறையாக நாங்கள் சுதந்திரமாக, பாலை வனப் பசுஞ்சோலைகளுக்கு, கேணிகள் சுற்றியமைந்த கிராமங்கள் பல வற்றிற்குச் செல்ல முடிந்தது. கல்லெறி, சாட்டையடி, கட்டவிழ் நாய்க்கடி முதலியவற்றின் அச்சங்கள் ஏதுமின்றி உள்ளத்திலிருந்ததை எல்லாம் ஒளிவு மறைவின்றிப் பேச முடிந்தது.

வாளால் அன்றி வார்த்தைகளால்; பலவந்தமின்றி, பண்புற அழைத் தலால் மானிடர் இதயங்களைக் கவர்ந்தோம் நாங்கள். இஸ்லாத்தின் மகத்துவம் இது.

## வரலாற்று ஏடு – 5

பத்து வருடக் காலத்துக்கென இயற்றப்பட்ட ஹுதைபியா ஒப்பந்தம் நீடித்தது இரண்டு வருட காலம் மட்டுமே. அதனை முறித்தோர் மக்கத்தார். அபூஸுப்யானும் அறிந்திராத, மறைமுகமான ஒரு நிகழ்வு அது. ஒப்பந்தத்தில் மக்கத்தாரைச் சார்ந்திருந்த சில கோத்திரத்தார், மதீனத்தாரைச் சார்ந்திருந்த சில கோத்திரத்தாரைத் தாக்கியமையே நிகழ்ந்தது. சிறியதொரு மோதலே ஆயினும், அதுவே ஒப்பந்தத்தை முறித்து விடுவதாய் அமைந்தது.

நபிகளார் மக்கா நோக்கிப் படையெடுத்துச் சென்றனர். சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின் அக்குறுகிய காலத்தில் இஸ்லாம் மிக வேகமாகப் பரவி, நபிகளாரைத் தொடர்ந்தோரின் தொகை பன் மடங்காய்ப் பெருகியிருந்தது. மதீனாவிலிருந்து புறப்பட்ட படையில் பத்தாயிரம் வீரர்கள் இருந்தனர். இடைவழியில் பல்வேறு கோத்திரங் களிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் இணைந்து கொண்டனர். இவ்வளவு பெரியதொரு படையை அரேபியா இதற்கு முன்னர் கண்டதில்லை.

மிகவும் இக்கட்டான இந்நிலைமையில், கிட்டக் கூடிய ஏதும் நன்மையை உத்தேசித்தவராக அபூஸுப்யான் முஸ்லிம் பாசறை நோக்கித் தனித்துச் சென்றார். ஒப்பந்தங்கள் ஏதும் செய்து கொள்ளலா மென அவர் முனைந்தாலும்கூட, இணக்கங்கள் காணும் காலம் கடந்து சென்றிருந்தது. நபிகளாருடன் சமாதானம் செய்துகொண்ட அபூஸுப்யான், தானும் இஸ்லாத்துள் சரண் புகுந்தார்.

## அபூஸுஃப்யானின் சரண்

அசந்தர்ப்பவசமான ஏதோ ஒன்று நிகழ்கின்றதென நான் உணர்ந்து கொண்டேன். விழிகள் பிதுங்கி, உணவுக் கவளம் மூச்சடைக்க நின்றார் அபூதர். உமரின் பெருங்கைவிரல்கள் அவர் உள்ளங்கைகளுள் இறுகின. நிகழ்வன என் பின்புறம் என்பதால், முகம் திருப்பிப் பார்த்தேன்.

எமது பாசறைத் தீ நோக்கி எம் இருபதாண்டு காலப் பகைவர், சொல்லொணாத் துயர்கள் உறுத்தி எம்மை வதை செய்தவர், எம் அனைவரையும் அழித்தே விடுவதெனக் கங்கணம் கட்டிக் கருமமாற்றியவர் நடந்து வந்து கொண்டிருந்தார். அபூஸுஃப்யான்! கௌரவமும் காம்பீர்யமும் மிக்க நடை. ஒரு காலத்தில் எம்மையெல்லாம் அச்சுறுத்தி நின்ற அமைதி.

எம் தீக்குவியலருகே வந்து நின்றார் அவர். எம்மில் எவரும் எழவில்லை. அங்கிருந்து அவர், அடிவானம் தொடுமளவு சுவனத்திலிருந்து வீழ்ந்த நட்சத்திரங்கள் போலப் பரந்து எரியும் பல்லாயிரம் தீக்குவியல்களைச் சுற்றிவரப் பார்த்து, ஆர்வமேலீட்டில் கூறினார்: ''முஹம்மதின் அரசு மிகவும் பரந்துவிட்டது!'' தவறான அவரது எண்ணம் தாங்காமல் உடன் அவரைத் திருத்தினேன்: ''அரசரல்ல முஹம்மத்; இறைவனின் தூதர்!''

தமக்குள் தாமே தமையிழந்த நிலையில், இணக்கம் தெரிவிப்பது போலத் தலையசைத்தவராய் என் பெயர் உரைத்தார் அபூஸுஃப்யான்: ''பிலால்!''. எத்துணை மிருதுவாயெழுந்தது அந்த ஒலி! மீண்டும் ஒரு கசையடித் தண்டனைக்கென என் பெயர் பிரஸ்தாபித்திருக்கலாம் அவர். அன்றைய நாளின் அதே மென்மை. பண்டை நினைவுகளுடன் அவரை ஏறிட்டுப் பார்த்தேன். என் விழிகளால் நான் அவரை விளாசினேன் எனவும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். வேறு புறம் திரும்பிக் கொண்ட அவரைக் கடந்து நபிகளார் தொழுது கொண்டிருந்த கூடாரம் நோக்கிச் சென்றேன். ''இறைத்தூதரே... அபூஸுஃப்யான் வந்திருக்கிறார்'' என்றேன். ''ஒவ்வொரு மனிதனின் நேரத்தையும் இறைவனே தேர்கிறான்'' எனக் கூறி அபூஸுஃப்யானை அழைத்து வரும்படி சைகை செய்தனர் நபிகளார். வெற்றி கண்டுவிட்ட பெருமித உணர்வேதும் இல்லை அவரிடம். வெறுமனே தம் விரல்களால் இமைகளைத் தடவியவாறு கூறினார்கள்: ''இறைவனே அழைப்பவன்.''

அபூஸுஃப்யானின் முன்னால் அலீ. வாளேந்திய உமருடன் நான் பின்னால். சிறியதோர் ஊர்வலம். அதுவே மக்காவின் வீழ்ச்சியும்.

பிரேரணைகளின் தூவலோடு துவக்கம் செய்தார் அபூஸுஃப்யான்: ஒப்பந்தக்காலம் நீடிக்கும்... மக்கத்தார் ஆயுதம் தரித்திருப்பர்... முஸ்லிம் களுக்கு யாத்திரை உரிமை... இத்யாதி. சட்டென இடை மறித்த நபிகளார் கூறினார்கள்: ''அதற்குரிய காலம் கடந்து விட்டது.''

தொடர்ந்த உரையாடலை நான் ஒருபோதும் மறவேன். அதனைத் தொடக்கியவர் அலீ: ''முஹம்மத் இறைவனின் தூதர் என நீர் ஏற்பதற் குரிய காலம் இன்னமும் வரவில்லையா ஓ அபூஸுஃப்யான்?'' நாங்கள் அமர்ந்திருந்த பாயின்மீது பதிந்தது அபூஸுஃப்யானின் பார்வை. விழிகள் மூடியிருந்தன போலிருந்தது: ''அது குறித்து இன்னமும் என் மனத்தில் சிறிது சந்தேகம் இருக்கிறது. ஓ முஹம்மத்!''

''உமது தலையை நாங்கள் சீவிவிட்டால், உம் சந்தேகமும் தீர்ந்து விடும்'' - வழக்கம்போல் தீர்மானமாய்க் கூறினார் உமர்.

உமரை எதிர்த்து நான் ஒருபோதும் பேசியதில்லை. இப்போது நான் பேசவேண்டியவனானேன். அவரருகில் நெருங்கி என் கரம் அவர் தோள்மீதிட்டுக் கூறினேன்: ''மார்க்கத்தில் இல்லை பலவந்தம்.'' புன்னகை புரிந்த நபிகளார் திருப்தி கொண்டனர் என உணர்ந்தேன். கறுப்பு நிற மனிதன் ஒருவனைத் தன் வாழ்நாளில் என்றுமே கண்டிராதக் குழந்தையொன்றை போல என்னை உற்று நோக்கிக் கூறினார் அபூ ஸுஃப்யான்: ''ஓ கறுப்பு அடிமையே! உன் பள்ளியிலும் நான் படிக்க வேண்டியிருக்கிறது.'' நபிகளாரை நோக்கித் திரும்பித் தொடர்ந்தார் அவர்: ''என் வணக்கத்துக்குத் தகுதியானவையாக இருந்திருந்தால் இதற்கு முன்னமேயே என் கடவுளர் என்னைக் காப்பாற்றியிருப்பர்.''

தம் மௌனத்தாலேயே பதிலளித்தனர் நபிகளார். அமைதி தொடர்ந்தது சிறிது நேரம். பின் அபூஸுஃப்யான் தயக்கங்கள் ஏதுமின்றி மிகவும் துல்லியமாகப் பேசினார்: ''வணக்கத்துக்குரிய இறைவன் ஒருவனே, ஓ முஹம்மத்! நீர் அவனது தூதர் என்று நான் சுயமாக, வற்புறுத்தல்கள் பலவந்தங்கள் இல்லாமல் உறுதி கூறுகிறேன்''.

இறைவனிடம் அபூஸுஃப்யானின் சரண் துளிர் விட்டது இவ்வாறு.

மறுநாள் காலை நாங்கள் மக்கா நோக்கிச் சென்றோம். எமது வெற்றிச் சுவடுகளின் கடைசி மைல்!

## வரலாற்று ஏடு – 6

எட்டு வருடங்களுக்கு முன்னர் இரவின் இருளில் மக்காவை விட்டுத் தப்பிச் சென்ற நபிகளார், இப்போது வெற்றிவாகை சூடியவராக மீண்டு வந்திருந்தார்கள். எதிர்ப்புகள் ஏதும் இன்றியே நகரம் சரணடைந்தது.

பொறுமையின் சிகரமாக நடந்து கொண்டனர் நபிகளார். இரத்தம் சிந்தவில்லை; பழி வாங்கவில்லை. எவரும், எதுவும் பாதிக்கப்பட வில்லை. நடந்தன மறக்கப்பட்டன; நிகழ்வன மன்னிக்கப்பட்டன!

ஏக இறையோனின் பெயரால், கஅபாவை, அதன் முன்னூற்றறுபது கடவுளரிலிருந்தும் தூய்மைப்படுத்தினர் அண்ணலார். வீழ்த்தப்பட்ட சிலைகள் உடைக்கப்பட்டன; எரிக்கப்பட்டன. படையெடுப்பின் சினம் மிக்க நடவடிக்கையாய் அமைந்தது இது மட்டுமே.

முடிவில் நபிகளார் கஅபாவின் வாசலில் நின்றவர்களாக இஸ்லாத்தின் வெற்றியைப் பிரகடனம் செய்தார்கள். "சத்தியம் வந்தது; அசத்தியம் மறைந்தது". பின் பிலாலை விளித்து, கஅபாவின் கூரைமீதேறி தொழு கைக்கான அழைப்பு விடுக்கும்படி பணித்தனர்.

## கஅபாவின் மீது...

என்னால் அதன்மேல் ஏறமுடியுமென நான் எண்ணியிருக்கவில்லை. நேர் செங்குத்தாக உயர்ந்த ஒரு தனிச்சுவர். பற்றுக் கோடாய்ப் பற்றுவதற் கிருந்தது இற்றுத் தேய்ந்தவோர் இளகிய கருந்துணி. என்றாலும், அவ் வேளை பறக்கும்படியாகவே நபிகளார் என்னைப் பணித்திருந்தால், நானும் புகழ்மிக்கதோர் அற்புதமாய் அமைந்திருப்பேன் - 'பறக்கும் பிலால்'.

மேலே செல்லும்படி நபிகளார் கூறியதும் அதன் காரணம் என்ன வென்பதை உடன் நான் உணர்ந்து கொண்டேன். கஅபாவின் கூரை மீதிருந்து விடுக்கும் தொழுகைக்கான அழைப்பு இறைத்தூதர் இப்ராஹீம் அவர்களால் உயர்த்தப்பட்ட இந்த இறையில்லம், இறைவனின் வணக்கத்துக்காகவே மீட்கப்பட்டுள்ளது என்பதை மானிடவர்க்கம் முழுவதற்கும் உணர்த்துவதாக அமையும். மதீனாவில் எனது முதல் அழைப்பு, நபிகளார் கூறியதுபோல் அவரின் பள்ளிவாசலை நிறைவு செய்திருந்தது. இப்போதைய என் அழைப்பு கஅபாவினைத் தூய்மைப் படுத்தும் அண்ணலாரின் பணியை நிறைவு செய்யும்.

அச்சம் விளைவிக்கும் பாரிய பொறுப்பு அது. உண்மையில் நான் கடவுளர்க்கெல்லாம் எதிராகவே மேலேற வேண்டியிருந்தது. கீழே நான் வீழ்ந்துபட்டாலோ சிலை வணங்கிகள் அனைவரும் நசிந்த என் உடலின் மீது மீண்டும் அவர்தம் தெய்வங்களை உறுதியாக நிலைபெறச் செய்து கொள்வர். ஆனாலும், நான் முன்னர் கூறியது போல, தொழுகைக்கான அழைப்பு விடுக்கவென முஅத்தின் உயரே செல்லும்போது அவரைத் தூக்கி விடுவன, கீழே இருப்போரின் மேல் நோக்கிப் பதிந்த விழிகளும், நம்பிக்கையுமே!

சிலவேளை விரல்களினால் தொங்கியும், பிடித்துக் கொள்ள நாடித் துழாவும் முயற்சியில் இற்றுத் தொங்கும் துணியை உதைத்தும், முழங்கால் சிராய்ந்து முன்தோல் உரித்தும், பெருமூச்சுகள் பல உதிர்த்தும், இதயம் இடிக்கவும், முதுகந்தண்டிலிருந்து என் விலாவெலும்புகள் விலகுவது போல துயருடன் இழுத்தும், இறுகப் பிடித்தும் என்னை உயர்த்தினேன். இறுதிச் சில அடிகளே நீண்ட தொலைவாய் விளங்கின. சிகரம் அடைந்ததும் என் உடலைக் கூரையின் சமதளத்தின்மேல் உருளச் செய்தேன். உலகத்தார் கண்களிலிருந்து மறைந்து மல்லாந்திருந்த நான் அப்படியே இருந்துவிடக் கூடாதா என்றெண்ணியதாக நினைவு. என்றாலும், தொழுகைக்கான அழைப்பு விடுக்கும் மனிதன் இறைவனின் காலத்தைத் தன் மீது செலவு செய்தல் தகாத செயல்.

நிசப்தமே நிலவியது கீழே. வார்த்தை ஏதும் உரைக்காத மானிடக் கூட்டம். அண்ணாந்து ஆகாயம் நோக்கினேன். அதுவும், மூச்சடக்கி இருப்பதுபோல் தோன்றிற்று. காற்றில் சற்றேனும் அசைவில்லை. அச்சம் கிளர்ந்தது உள்ளத்துள். நான் எங்குள்ளேன் என்பதும் நான் செய்ய வேண்டியது என்னவென்பதும் தெரிந்து கொண்டேன்.

என் அழைப்பை விடுத்தேன். சிறப்புறவே செய்தேன் நான். சூழ வரவுள்ள மலைகளில் எதிரொலித்து மீண்டும் என்னை வந்து சேர்ந்தது என் அழைப்பு. புனிதத் தலங்கள் அனைத்தும் பதிலளித்தன.

தம் ஒரு கைமேல் மறு கரம் வைத்தவராகத் தலைதாழ்த்தித் தம் ஒட்டகை மீது அமர்ந்திருந்தனர் நபிகளார். அவர் தவிர வேறு எவரும் அமர்ந்திருக்கவில்லை. அண்ணலாரை நெருங்கி நின்றிருந்தனர் அருமைத் தோழர்கள் அபூபக்ர், உமர், அலீ, அபூதர். அவர்களைச் சூழவும், பல திக்கும் பரந்து காணப்பட்டனர் பல்லாயிரக்கணக் கான ஆண்களும் பெண்களும். போர்களெல்லாம் பிரார்த்தனைகளில் முடிவுற்ற திருப்தி அனைவருள்ளும்.

மகிழ்வும் அச்சமும் கலந்த நினைவுகளால் எத்தனையோ இரவுகளில் விழித்திருந்து விந்தைமிகும் அந்த நாளை அடிக்கடி நினைக்கிறேன். நான் கூறிய விதமாகத்தான் அனைத்தும் நிகழ்ந்தனவா? அல்லது மீண்டும் நான் அடிமைகள் மத்தியில் ஓர் அடிமையாய்க் குந்தியிருந்த சுவரொன்றின் நிழல் தந்த சுகத்தில், அதன்மேல் ஏறியிருந்ததாகக் கற்பனைதான் செய்து கொண்டேனா? இல்லை, பண்டைய நினைவுகள் தான் கனவுகளாய் எழுகின்றனவோ?

உயரம் ஏற உதவுபவையல்ல முதிர்ந்துபோன எலும்புகள். நிச்சயமாக அவ்வேளை என்னுள் போதிய வலு இருக்கவே செய்தது. என்றாலும் வயது என்றால் என்ன என நான் ஒருபோதும் நிச்சயமாய் அறிந்ததில்லை. சிந்தையும் சரீரமும் அவ்வினாவுடனே எப்போதும் மோதுகின்றன. இப்போதும்கூட, வாசற்கதவடியில் அமர்ந்து, கைத்தடியின் மீது முகம் பதித்து, அதோ, மேற்கில் மறைந்து கொண்டிருக்கும் கதிரவனைப் பார்த்தவனாய் என்னையே நான் வினவுகிறேன்: இளைஞனான ஒரு கிழவனோ அல்லது கிழவனான ஓர் இளைஞனோ நான்?

நான் ஏறியதை வரலாறு கண்டது, நான் கண்டதொரு கனவல்ல அது. இறைவன் என்னைக் கண்டுள்ளான்; நான் ஏற்கெனவே சுவனம் நோக்கி கஅபாவின் உயரமேனும் உயர்ந்துள்ளேன் என்பதே என் நம்பிக்கை. அவ்வாறாயின் நான் 'பறக்கும் பிலால்' தான்!

## வரலாற்று ஏடு - 7

மக்க வெற்றியின் பின் இரண்டு வருடங்களும் இரண்டு மாதங்களும் கழிய, நபிகளார் மதீனாவில் சுகவீனமுற்றனர். பத்து நாட்கள் தொடர்ந்த கடுஞ் சுகவீனத்தின் பின் கி.பி. 632 ஜூன் எட்டாம் தேதி, அபூபக்ரின் மகள், நபிகளாரின் இளம் மனைவியார் ஆயிஷாவின் தோளில் சாய்ந்தவர்களாக அண்ணலார் மரணித்தார்கள். நபிகளார் அப்போது அறுபத்து மூன்று வயதினராயிருந்தனர்.

# பிரிவு

இறைவன் தன் இறுதித் தூதரின் உயிரைக் கருணையாய் எடுத்தனன். துயரொலியெழுப்பிய பெண்டிரதும், மௌனத்துள் அடங்கிய ஆடவரதும் அன்பின் மத்தியில் 632, ஜூன் எட்டின் மாலையில் அண்ணலார் மறைந்தனர். மரணத்துக்குப் பொறுப்பான வானவர் வந்த வேளை, அவர் தயாரா எனப் பணிவுடன் வினவியதாகவும் கூறுவர்.

போர்க்களங்களில், கொன்றொழிக்கும் தொற்று நோய்களில், கப்பல் கவிழ்கையில் என்றெல்லாம் கூட்டம் கூட்டமாய் மரணிப்பார்தம் கூட்டத்தில் தாமும் ஒருவராகவே மரணத்தைச் சுகிக்க நேர்ந்தாலும்கூட, ஒவ்வொரு மனிதனது மரணமும் அவனுக்குத் த்னித்துவம் வாய்ந்த தாகவே இருக்கும். எவரும் பிறனொருவன் மரணத்தை விளங்கிக் கொள்ளுதல் இயலாது. இறப்பின் நிகழ்வுகளை மட்டுமே எடுத்துக் கூற இயலும். அவ்வாறே இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களது மறைவின் நிகழ்வுகளை மட்டும் நான் உங்களுக்குக் கூறுவேன்.

அந்த மரணம் சாதாரணமானதல்ல; அசாதாரணமானதும் அல்ல. வன்மையானதல்ல; எளிதாய் விளைந்ததுமல்ல. எதிர்பார்த்திருந்ததும் அல்ல; எதிர்பாராததுமல்ல. ஆனால் அது இறைத்தூதராயிருந்த ஒரு மனிதரின் மரணம். எனவேதான் அது எவராலும் ஊகிக்க முடியாத தொன்றாயிருந்தது.

வழக்கம் போலவே நான் அவரை எழுப்பினேன்; என்றும் போலவே எழுந்து வந்தார். ஆனால் நடை தளர்ந்திருந்தது. தலையை வலிக்கிற தெனக் கூறி நெற்றி தொட்டுப்பார்க்க வேண்டினர். தொட்ட நான் கொதிப்புணர்ந்து, உள் சென்று மீண்டும் ஓய்வாய் இருத்தல் நல்ல தென்றேன். எனினும், என்னுடன் பள்ளிவாசலுக்குள் வர முனைந்து, என் கரத்துள் தம் கரம் வைத்து முன் நடக்கலாயினர். நபிகளார் நேராய் நிற்கும் நிலை தளர்ந்திருந்ததைக் கண்டு அவரை அணைத்து நடந்தேன். திடீரென இடை நிறுத்தினர் அண்ணலார்: ''நமது முதல் சந்திப்பு உமக்கு நினைவிருக்கிறதா... பிலால்!... இப்படித்தானே நாம் நடந்தோம். ஆனால், அன்றோ நான் தாங்கியிருந்தேன் உம்மை... '' சிரித்தார் நபிகளார்.

''இருபத்திரண்டு வருடங்களின் முன் அது'' என்றேன்.

''நேற்று... நேற்று...'' என்றார் இறைவனின் தூதர்.

நாங்கள் மகிழ்வாய் ஒருங்கிருந்த கடைசிச் சந்தர்ப்பம் அது. அன்றைய தினம் முழுவதும், தொடர்ந்த சில தினங்களும் அண்ணலார் உடம்பு அனலாய்க் கொதிக்க ஜுரம் ஏறிக்கொண்டிருந்தது. குரல் தளர்ந்து, கரங்கள் நடுக்குற்றிருந்தும் அவரே எழுந்து வந்து தொழுகையை நடத்தி வந்தார்.

ஐந்தாம்நாள். கலைந்த கூந்தலர், கலங்கிய முகத்தவராய்க் கதவு திறந்தார் ஆயிஷா. அவரின் பின்னால் நபிகளார் வாய் பிதற்றி மூச்செடுக்க அவஸ்தையுறுவது கேட்டது. ஆயிஷா வாளியொன்று தந்து குளிர்நீர் கொண்டு வர வேண்டினார்.

ஓடினேன்... ஓடினேன். பாலைப் பசுந் தரையின் கிணறுகள் பல தாண்டி, ஆழத்திலும் குளிர்மையிலும் அனைத்தையும் விஞ்சிய கிணறு நாடி, அவரின் நெருப்பணைக்கும் நீர் நாடி ஓடினேன். நீள் ஆழத்துள் வாளி வீழ் ஓசை இன்னும் என் செவிகளுள் ஒலிக்கிறது. வீட்டுக் கதவடிவரை வாளி கொணர்ந்து சேர்க்க மட்டுமே எனக்கு அவகாசம் இருந்தது. தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் வேளை நெருங்கியிருந்ததே காரணம். என் கடமை அது. தொழுகைக்கு உரிய வேளையில் அழைப்பு விடுக்கப்படாவிட்டால் அவரின் உடல் வேதனையிலும் மிக்கதொரு பளுவை அவரின் ஆன்மா மீது சுமத்தியவனாவேன் என்பதை நான் நன்கறிந்திருந்தேன்.

என் கடமை முடிய, மீண்டும் நபிகளார் வாசல் சென்ற நான், பாதகம் ஏதும் விளைந்திடவில்லை என்பதை ஆயிஷாவின் முகத்திலேயே கண்டு கொள்ள முடிந்தது. ஆயிஷா கூறினார்: "இன்றிலும் சிறந்த அழைப்பினை இதற்கு முன்னர் நீர் விடுத்ததில்லையென உம்மிடம் கூறும்படி நபிகளார் கூறினார்கள்."

அதனை நான் மறுத்திருப்பேன். வழமையாக என் குரலை உச்ச ஸ்தாயியில் வளமாகவே வைத்திருப்பேன் நான். ஆனால், அன்றைய தினமோ காற்றின் வீச்சு அதிகமாக இருந்தது. தொழுகைக்கான அழைப்பின் வசீகர ஒலியலைகளை ஈத்தங் கீற்றுகள் விழுங்கிக் கொண்டன. நான் இறைவனை அஞ்சாதிருந்திருப்பின், மதீனத்து ஈத்த மரங்களுக்கெல்லாம் என் பழுந்தடியால் நல்லடிகள் பல கிட்டியிருக்கும். என்றாலும், எல்லா முஅத்தின்களும் உறுதியாக அறிந்துகொள்ளட்டும். வெறும் இயந்திரமாக செவியில் சேர்பவையல்ல அவர்களது சிறந்த அழைப்புகள். மனிதனின் உள்ளமைந்த சிந்தையான இதயத்தைச் சேர்வனவே சிறந்தவை. எனவே, நபிகளார் தம் இறுதி வேளைகளின்போது, அதுதான் என் சிறந்த அழைப்பொலி எனக் கூறினார், அவ்வாறே ஆகும் அது.

மயக்கமும் கவலையும் இரண்டு நாட்களை இழுத்துச்சென்றன. அந்த இரண்டு நாட்களும் என் சிந்தையிலிருந்தும் விலகியோடவே என்

கால்களைப் பயன்படுத்தினேன். அவரின் வாசல் விட்டும் நான் நீங்கியது ஓடுவதற்கு மட்டுமே. ஒன்றுதராத சுகத்தை மற்றொன்று தராதா என்ற ஏக்கத்தில் ஏழு கிணறுகளிலிருந்து நீர் கொணர்ந்தேன். ஏழு வகை நீரையும் ஏழு கலங்களில் கொண்டு ஊற்றி நபிகளார் ஜுரம் தணிக்கலானார் ஆயிஷா.

எட்டாம் காலையில் திடுமென ஒரு மாற்றம். தாமே கதவைத் திறந்து வெளிவந்தனர் நபிகளார். தலையைச் சுற்றியிருந்தது ஒரு வெள்ளைத் துணி. அலீயும் அப்பாஸின் மகன் பத்லும் நபிகளாரைத் தாங்கி நின்றனர். பள்ளி வாசலினுள் நுழைந்த அண்ணலார் உஹதில் உயிரிழந்தோர்க் காகப் பிரார்த்தனை புரிந்தனர். என்றாலும் பாதவடிகள் வேதனையில் துவண்டன. வேறு திசை நோக்கினேன் நான். முன்னாள் அடிமையான நான்கூட அவரின் வதனத்தில் மரணத்தின் சாயல் கண்டேன். உயிர் கைப்பற்றும் வானவர் மூன்று தினங்களாக அவரிடம் வருவதும் போவதுமாயிருந்தார் எனச் சிலர் கூறுவதும் உண்மையாயிருக்கலாம்.

அன்றிரவு, எங்கும் காரிருள் கவிழ்ந்திருந்த வேளை, அண்ணலார் அடக்கஸ்தலம் சென்று புதைகுழிகள் மத்தியில் நின்றனர். சூழவிருந்த சூனியத்திருளுள் கூறினர்:

''ஓ புதைகுழியின் மக்களே! உங்கள் மீது சாந்தியுண்டாவதாக! வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் நிலைமையிலும் சிறந்தது உங்கள் நிலை. உங்களது விடியல் வேளைகள் உயிரோடிருப்போரின் விடியல் களிலும் சாந்தி மிக்கவை''

வீடு திரும்பியதும் ஆயிஷாவிடம் எவ்வளவு உள்ளதென வினவினர். எண்ணுவதற்கு அதிக நேரம் செல்லவில்லை. ஏழு திர்ஹம். ''இன்றே அதனை ஈந்துவிடுக! இது என் வசமிருக்க எப்படி நான் இறைவனைக் காண்பேன்?'' என்றனர் இறைவனின் தூதர்.

மீண்டும் நபிகளார் பள்ளிவாசலினுள் வந்தார்கள். இதுவே, நான் அவரைக் கண்ட இறுதிச் சந்தர்ப்பம், மிகவும் அற்புதமான முறையில், மரணத்தின் சாயல் நீங்கியவர்களாகத் தோன்றினர். முன்னர் நான் ஒருபோதும் கண்டிராத அளவு அழகு மிகுந்து விளங்கினர் அவர். தொழுகையின் மகிழ்வால் முகம் ஒளிர்ந்தது. மெல்லவே பேசினர். தவறேதும் தாம் செய்திருந்தால் மன்னிக்க வேண்டினர். இறைவனின் வாக்காய், ஒளிவிளக்காய், வழிகாட்டியாய் விளங்கும் குர்ஆனை நேசிக்கப் பணித்தனர். அவர் எழுந்து நிற்கத் துணை வேண்டியிருந்தது. குழுமியிருந்தோரைப் பார்த்துக் கூறினார்கள்: ''உங்களுக்கு முன் நான் செல்கிறேன்; நீங்கள் என்னைப் பின் தொடர்வீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.''

இனி நான் கூறுபவவை, நான் செவியுற்றவையே. மரண வேதனையின் மத்தியில் ஆயிஷாவின் கரங்களில் சாய்ந்திருந்தனர் நபிகளார். பல் துலக்கும் பச்சைமரக் குச்சியொன்று கொண்டு முன்வந்தார் ஒருவர். வேண்டிச் சைகை செய்தனர் நபிகளார். ஆயிஷா அதில் ஒன்றெடுத்துத் தன் வாயிலிட்டு மென்மை செய்து கொடுத்தார். நபிகளார் அது கொண்டு தம் பல் துலக்கினர். வலிமை குன்றியவர்களாக, இறைவனின் தூதர் இறுதி நாளில் ஏழைகளுடன் தம்மை எழுப்பப் பிரார்த்தித்தது கேட்டார் ஆயிஷா.

திடீரென இறைவனின் தூதர் தலையுயர்த்தி, அண்ணாந்து நோக்கியவர்களாய்க் கூறினார்கள்: ''கண்ணிய மிக்க தோழர்களுடன்...''

ஆயிஷாவின் அழுகுரல் கேட்டு நபிகளார் மறைந்ததை உணர்ந்தோம் நாங்கள்.

உள்ளே சென்றார் உமர். துக்கத்தால் நிதானமிழந்த அவரால், உறக்கத்திலிருக்கும் ஒருவரையே காண முடிந்தது. நபிகளார் மரணித்ததாக அவருக்குத் தெரியவில்லை. மிக்க சினத்தோடு, முஷ்டிகள் உயர்த்தி மரணம் குறித்துப் பேசுவார் எவர்க்கும் அச்சுறுத்தல்கள் செய்தவராய் வெளி வந்தார் அவர். எம்மில் பலர் அவரைப் பற்றி நிறுத்த முனைந்தோம். எம்மை உதறியெறிந்து முன் சென்ற உமர், சித்தம் கலங்கிய தம் நிலைக்குத் தர்க்கவாதம் கற்பிக்கலானார்: ''மூஸாவை நினைத்துக் கொள்ளுங்கள்! ஸினாய் மலையில் இறைவனைக் காணச் சென்றார் அவர். மூஸா இறந்து விட்டார் என்றே யூதர்கள் கூறினர். நடந்தது என்ன? நாற்பது நாட்களில் திரும்பி வந்தார் மூஸா. நாற்பதே நாட்களில், மூஸாவைப் போலவே திரும்பி வருவார் முஹம்மத்!'' பள்ளிவாசலின் மத்தியில் மயிர் சிலிர்த்து. இங்குமங்கும் திரும்பித் திரும்பி, யதார்த்தத்தை விஞ்சிய கவலை மீதூற, சந்திரனை நோக்கிக் கற்கள் எறியும் சித்தமிழந்த ஒருவனைப் போல நின்று... பாவம், பெருமகன் உமர்.

அபூபக்ர் உட்சென்று நபிகளார்தம் முகங் கண்டார். சந்தேகம் இல்லை. தன் இன்னுயிர்த் தோழர் முகத்தில் மெல்லவே முத்தம் ஒன்று இட்டுத் துணியால் முகம் மறைத்து வெளிவந்தார் அவர்.

உருவில் சிறுத்து, மென்மை மிகப்பெற்ற இம்மனிதர், பள்ளிச் சிறுவன் போலும் தலைமேல் கரம் உயர்த்தி அமைதி வேண்டியவராகப் பள்ளியினுள் வந்தார். என்றுமிலா ஆளுமை தொனித்தது அபூபக்ர் குரலில்: ''முஹம்மதை வணங்குபவர் யாரும் இங்கிருந்தால் முஹம்மத் இறந்துவிட்டார் என அவர் தெரிந்துகொள்ளட்டும்.'' அந்தப் பயங்கர உண்மை குழுமியிருந்தோர் இதயங்களில் ஆழப்பதிவதற்காகச் சற்றே தாமதித்துக் கூறினார்: ''ஆனால் இறைவனை வணங்குபவர்கள் நினைவில் கொள்ளட்டும் - அவன் என்றும் இருப்பவன்; மரணிப்பதில்லை.''

தரையினில் துவண்டார் உமர். அவர் கைகளுள் சங்கமமாகியது அவர் முகம். பாரிய அவர் உடல் முழுவதும் அழுகையில் குலுங்கியது.

பின் வந்த தொழுகை வேளைகளின்போது அழைப்பு விடுக்க என்னால் இயலவில்லை. என் கால்களால் என்னை உயரே கொண்டு செல்ல முடியவில்லை. அலீயும் அபூதரும் துணை செய்தனர். இருந்தும், ஆரம்ப சொற்களின் பின்னால் என் நிலை கலங்கினேன். என்னைத் தடுத்தது என் துயரம். கூரையின் உச்சியில் வார்த்தைகள் தேடினேன். முஹம்மத் எனும் பெயரை முழுமையாக என்னால் கூற முடிய வில்லை. தேம்பியும், திக்கியும், தோற்றும், மீண்டும் மீண்டும் நான்கோ ஐந்தோ முறைகள் தொடக்கத்திலிருந்து தொடங்கச் சென்றேன். என் மேல் இரக்கம் கொண்டவர்களாக என்னைக் கீழே இறக்கி விட்டனர் என் தோழர்கள்.

ஆயினும், தினம் ஐந்து வேளைகள் தொழுவதற்காக நானே அழைப்பதை என் தலையினுள் நான் கேட்கிறேன். எங்கோ தொலைவில், வேறு ஒரு நகரில், வேறொரு தினத்தில் வேறு மக்கள் மத்தியில் என்னை நானே செவிமடுக்கிறேன். சில வேளைகளில் என் மகன், ஏனைய சிறுவர்கள் போலவே விளையாடிக் களைத்து ஆழ்ந்துறங்கும் வேளை அவன் செவிகளுக்குள் நானே மெல்லக் கூறி வைக்கின்றேன்.

## வரலாற்று ஏடு – 8

நபிகளாரின் மறைவின் பின்னர் அபூபக்ர் கலீஃபாவாக நியமனம் பெற்றார். முழுமையாக்கப்பட்ட மார்க்கத்தையும், நிறுவப்பட்டிருந்த அரசையும் நிர்வகிப்பதே அவர் கடமையாக விளங்கியது.

அபூபக்ர் இஸ்லாமிய அரசை இரண்டு வருடங்கள் சீரிய மேன்மை யுடன் நிர்வகித்தார். அவரும் சுகவீனமுற்று மரணிக்க, கலீஃபாவாக வந்தவர் உமர். தன் தடி கொண்டே ஆண்டு வந்தார் அவர் என்பர். என்றாலும், பக்தியும் பணிவும் மிக்கவராயிருந்தவர் அவர். கேளிக்கைக் கிடங்குகள் என வர்ணிக்கப்பட்ட முன்னூறுக்கும் மேற்பட்ட மாளிகை களைக் கொண்ட அலெக்ஸாந்திரியா வெற்றிகொள்ளப்பட்ட செய்தி கொண்டு வரப்பட்டபோது உமர், தன் முன்னாள் அடிமையொருவருடன் மரத்தடியில் வீற்றிருந்தவராக ஈத்தம் பழங்களைப் பகிர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சரணடைந்த ஜெரூஸலம் நகரை ஏற்றுக்கொள்ளச் சென்ற உமர், நகரினுள் நுழையும்போது தன் ஒட்டகத்துக் கடிவாளத்தைப் பிடித்தவராக நடந்தே சென்றார். அவரது முதிய அடிமையின் சவாரி முறையின் போதுதான் அவர்கள் நகருள் நுழைவோராயினர்.

பிலால் இடைக்கிடை தோன்றி மறைகிறார். படையினருடன் சேர்ந்து கொள்ளவென வடக்கே ஸிரியா நோக்கிச் சென்ற அவர், ஜெரூஸலம் கைப்பற்றப்பட்ட வேளை பிரசன்னமாயிருந்தார். எனினும், அவர் எந்த ஒரு போரிலும் பங்கு பற்றியதாகத் தெரியவில்லை. துயரம் பிலாலை மௌனத்துக்குள்ளாக்கினாலும் கூட, பல வருட இடைவெளியுடன் வேறு இரு சந்தர்ப்பங்களில் அவர் தொழுகைக்கான அழைப்பு விடுத்துள்ளார். பொது மக்களதும், உமர்(ரழி) அவர்களதும் வேண்டு கோளின் பேரில் ஜெரூஸலத்தில் ஒரு முறை பாங்கு கூறினார். பின்னொரு சந்தர்ப்பத்தில் நபிகளாரது அடக்கத் தலத்தைத் தரிசிக்கவென மதீனா சென்ற வேளை நபிகளாரின் பேரர்கள் ஹஸன், ஹுஸைன் இருவரும் விடுத்த வேண்டுகோளை மறுக்க இயலாதவரானார் பிலால். அதிகாலை வேளையாக இருந்தும் வீதிகளிலெல்லாம் கண்ணீர் சிந்தியோராக மக்கள் நிரம்பியிருந்தனர்.

அத்துணை ஆதாரமில்லா சில குறிப்புகள் பிலாலை டமஸ்கஸின் கவர்னராகச் சித்திரிக்கின்றன. அவரது மறைவு நிகழ்ந்த காலம் பற்றியும் தெளிவான குறிப்புகள் இல்லை. பெரும்பாலும் கி.பி. 644, ஹிஜ்ரி 22இல் அவர் மரணித்திருக்கலாம்.

# நினைவுச் சுழலில்...

வாழ்வும், அதன் நினைவுகளும் - இவையே முதுகிழவன் ஒருவனின் வெற்றி!

என்னை யாரும் நினைவில் கொள்வராயின் அவர்கள் என் தோழர்கள் கொண்டே என்னை நினைக்கட்டும். என்னைக் குறித்து வினவுவோர்க்குக் கூறுங்கள்: ''பிலால் அண்ணலாரின் தோழன்''. ஏனென்றால், பூரணத்துவமான, மகத்துவமிகு காலத்தில் வாழ்ந்தோருள் நானும் ஒருவன். எமது ஒளிமிகு நாட்களை இனிமேல் எவரும் அறியமாட்டார். அந் நாட்களின் இனிய சான்றுகளை மட்டும் அனைவரும் பங்கிட்டனுபவிப்பர்.

நான் முதல்வன் என என்னை நீவிர் அளவிட வேண்டுவதில்லை. வெவ்வேறு தினங்களில், வெவ்வேறு வேளைகளில், என் அழைப்பு வெவ்வேறாய் ஒலித்திருக்கலாம்; கண்டனஞ் செய்வதாய்க் காற்று என் குரலை மீண்டும் என் மீதே எறிந்திருக்கலாம்; விடியற் காலையின் ஈரம் என் குரல் வளையை அடைத்திருக்கலாம்; அல்லது தொந்தரவாய் அமைந்திருக்கலாம் புறாக் கூட்டம். அனைத்தும் இறைவன் நியதிப்படி நிகழ்வனவே.

பெரு வான்வெளியிலும் இறைத்தூதர், பிலாலை 'சுவனத்து மனிதன்' எனக் குறித்தமை மட்டும் நினைவில் பதிந்திருக்கட்டும்.

எம்மில் சிலரே இன்னமும் இவ்வுலகில் இருக்கிறோம். அவர்களும் விரைவிலேயே சென்று விடுவர். இறப்பை நோக்கி விரைதல் முறையல்ல; ஆனால், அதனை எதிர்பார்த்திருத்தல் தகுமான ஒரு காரியமே.

'மரித்தோர் தம்மிலும் சிறப்புறவே வாழ்வோர் நாம்' எனக் கொள்தலே இன்னமும் இருப்பார் இயல்பு. என்றாலும், இறந்துவிட்டோர் இதனை ஏற்கின்றனரோ என வினாவெழுப்பிப் பார்ப்பதில்லை இவர்கள். அன்றைய இரவு, புதை குழிகளின் மத்தியிலிருந்து, இறந்துபட்டாரைப் பாக்கியவான்கள் என இறைவனின் தூதர் விளித்தமையின் கருத்துத் தான் என்ன?

என் நினைவில் பதிந்துள்ளது அந்த ஓர் இரவு. எங்கும் அடர்ந்த பெருங்குளிர். நிலம் உறைந்து இறுகியிருந்தது, புதைகுழி வாழ்வோர் பேச்சோ, அசைவோ அற்றிருந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் தனிக் குழிக்குள். அவர்கள் இறந்து போனவர்கள் தானோ? அல்லது மனிதன் என்ற ஈரத்தின் காய்ந்து போன எச்சங்களோ? ஆன்மாவைச் சுமந்து செல்லும் நதியே சரீரம். ஒவ்வொரு சரீரமும் தத்தம் தனியிறுதித்

தேட்டத்து ஓட்டத்தில் முழத்துக்கு முழம், சுனைக்குச் சுனை மாற்ற முற்றே செல்லும்.

இருந்தும், இறைவனின் தூதர் கருதியது என்னவென நான் அறிவேன் என்றே நினைக்கிறேன். புயல், இடி, மின்னலுடனான பெருமழைக்கு முன்னர் தோன்றும் இருள் சூழ்ந்த வேளை. உஹத் குன்றுகளின் மேலாக முகிற்கூட்டங்களின் திரட்சி. காலநிலை முன் உணரும் கோழிக் குலம் ஏற்கெனவே மறைவுதேடி மறைந்து கொண்டது. நாங்கள் பள்ளி வாசலில் அமர்ந்திருந்தோம். நபிகளார் கூறினார்கள்: ''மனிதர்கள் உறங்குகிறார்கள்; அவர்கள் இறப்பில் விழிப்பார்கள்.''

என் வாழ்வின் ஒவ்வொரு தினமும் - சவுக்கடி வேதனையால் நான் ஆறா வதையுற்ற அன்றைய தினம் கூட - எனக்கு நன்மைகளையே விளைத்துள்ளது.

சிறுவர்களுக்காக என் சிந்தை மகிழ்கின்றது. எம் எதிர்காலம் அவர்களே. எம் கடந்த காலங்கள்கூட அவர்கள் தானே! தன் மகன்மீது காட்டும் அக்கறையில் ஒரு தந்தை, தனக்குள் தானே, தன் தந்தையைக் கண்டு கொள்கிறார் அல்லவா? பெரியோர்தான் சிறியோரைப் பயிற்று விக்கின்றனர். ஆயினும், சிறியோர் தான் பெரியோரைச் சீர் செய்கின்றனர் என்பது வழிவழி வழங்கி வரும் பெரியதொரு மர்மம்.

என்னை நினைத்து, என் தோலை நினைத்து, என் ஆபிரிக்காவை நினைத்து நான் களிப்பெய்துகிறேன், என் பரிமாணம் அது.

இப்போது என் வாழ்க்கை என் கைத்தடி மீதுதான். நான் சுற்றும் இடங்கள் அருகிப் போய்விட்டன. இந்தக் கதவடியில் இருந்து பள்ளி வாசல். மீண்டும் வீடு. எனினும், இதுவரை நான் அடைந்திராப் பரந்த வெளி கிட்டியுள்ளது எனக்கு. நான் வாழ்வது, இறைத்தூதரது இனிய நினைவுகளில்.

சிலவேளை, இறையோனின் பாதையில் இறந்து பட்டோர் உலவும் பசுஞ் சோலைகளில் மீண்டும் நான் அபூதருடன் நடந்து திரியலாம். ''உலகில் தீயவை உடமைகளே; தன் தேவைக்கதிகமாக எவரும் எதையும் கொள்ளுதல் தகாது; அணிவதற்கு ஒன்று, தோய்க்க ஒன்று என இறைவனின் தூதர் இரண்டு அங்கிகளே கொண்டிருந்தனர்'' என்றெல்லாம் அபூதர் பேசுவதை மீண்டும் நான் கேட்கக் கூடும். தன் விழி சுடர்விட, எதிர்காலம் குறித்த அபூதர் கிளப்பும் தர்க்க வாதங் களைச் செவிமடுக்கக் கூடும். அவற்றை இறைவனின் தூதரும் கேட்டிருந்தார்கள். அகிலத்துக்கோர் அருட்கொடையாக இறைவன் அருளிய அவன் தூதர், மானிடர் உரைப்பதை கேட்பதில் ஒரு போதும் சளைத்ததில்லை.

இறைவனே! அபூதரை சுவனத்தில் எனக்கு உத்தரவாதியாய் இருக்கச் செய்வாயாக!

'அதுவரையில், இங்கே டமஸ்கஸில் வசித்திருப்போர் நோக்கி உள்ளூரச் சிரித்தவனாகப் பழம்பாணியில் சிறிது காலம் பேசிக் கொண் டிருப்பேன்.

புகழனைத்தும் இறைவனுக்கே!


# குறிப்புகள்

குறிப்புகள்


# எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | **ஜகாத்: கோட்பாடும் நடைமுறையும்**<br>எச்.ஐ. கைருல் பஷர், எம்.ஏ.எம். மன்ஸூர்,<br>ஏ.ஸீ. அகார் முஹம்மது, ஸீ. ஐயூப் அலி | **ரூ.90** |
| 2 | **ஹதீஸ்: முறைமையும் தொகுப்புகளும்**<br>டாக்டர் முஹம்மது முஸ்தபா அஸமி | **65** |
| 3 | **தல்ஹீதின் எதார்த்த நிலை**<br>டாக்டர் யூஸுஃப் அல்-கர்ளாவி | **35** |
| 4 | **இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்**<br>றவூப் ஸெய்ன் | **22** |
| 5 | **கருத்து வேறுபாடுகள்: இஸ்லாமிய சட்டத்துறையில் அதன் தோற்றத்துக்கான காரணங்கள்**<br>டாக்டர் முஹம்மது அபுல் பத்ஹ் பயானூனி | **22** |
| 6 | **மதமும் அறிவியலும்**<br>டாக்டர் எம்.ஏ.எம்.சுக்ரி | **16** |
| 7 | **பள்ளிவாசலில் பெண்கள்: பால்வேற்றுமை பற்றிய வரலாற்றுப் பார்வை**<br>நெவின் ரேடா | **14** |
| 8 | **இஸ்லாமிய பண்பாட்டு மத்திய நிலையங்கள்**<br>டாக்டர் எம்.ஏ.எம்.சுக்ரி | **14** |

உங்கள் தேவைக்கு, அஞ்சல் வழியில் பெற நூல் விலையை மட்டும் அனுப்புக
• கூரியரில் பெற நூல் விலையுடன் ரூ. 20 சேர்த்து அனுப்புக



பிலால், இறைத்தூதரின் நெருங்கிய தோழர். ஒடுக்குமுறையை அகற்றி நீதத்தை நிலைநாட்டிடும் இறைத்தூதரின் போராட்டம் மற்றும் வெற்றியின் அரிய தருணங்களை அடிமையாக இருந்து, விடுவிக்கப்பட்டு, இஸ்லாமிய வரலாற்றின் நாயகர்களுள் ஒருவராக உயர்ந்த பிலால் தன் குரலிலேயே கூறினால் எப்படி இருக்கும்...? ஹெச்.ஏ.எல். க்ரெய்க் இந்நூலினை அமைத்திருக்கும் விதம் வரலாறு வாசிப்பில் ஒரு புத்தனுபவம்.



ISBN 819029548 -

மெல்லினம்™